# ஓதுவார் மரபினர்

## - ஓர் ஆய்வு



பொல்லாப்பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி மற்றும் அபயகுலசேகரன்

61
02

அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடபழநி, சென்னை-600 026.

# ஓதுவார் மரபினர்

## – ஓர் ஆய்வு

வெளியிட்டோர்

அருள்மிகு

வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடபழநி, சென்னை-600 026.

முதல் பதிப்பு : 1998

© அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்
வடபழநி, சென்னை-600 026.

விலை : ரூ. 100

அச்சிட்டோர்
எஸ். விஸ்வநாதன் (பிரின்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சேத்துப்பட்டு, சென்னை-600 031.

# அணிந்துரை

தமிழ் மறையைத் தமிழ்ப் பண்ணுடன் ஓதி சைவந் தழைக்க தொண்டாற்றும் ஓதுவார்களுடைய பணி அளவிடற்கரியது. திருக்கோயில்களில் காலபூஜையின் இறுதியில் தீபாராதனைக்கு முன்னால் சுவாமிக்குச் செய்யப்படுகின்ற பணிவிடைகளில் ஒன்றாக திருமுறைப் பாடல்கள் இசையுடன் ஓதப்படுகின்றன. இந்தத் தெய்வத் திருமுறை பாடல்களை ஓதிவந்த காரணத்தால், ஓதுவார்கள்; என்று பெயரைப் பெற்று, ஓதுவார் என்ற மரபினரே தோன்றி விட்டனர்.

சிவபெருமான் மாணிக்கவாசகரை பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று அருளியது, எழுதச் சொன்னது மட்டுமில்லாது பாடல்களைப் பண்ணுடன் பாடுக என்று அருளியதும் ஆகும். பாடுவது இயற்பாவாக இருக்கலாம். இசைப்பாவாக இருக்கலாம். ஓதுவார்கள் திருமுறைகளை இசையுடன் பாடி இறைவனது அருளைப் பெறக் கருவியாக இருக்கின்றனர். அத்தகைய ஓதுவார்களுடைய திருமுறைப் பணியையும், அவர்களுடைய தற்போதைய நிலைமையையும் செல்வி ப. **ஸ்ரீதேவி** அவர்கள் இந்நூலில் தெளிவாக காட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட பெரிய தொண்டினைச் செய்து வரும் ஓதுவார்களை அடையாளங்கண்டு, ஓதுவார்களுடன் கலந்துரையாடி ஓதுவார் மரபினை இப்புத்தகத்தில் அழகாக வெளிக் கொணர்ந்துள்ளார். ஓதுவார்களுடைய இப்பணியினால் மக்களிடையே பக்தி உணர்வும், இசை உணர்வும் பரப்பப்படுவது இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

இந்த நூலை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் சென்னை அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயில் மூலம் வெளியிட முன்வந்த செல்வி ப. **ஸ்ரீதேவி** அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்களுடன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பயன்மிகு நூலை மெய்யன்பர்கள் அனைவரும் பயின்று பயன் பெற வேண்டுமெனக் கேட்டு எல்லோருக்கும் திருவருள் பாலிக்க இறையருளை வேண்டுகிறேன்.

*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை*
சென்னை–600 034.
*நாள்* : 30. 04. 1997.

அன்புள்ள
**க. சாவர்க்கர்**, இ. ஆ. ப.,
*ஆணையாளர்*

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| | புகைப்படங்களின் பட்டியல் | iv |
| | நன்றியுரை | v |
| | கோயில்களின் வரைபடம் | |
| | முன்னுரை | ix |
| இயல் 1 | ஓதுவார்—தோற்றமும் வளர்ச்சியும் | 1 |
| இயல் 2 | பண்களும் அவற்றின் முறைவகுப்பும் | 12 |
| இயல் 3 | சென்னை நகரில் அமைந்துள்ள சில சிவாலயங்களில் பணியாற்றி வரும் ஓதுவா மூர்த்திகளின் பங்கு | 19 |
| இயல் 4 | ஓதுவார் பாடல்களுக்கு வாத்தியக் கலைஞர்களின் துணை | 59 |
| இயல் 5 | இசையில் ஓதுவார்கள் – அப்பொழுதும் இப்பொழுதும் | 62 |
| | நிறைவுரை | |


## இணைப்புகள்


| | | |
|---|---|---|
| (i) | திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் கையாளப்பட்ட புதுமையான செய்யுட்கள் | 69 |
| (ii) & (iii) | திருவல்லம் மற்றும் அல்லூர்க் கல்வெட்டுக்கள் | 70 |
| (iv) | அந்துவநல்லூர்க் கல்வெட்டு | 74 |
| (v) | திருவாமாத்தூர்க் கல்வெட்டு | 75 |
| (vi) | திருவண்ணாமலைக் கல்வெட்டு | 76 |
| (vii) | தஞ்சைக் கல்வெட்டு | 79 |
| (viii & ix) | திருவீழிமிழலைக் கல்வெட்டும் அதன் நிழற்பட நகலும் | 86 |
| (x) | திருமலை நாயக்கரால் திருமுறை ஓதுவார்களுக்கு வழங்கப்பட்ட தாமிரப்பட்டயம் | 97 |
| (xi) | தேவாரப் பண்களின் அட்டவணை | 99 |
| (xii & xiii) | திருமுறைக்கண்ட புராணத்தில் இடம்பெறும் செய்யுளும் மூவரால் கையாளப்பட்ட கட்டளைகளும் | 100 |
| (xiv) | வினாப்பட்டியல் | 103 |
| (xv) | ஸ்வரக் குறிப்புகள் | 106 |
| துணை நூல்கள் | | 124 |

# புகைப்படங்களின் பட்டியல்

1. நால்வர்

   திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்.
2. பொல்லாப்பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி மற்றும் அயகுலசேகரன்.
3. இராஜராஜசோழன் தஞ்சையில் கட்டிய பெரியகோயில்.
4. தருமபுரம் ப. சுவாமிநாதன்.
5. காஞ்சீபுரம் ஆ. விநாயக முதலியார்.
6. அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்.
7. சு. நாகநாதன்.
8. பங்குனி உத்திரப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் ஓதுவார் கோஷ்டி.
9. ந. ஆறுமுக ஓதுவார்.
10. அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்.
11. சு. இராஜரத்தினம்.
12. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்.
13. அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயில்.
14. சாரங்கி.

# நன்றியுரை

இந்தத் தலைப்பை நான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபொழுது சற்று தயக்கம்தான். பலருடைய கவனத்தை இவ்வாய்வுத்தலைப்பு ஈர்த்ததும், இவ்வாய்வை மேற்கொண்டதற்காகப் பலரும் என்னைப் பாராட்டியதும் உண்மை எனினும் இப்பொருள் பற்றி எழுதி வெளிவந்துள்ள ஆய்வு மூலங்கள் மிகவும் குறைவு என்பதுதான் அத்தயக்கத்திற்குக் காரணம்.

திருக்கோயில்களில் பணிசெய்யும் ஓதுவார்கள், நாடறிந்த தெய்வீக இசைக் கலைஞர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள், துறவிகள், புலவர்கள் ஆகியோரிடம் நேர்காணல் மூலம் அறிந்த விரிவான செய்திகளே இவ்வாய்வுக்குப்பெரும் அடிப்படையாக அமைந்தன. நூலகங்களும் என் ஆய்வுக்கு உறுதுணையாய் இருந்தன.

சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறைப் பேராசிரியரும் என் ஆய்வின் வழிகாட்டியுமான டாக்டர். பிரமிளா அவர்களே ஒரு தொழில்முறை இசைக் கலைஞர்தாம். கர்நாடக இசை மற்றும் தமிழிசைக் கலைஞர்களின் மத்தியில் பிரபலமாக விளங்கும் அவரே நான் ஊக்கமுடன் இவ்வாய்வினை மேற்கொள்ள உற்சாகமூட்டினார். அவ்வப்போது அவர்கள் கூறிய ஆலோசனைகள் சரியான முறையில் இவ்வாய்வினை நான் செய்ய பெரிதும் உதவின. புகழ்பெற்ற அமெரிக்க இதழாசிரியர் வால்டர் லிப்மேன் கூறியுள்ளதைப் போல அவர்களின் பெயரைக் கூறிய மாத்திரமே பலர் தங்கள் வாயிற் கதவினைத் திறந்து என் ஆய்விற்கு வழிகாட்டினார்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இடைவிடாது உற்சாகம் ஊட்டி இவ்வாய்வு நிறைவு பெறுவதற்கு உதவிய இந்திய இசைத்துறையின் தலைவரும் பேராசிரியையுமான டாக்டர் எம்.பி. வேதவல்லி அவர்களுக்கும் பேராசிரியர் டாக்டர் என். இராமநாதன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைசிறந்த அறிஞரும் சேக்கிழார் ஆய்வு வல்லுநருமான பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் ஓதுவார் ஆய்வு பற்றிய இந்த ஆய்விற்குத் தகவல் கருவூலமாக விளங்கி உதவினார். தம்முடைய முதுமையையும், பார்வைக் குறைவையும் பொருட்படுத்தாமல் அவ்வப்போது என்னுடன் பெருமனத்தோடு கலந்துரையாடி ஆய்வில் தெளிவை உண்டாக்கி அரிய கருத்துக்களைத் தெரிவித்து உதவினார்கள். அவருக்கு நான் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை வானொலி நிலையத்தில் பணியாற்றித் தற்போது தமிழிசைச் சங்கத்தின் செயலாளராக விளங்கும் மீ.ப. சோமு அவர்கள் ஓதுவார் மரபினர் பற்றிய பல அரிய செய்திகளைக் கூறி உதவினார்கள்.

இசைப் பேரறிஞரும் கட்டுரையாளருமான மதுரையைச் சார்ந்த டாக்டர் கமலை தியாகராஜன் அவர்கள் என்பால் பரிவு கொண்டு, தேவார இசைக் கச்சேரிகளில் பிற்காலத்தில் யாழ் ஏன் பயன்படுத்தப்படவில்லை என்ற கருத்தை விளக்கினார்கள்.

உலகப் புகழ் பெற்று விளங்கும் தொல்லியல் அறிஞரும், கல்வெட்டாளருமான டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் பல அரிய குறிப்புகளை வழங்கியுதவினார்கள்.

அவரைப்போலவே தஞ்சை திரு. டி.என். இராமச்சந்திரன் அவர்களும், சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் பேராசிரியர் டாக்டர் கே.வி. இராமன் அவர்களும் தங்களுடைய மேலான ஆலோசனைகளை வழங்கியது மட்டுமன்றி இவ்வாய்வு தொடர்பான நூல்களையும் தந்து உதவினார்கள்.

தமிழிசை இயக்கத்தின் தலைமைப் புரவலராகவும் தொழில் முறைக் கலைஞராகவும் விளங்கும் டாக்டர் சேலம் ஜெயலட்சுமி அவர்கள் என் ஐயங்களுக்கான விளக்கங்களைக் கூறி உதவினார்கள். திரு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் நான் தொடர்பு கொள்ளத்தக்க பலருடைய முகவரிகளை எனக்குத் தந்து உதவினார்கள்.

தமிழ் ஆய்வுணர்வும், தமிழிசைப் பற்றும் மிக்கவரான திரு டி. சேஷகிரி அவர்கள் ஓதுவார்களின் ஒலிநாடாக்களை பெரிதும் பயன்படும் வண்ணம் தந்து உதவினார்கள்.

புகழ் பெற்று விளங்கிய தம் தந்தை நெல்லை சுந்தர ஓதுவா மூர்த்தி அவர்களைப் பற்றிய நினைவுகளை என்னோடு பகிர்ந்து கொண்ட டாக்டர் டி.எஸ்.செந்தில் ஆறுமுகம் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. தற்போது வாழும் தலைசிறந்த ஓதுவா மூர்த்திகள் காஞ்சி விநாயக முதலியாரும், சங்கரன் கோயில் திரு ஏ. திருஞானசம்பந்தம் அவர்களும், நெல்லை சுந்தர ஓதுவாரின் சீடர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய நூற்றாண்டு பிறந்தநாள் விழாவும் 1981இல் தமிழிசைச் சங்கத்தாரால் கொண்டாடப்பட்டது.

டாக்டர் எஸ்.ஏ.கே. துர்கா மற்றும் திரு. பி.எம். சுந்தரம் ஆகியோரும் எனக்கு மிகவும் உதவினார்கள். தமிழிசை வல்லுநர்களும் சகோதரர்களுமான பேராசிரியா வைத்தியலிங்கம் மற்றும் கோடி லிங்கம் ஆகியோர் தாமாகவே முன்வந்து என் ஆய்வின் வெற்றிக்கு உதவினார்கள். தமிழ்நாடு அரசின் தலைமைப் பொறியாளர் திரு. எஸ்.கே. பத்மநாபன் அவர்களுக்கும், திரு. எஸ். ஆட்சிலிங்கம் அவர்களுக்கும் என் நன்றி. ஆய்வு மூலங்களை நான் பெறப்பெரிதும் உதவி புரிந்த தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் திரு. இ. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றி. தமிழறிஞர் திருமதி எம்.பி. நிர்மலா இ.ஆ.ப. அவர்கள் ஆய்வுக்கான பல புத்தகங்களைக் கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்கள் ஆய்வுக்கு ஆதாரமான குறிப்புகளைத் திரட்டித் தந்ததோடு ஆலயங்களில் பணிபுரியும் ஓதுவார்களை நேர்காணவும் எனக்கு உதவி புரிந்தார்கள். குறிப்பாக அறநிலையத்துறை ஆணையாளர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.அ.ப., அவர்களுக்கும் உதவி ஆணையாளர் திரு. இராஜாராம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. எஸ். சாவர்க்கர், இ.ஆ.ப. அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

நான் தகவல்களைத் தொகுக்க உதவிய ஓதுவார்களுக்கு நான் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். குறிப்பாக பண்டைய நாளில் தேவாரம் பாடப்பெற்ற முறைக்கும், இன்று பாடப்படும் முறைக்குமுள்ள வேறுபாட்டை நான் அறிய உதவிய காஞ்சி திரு. விநாயக முதலியாருக்கும், குடந்தை திரு. வெ. லட்சுமணன் அவர்களுக்கும் என் நன்றி உரியது. தொண்டை மண்டல ஆதினகர்த்தர் மறைந்த ஸ்ரீ ஞான பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கும் என் நன்றி உரியது.

திருக்களர் மரபில் தோன்றி வாழுகின்ற மூத்த ஓதுவார் திரு சபாரத்தின தேசிகர் அவர்களுக்கு நான் குறிப்பிட்டு நன்றி கூறியாக வேண்டும். தேவாரம் பாடப் பயிற்சிபெற என்னை ஊக்கப்படுத்தியதும் அவரே.

எனக்குத் தேவாரம் பயிற்றுவித்த ஆசிரியர் திரு சு. நாகநாதன் அவர்களுக்கு என் பணிவார்ந்த வணக்கங்கள். தலைசிறந்த இசைவாணர் திரு தருமபுரம் சுவாமிநாதன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. தேவார வரலாற்றினைப் பொறுமையுடன் நினைவுகூர்ந்து, காலந்தோறும் தேவாரம் ஓதும் மரபில் ஏற்பட்ட மாறுதல் நிலைகளை அவர்கள் எனக்குக்கூறி உதவினார்கள்.

தேவாரப் பள்ளிகளில் பணியாற்றி அனுபவம் மிக்க நாடறியும் சிதம்பரம் டி சோமசுந்தர தேசிகருக்கும், வேதாரண்யம் முத்துக்குமார சுவாமி தேசிகருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை குருசாமி தேசிகர் அவர்கள் முன்னோர்களின் ஓதுவார் சேவைக்காக திருமலை நாயக்கர் வழங்கிய தாமிரப் பட்டயத்தைப் படி செய்துகொள்ள அனுமதி வழங்கிய தேசிகர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கீழ்க்காணும் ஓதுவார்களில் பன்னிருவரை நானே நேர்முகப் பேட்டி கண்டேன். மற்ற மூவரும் நான் அனுப்பி வைத்த வினாப்பட்டியலுக்குப் பரிவுடன் பதில் எழுதி அனுப்பினார்கள்.

| வ.எண். | ஓதுவாரின் பெயர் | ஆலயம் |
|---|---|---|
| 1. | திரு லால்குடி எம். சுவாமிநாதன் | அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் |
| 2. | திரு ந. ஆறுமுக ஓதுவார் | அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில் |
| 3. | திரு சா. சாமிதண்டபாணி | அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில் |
| 4. | திரு சி. வரத ஓதுவார் | அருள்மிகு கங்காதரேசுவரர் திருக்கோயில் |
| 5. | திரு து. சண்முக தேசிகர் | அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் |
| 6. | திரு சி. கபாலி ஓதுவார் | அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில் |
| 7. | திரு இரா. பாலசுந்தரம் | அருள்மிகு கச்சாலீசுவரர் திருக்கோயில் |
| 8. | திரு கோ. இரத்தினசபாபதி ஓதுவார் | அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில் |
| 9. | திரு த. அருணாசல தேசிகர் | அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் மற்றும் சுந்தரேசுவரர் திருக்கோயில் |
| 10. | திரு இரா. விசுவநாத ஓதுவார் | அருள்மிகு சிவசுப்பிரமண்ய சுவாமி திருக்கோயில் |
| 11. | திரு மா. பாலசுப்பிரமணியம் | அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில் |

| | | |
|---|---|---|
| 12. | திரு சு. இராஜரத்தினம் | அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் |
| 13. | திரு. டி.எஸ். சுந்தரமூர்த்தி ஓதுவார் | அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் |
| 14. | திரு. டி.என். பாலசந்திரன் | அருள்மிகுதிருவல்லீசுவரர் திருக்கோயில் |
| 15. | திரு. ஏ. சாம்பசிவம் | அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயில் |

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்தியத் தொல்லாய்வுத் துறைகளுக்கு என் நன்றி. மாநில தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் நடனகாசிநாதன் மற்றும் அத்துறையில் பணியாற்றும் டாக்டர் மார்க்சீய காந்தி மற்றும் தொல்பொருள் ஆய்வுத்துறை நூலகருக்கும் என் நன்றி.

மறைமலை அடிகள் நூலகம், சென்னைப் பல்கலைக் கழக நூலகம், கன்னிமாரா நூலகம், டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம், தமிழ்நாடு சட்டமன்ற நூலகம் மற்றும் அண்ணா மேலாண்மை நிலைய நூலகம் ஆகியவை என் ஆய்வுக்கு நூல்கள் தந்து உதவியமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவாகியிருந்த ஓதுவார்களின் நேர்முகப் பேட்டியை நான் போட்டுக் கேட்பதற்கு உதவியாக இருந்த "சம்பிரதாயா"-வுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலே நான் கூறியுள்ள தூய உள்ளங்கள் பரிவுடனும், நிலைத்த மனத்துடனும் எனக்கு உறுதுணை செய்திருக்காவிடில் என் முயற்சி வெற்றி பெற்றிருக்க இயலாது. ஓதுவார்களின் ஒப்பற்ற தமிழிசைப் பணியின் ஒரு சிறுபங்கினை இவ்வாய்வு பிரதிபலித்துக் காட்டுவதாக உணர்வீர்களானால், எனக்கு மாபெரும் சிறப்புக்கிட்டியதாக எண்ணி மகிழ்ந்திடுவேன்.

# சென்னை மாநகரம்
**1 : 63360**



# முன்னுரை

சிவாலயங்களில் தேவாரம் தொன்றுதொட்டு ஓதப்பட்டு வருகின்றது இருப்பினும் தேவாரம் ஓதும் இம்மரபும், ஓதுவா மூர்த்திகளும் சமுதாயத்தின் போற்றுதலுக்கும், கவனிப்பிற்கும் உரியவர்களாக இல்லை. இதைப் பற்றிச் சிந்திப்பதற்கே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதுகாறும் இப்பொருள் பற்றிய ஆய்வு முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால் இவ்வாய்வு ஒரு முன்னோடியாக அமையும். இவ்வாய்வு நோக்கிற்காக, சில தேவாரப் பாடல்களைப் பண்முறைப்படி பாட, தேர்ச்சி பெற்ற ஒரு ஓதுவா மூர்த்திகளிடம் நான் கற்றுக்கொண்டேன்.

இந்தத் தெய்வீக இசையைப் பயிலும் மாணவியான போது இதன் தொடக்கம், தோற்றம், வளர்ச்சி பற்றி அறியவும் பேரவா என்னுள் வளர்ந்தது.

புத்தகமும், சமணமும் மறையத் தொடங்கிய ஒருகால கட்டத்தில் தமிழ்நாட்டின் சமூகப் பண்பாடு வரலாறு பற்றிக் கண்டறிய இவ்வாய்வு பெரிதும் பயன் படுவதொன்றாகும். தமிழ் வேதம் என வழங்கப்படும் தேவாரமே சிவாலயங்களின் மறுமலர்ச்சிக்கும் இந்து சமயத்தின் மறுமலர்ச்சிக்கும் பெரிதும் காரணம் எனலாம்.

“இந்திய இசை வரலாற்றில் தேவார இசையே நாம் பெற்றிருக்கும் முதல் இசையாகும்”*1

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சமய குரவர் மூவரின் இசைத் தொகுப்பே தேவாரம் ஆகும்.

நம் தமிழ் மொழி, இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவினை உடையது. தொல்காப்பியம் நாம் பெற்றிருக்கும் மிகப் பழமையான இலக்கணம் ஆகும்.

தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இசையின் வளர்ச்சியை நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. தொல்காப்பியம் பரிபாடல் பற்றிக் குறிப்பிடுகிறது. பரிபாடல் என்பது இசைப் பாடலே ஆகும். எண்ணிறந்த இசைப் பாடல்களை நாம் இழக்க நேர்ந்துவிட்டது. தொல்காப்பியக் காலத்திற்கு முன்பே பரிபாடல்கள் வழக்கில் இருந்துள்ளன.

இசை பற்றியும், இசைக் கருவிகள் பற்றியதுமான எண்ணிறந்த குறிப்புகளைச் சங்க காலத்தில் காண்கிறோம். சங்க காலம் என்பது கி.மு. 600 முதல் கி.பி. 300 வரையிலுள்ள காலமாகும். *2

சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, உதயணன் காதை, பிங்கல நிகண்டு, கல்லாடம் ஆகியவற்றில் இசை பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பண் விவரங்களும் குறிப்பிடப் பெற்றுள்ளன. தேவாரப் பாடல்களுக்கு மிக முற்பட்ட காலத்திலேயே

*1. Prof. P. Sambamurthy “History of Indian Music”, 1982, Madras p.72.
*2. M. Arunachalam “Music Tradition of Tamil Nadu”, 1989, Madras p. 22.

சிலப்பதிகாரத்தில் பண் விவரங்கள் விரிவாகக் குறிப்பிடப்பெற்றுள்ளன. தொல்காப்பியத்தில் பண்ணின் வகைப்பாடுகளை "யாழின் பகுதி" என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

ஆதலால் தற்போது வழங்கிவரும் பண்கள் சிலப்பதிகார காலத்திலேயே வழங்கியவைதான். சிலப்பதிகாரத்தில் **103** பண்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் **30**க்கும் குறைவான பண்களே தேவாரத்தில் பயின்று வந்துள்ளன.

இப்போதுள்ள இசை, தேவாரப் பண்ணிலிருந்தே தொடக்கம் பெற்றுள்ளது. பண்ணோடும், தாளத்தோடும் கூடிய முதல் தேவாரப் பாடல், நாயன்மார்களால்தான் இயற்றப்பெற்றுள்ளது.

சைவ சமய வளர்ச்சிக்குத் தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை ஆகிய மூன்று மடாலயங்களும் பெருந்தொண்டினைப் புரிந்துள்ளன. தருமபுரம் மடாலயத்திலுள்ள தேவாரப் பாடசாலை **1942**ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப் பெற்றது. மாணவர்கள் ஐந்து ஆண்டுக் காலப் பயிற்சிக்குப் பிறகு "தேவார இசைமணி" பட்டம் பெறுகிறார்கள். மாணவர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. தருமபுர மடாலயத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள 27 ஆலயங்களில் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆதீன பிரச்சார நிலையம் ஒன்று சென்னையில் தியாகராய நகர் உஸ்மான் சாலையில் அமைந்துள்ளது. இங்கும் தேவார வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.*1

திருப்பனந்தாள் மடமும் பல்வேறு திருக்கோயில்களில் திருமுறைகளைப் பரப்பி வருவதோடு, அந்தந்த ஆலய ஓதுவார்களுக்கு மானியமும் வழங்கி வருகின்றது.

திருவாவடுதுறை மடமும் தமிழும், சமயமும் பற்றிய எண்ணிறந்த நூல்களை வெளியிட்டுள்ளது.

டாக்டர் சீதா அவர்களின் கருத்தின்படி தஞ்சையே ஓதுவார் குடும்பங்களின் தலைமையிடம் ஆகும்.*2

இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தே வாழ்ந்திருந்த ஓதுவார்களில் தலைசிறந்த சிலர் திரு. தண்டபாணி தேசிகர், நெல்லை சுந்தர ஓதுவா மூர்த்தி, வேலாயுத ஓதுவார், திருக்களர் சுந்தரேசுவரர் திரு எஸ். முத்தையா ஓதுவார் போன்றவர் ஆவர்.

தம்முடைய இசை, மொழி பக்தியால் சைவ சமயத்தை மீண்டும் நிலை நிறுத்திய பெருமக்கள் ஓதுவா மூர்த்திகளே ஆவர்.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் தமிழ் இசைச் சங்கத்தில் பிரபலமான ஓதுவா மூர்த்திகள் பலரும் கூடி தேவாரம் பாடப்படும் முறை பற்றி ஆய்வுகளும், விவாதங்களும் நிகழ்த்தி வருகிறார்கள்.

*1. Mutts and Temples, 1981, Dharmaram Adinam p.67.
*2. Dr. S. Seetha, "Tanjore as a Seat of Music" 1981, Madras p. 242.

அவர்களின் பண் ஆராய்ச்சி விவாதங்கள் மலர்களாகத் தொகுக்கப்பட்டு, அவைபற்றிய பழைய நடைமுறைக்கும், நிகழ்கால நடைமுறைக்கும் தொகுப்பாக விளங்கிப் பயன்பட்டு வருகின்றன.

மூவர் அருளிச்செய்த தெய்வப்பாடல்களைத் 'தேவாரம்' எனத் தொகுத்துச் சுட்டும் வழக்கம், இரட்டைப் புலவர்களின் "ஏகாம்பரநாதர் உலா" தோன்றுவதற்கு முன்பே ஏற்பட்டது என்பதை அந்நூலிலிருந்து அறிகிறோம்.

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்"

வெள்ளைவாரணர் கருத்தின்படி மூவர் பாடல் தொகுப்பும் "திருப்பாட்டு" ஆகும். 'தேவாரஞ் செய்த' என்பது பாடுவதைத் தொழிலாகக் கொண்டவர்களின் பிரிவினைக் குறிக்கும்.

மூவரின் பாடல்களையும் ஒருங்கு சுட்டும் தேவாரம் எனும் சொல் முதன்முதலில் சைவ எல்லப்ப நாவலர் அவர்களால் கையாளப்பட்டு உள்ளது. "திருவருணைக் கலம்பகம்" என்ற நூலில் அவர் சைவ சமயக் குரவர் நால்வரையும் சுட்டிக் கூறியுள்ளார்.

"வாய்மை வைத்த சீர்திருத்த தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே"

இரட்டைப் புலவர்களின் திருப்பாட்டும் சைவ எல்லப்ப நாவலரின் தேவாரமும் தேவாரத்தைக் குறிப்பதுவே என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். *1

தேவாரம் எனும் சொல்லிற்குப் பல விளக்கங்கள் உள்ளன. 'தே', 'ஆரம்' - இறைவனுக்கு மாலை எனப் பொருள்படும். 'தே', 'வாரம்' - இறைவனுடன் கூடல், நேசம் எனப் பொருள்படும்.

தமிழறிஞர் கா.சு.பிள்ளை அவர்கள் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களிடம் தேவாரம் பற்றிய விளக்கத்தைக் கூறி அவருடைய தலைசிறந்த படைப்பான கீதாஞ்சலிக்கும் இவ்வாறே பெயர் வைக்கக் கூறினார் என்பது தெரிகிறது. *2

சிலப்பதிகாரமும், தொல்காப்பியமும் வாரப்பாடலைக் குறிப்பிடுகின்றன. வாரப்பாடல் என்பது முதல் மற்றும் இரண்டாம் நிலை வேதத்தில் பாடப்படும் பாடல் ஆகும்.

நான்கு விதமான பாடல்கள் உள்ளன. அவையாவன: முதல் நடை, வார நடை, கூடை நடை மற்றும் திரள் நடை.

"முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புணரா வாரம் போன்றே"

*1. க. வெள்ளைவாரணன், "பன்னிரு திருமுறை வரலாறு",
1972, அண்ணாமலை நகர் பக். 35.
*2. டாக்டர் கமலை தியாகராஜனுடன் நேர்காணல், 29.9.94, சென்னை.

எனவரும் தொல்காப்பியம், (மரபியல், 108) வாரப்பாடலின் பழமையைக் கூறுகிறது. *1

தேவாரம் வழிபாட்டில் வழங்கிவந்ததைச் சோழர் கல்வெட்டுகளிலிருந்துதான் அறிகிறோம். 11 ஆம் நூற்றாண்டிற்கு முன் வழிபாட்டில் தேவாரம் பயன்படுத்தப்பட்டதற்குச் சான்று இல்லை. *2 மலையாள மொழியில் 'தேவாரம்' எனும்சொல் இறை வழிபாடு என்ற பொருளில் இன்றும் வழங்கி வருகிறது. *3

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் தேவாரப் பாக்கள் புனைந்தோர் ஆவர். முதல் இருவரும் கி.பி.7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்கள், சுந்தரர் 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர், சம்பந்தர் கௌண்டின்ய பிராம்மணர், அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் சைவ வேளாளர்; சுந்தரர் சிவாச்சாரியார் ஆவார்.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள், பெரிய புராணம் ஆகிய சைவசமய பக்தி இலக்கியங்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகள் ஆகும். அவற்றுள் முதல் ஏழு திருமுறைகளாக தேவாரமே அமைந்துள்ளது,

முதல், இரண்டு, மூன்றாவது திருமுறைகள் திருஞானசம்பந்தரின் பாடல்கள்., நான்கு, ஐந்து, ஆறாவது திருமுறைகள் திருநாவுக்கரசரின் பாடல்கள், ஏழாவது திருமுறை சுந்தரர் பாடல்கள். முதல் ஏழு திருமுறைகளான தேவாரத்தைத் தமிழ் மறை, (அடங்கன் முறை) எனலாம்.*4

மூவரின் வாழ்க்கைச் சுருக்கம் பற்றி இனிக்காணலாம்.

*1. வீ.பா.கா. சுந்தரம், "பழந்தமிழ் இலக்கியத்தில் இசை இயல்", 1986, சென்னை. பக்கம் 10-11.

*2. க. வெள்ளைவாரணன், "பன்னிருதிருமுறை வரலாறு", 1972, அண்ணாமலை நகர், சென்னை பக்கம்.37.

*3. டாக்டர் எஸ்.வி. சுப்ரமணியம், "முதல் மூன்று திருமுறைகள்" "தெய்வத்தமிழ்" (ப. 975) சென்னை, பக்கம் 5.

*4. Indira Viswanathan Peterson, "Poems to Siva" - (1991), Page.16. Delhi.

நால்வர்



திருஞானசம்பந்தர்



திருநாவுக்கரசர்



சுந்தரர்



மாணிக்கவாசகர்

# திருஞான சம்பந்தர்

திருஞான சம்பந்தர் சீர்காழித்திருத்தலத்தில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் மகவாகத் திருவவதாரம் புரிந்தவர் ஆவார். இவரே தேவார மூவருள் இளைஞரும், தம் மிக இளய வயதிலேயே தேவாரப் பாக்களைப் புனைந்தவரும் ஆவார். தம்முடைய மூன்றாம் அகவையிலிருந்தே இவர் பாக்கள் புனைய ஆரம்பித்துள்ளார்.

சிவபாத இருதயர் சைவ சமயத்தைத் தழைக்கச் செய்ய ஒரு மகவு வேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்தித்துக் கொள்ள, இறைவன் திருவருளால் திருஞான சம்பந்தர் தோன்றினார் என்று சேக்கிழார் கூறுகிறார். ஆலயத் திருக்குளத்தில் நீராடச் சென்ற தம் தந்தையாருடன் குழந்தையும் உடன் சென்றது. அகமருஷண மந்திரம் செபித்துத் தந்தையார் நீருள் மூழ்கியிருக்க, தந்தையைக் காணாத குழந்தை “அம்மையே அப்பா” என்று அழுதது. உடனே சிவபெருமான் காளை வாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றினார். உமாதேவியார் தம் திருமுலைப்பாலை ஒரு பொற்கிண்ணத்தில் சுரந்து சம்பந்தருக்கு ஊட்டினார். ஞானப்பால் அருந்திய சம்பந்தர் திருஞானசம்பந்தர் ஆனார்.

நீராடிக் கரைக்குத் திரும்பிய சிவபாத இருதயர் குழந்தையின் வாயில் பால் வழிவதைக் கண்டு கோபித்து “பால் ஊட்டியவரைக் காட்டு” எனக் கடிந்துகொண்டார். ஞானப் பெருக்கு ஊற்றெடுக்க உடனே குழந்தை சம்பந்தர், நட்டபாடை பண்ணிலே “தோடுடைய செவியன்” என்ற தம்முதற்பாடலைப் பாடினார்.

“தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே”

**பாடலின் விளக்கம் :**

“அவர், பெண்கள் அணியும் தோட்டினை ஒரு காதில் அணிந்துள்ளார்.
காளை வாகனத்தேறியுள்ளார்.
வெண்ணிற, தூய பிறைநிலவைச் சடையிற் தரித்துக் கொண்டுள்ளார்.
இடுகாட்டு வெண்ணீற்றைத் தம் உடலெங்கும் பூசிக் கொண்டுள்ளார்.
அவர் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட கள்வரும் ஆவார்.
தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவர் பணிவு கொண்டு பக்தி செய்து போற்ற, அவருக்கு அருள்புரிந்து அழகிய பிரம்ம புரத்தில் வீற்றிருக்கும் இறைவரே ஆவர்.”*1

கைகளில் தாளமிட்டுப் பாடும் சம்பந்தருக்குக் கைவலிக்குமே எனக்கருதி, சிவபெருமானார் திருக்கோலக்கா திருத்தலத்தில் ஒரு ஜோடி தங்கத் தாளங்களைத் தந்தருளினார். தக்கராகப் பண்ணில் சம்பந்தர் பாடிய பாடல் பின்வருமாறு:

*1. Indira Viswanatha Peterson, “Poems to Siva”, 1991, Delhi, p.270-271.

"மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவமென்கொலோ"

திருப்பாச்சிலாச்சிரமத்தில் திருஞானசம்பந்தர் முயலகன் நோயால் வருத்தமுற்ற ஒரு மங்கையைக் குணப்படுத்தினார். தக்கராகப் பண்ணில் அவர் அப்பொழுது பாடிய பாடல் பின்வருமாறு:

"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே."

குளிர்ச்சுரத்தால் நடுக்குற்ற சிவனடியார்களைத் திருஞானசம்பந்தர் திருச்செங்கோட்டுத் திருத்தலத்தில் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் ஒரு பதிகம் பாடிக் குணப்படுத்தினார்.

"அவ்வினைக்கிவ்வினையா மென்று சொல்லுமஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம்பிரான்கழல் போற்றதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்".

மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளுக்கிணங்கத் திருஞானசம்பந்தர் பாண்டியர் தலைநகரை அடைந்தபோது பலவித இன்னல்களுக்கு ஆட்படுத்தப்பட்டார். பாண்டிய மன்னன் வெப்பு நோயால் துன்பமுற, சமணத் துறவியர் ஒருவராலும் அவனைக் குணப்படுத்த இயலவில்லை. திருஞானசம்பந்தர் காந்தாரப் பண்ணில் பதிகம் பாடித் திருநீறிட, மன்னன் வெப்பு நோயிலிருந்து குணம் பெற்றான்.

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திரு ஆலவாயன் திருநீறே".

தாம் பயணம் செய்த வழியெங்கும் உடல் நலமற்றவரைக் குணப்படுத்தியும், இறந்தவரை மீள உயிர்ப்பித்தும் திருஞானசம்பந்தர் பல அற்புதங்களைச் செய்தார்.

திருஞான சம்பந்தர் பதினாறு ஆண்டுகளே வாழ்ந்தார். தம் வாழ் நாளில் அவர் **16,000** பாடல்களைப் பாடினார். திருமுறைகண்ட புராணத்தின் கீழ்வரும் பாடல் இதை உறுதிப்படுத்துகிறது.

"சேடர்மலி காழிநகர் வேந்தர் தாமும்
தேவர்புகழ் திருத்தோணிச் சிவனார் பங்கில்
பீடுடைய உமைமுலைப்பா லருளாம லுண்டு
பிஞ்ஞகனைச் சினவிடைமேல் பெருகக் கண்டு
"தோடுடைய செவியன்" முதல் "கல்லூ" ரென்னும்
தொடை முடிவாம் பரசமயத் தொகைகள் மாளப்
பாடினார் பதிகங்கள் பாவி லொன்றாம்
பதினாறாயிர முளதாப் பகரு மன்றே".*1

"பாவில் ஒன்றாம் பதினாறாயிரம் உளதாப் பகரும் அன்றே" எனவரும் பாடல் வரியால் பதினாறாயிரம் என்பது பதிகத்தைக் குறிக்காது, பாடல்களைக் குறிப்பதே என்பதைத் தெளிந்து கொள்ளலாம். ஆகவே திருஞான சம்பந்தர் பாடியது 1600 பதிகங்களாகும். ஒவ்வொரு பதிகமும் பத்துப் பாடல்கள் கொண்டு விளங்கும்.

சம்பந்தர் பாடல்களில் அமைந்து விளங்கம் சில செய்யுட்கள் புதுமையாவன: மொழிமாற்று, ஏகபாதம், திருவெழுகூற்றரிக்கை, மாலை மாற்று, சக்கரமாற்று, ஈரடிமேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு, திருமுக்கால், யமகம், திருவிருக்குக்குறள் போன்றவையாகும். அவற்றில் சிலவற்றின் விளக்கம் இங்குக் காண்போம்.

### 1. மாலைமாற்று:

ஒரு மாலைக்கு அமைந்த இருதலைப்புகளில் எதனை முதலாகக் கொண்டு நோக்கினும், அம்மாலை ஒருதன்மை உடையதாய்த் தோன்றுகின்றாற்போல, ஒரு பாடலை முதலிலிருந்து நோக்கினாலும், முடிவிலிருந்து நோக்கினாலும் அதே பாடலாக அமையும்படி எழுத்துக்களை நிரலே அமைத்துப் புத்தமைப்புடன் பாடுவது மாலை மாற்று ஆகும். இம்மாலைமாற்று கௌசிகப் பண்ணில் அமைந்தது.

"யாமாமா நீ யாமாமா யாழீ காமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா"

### 2. ஈரடிமேல் வைப்பு:

காந்தாரப் பஞ்சமப் பண்ணில் நான்கடி வருமாறு பாடப்பெறும். முதல் ஈரடிகள் ஓரமைப்புடனும், அடுத்த ஈரடிகள் மற்றோர் அமைப்புடனும் பாடப்பெறும்.

"தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்கமெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே"

### 3. திருவிருக்குக்குறள்:

இவ்வகை யாப்பில் பாடப்பெறும் பாடல் இருவரிகளைக் கொண்டு விளங்கும்.

*1. திருமுறைகண்ட புராணம், செய்யுள் - 14.

குறிஞ்சிப் பண்ணில் பாடப்பெறுவதாகும்.

"நீல மாமிடற் றால வாயிலான்
பாலதாயினார் ஞாலம் ஆள் வரே"

மற்றும் செய்யுள் இன்பம் அமையப் பாடப்பெற்ற சம்பந்தரின் திருப்பதிகங்கள், அவற்றில் அமைந்து விளங்கும் பண்கள், தாளம், அவைபாடப்பெற்ற தல விவரங்கள், திருமுறை எண்கள் ஆகியவை இணைப்பில் தரப்பட்டுள்ளன.*1

சம்பந்தரின் பாடல்கள் "திருக்கடைக் காப்பு" என வழங்கப் பெறுகின்றன. *2

## திருநாவுக்கரசர்

மருள் நீக்கியார் என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசர் திருவாமூரில் புகழனாருக்கும் மதினியாருக்கும் மகவாகத் திருவவதாரம் செய்தவர் ஆவார். இளமையிலேயே பெற்றோரை இழந்து, தம்முடைய சகோதரியாரால் வளர்க்கப்பெற்றார். மருள் நீக்கியார் சமணரானபோது அவருக்குத் "தருமசேனர்" என்ற பெயர் உண்டானது. தம்பி சைவ சமயத்திற்குத் திரும்பவேண்டுமென அவருடைய சகோதரியார் இறைவரிடம் விண்ணப்பித்துக் கொண்டார். இதற்கிடையில் கொடிய சூலைநோய் மருள்நீக்கியாரை நலிவுறுத்த அவர் சகோதரியார் அந்நோயைக் குணப்படுத்தினார். தம் தவறினை உணர்ந்து திருந்தியவராய், திருநாவுக்கரசர் கொல்லிப் பண்ணில் முதற்பாடலைப் பாடினார்.

"கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றா யடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன திகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே".

**பாடலின் விளக்கம் :**

"நீர் எமவாதனை தரவல்ல நோயை நீக்கவில்லை. நான் என்ன தீவினைகள் செய்தேன் என்பதும் எனக்குத் தெரியவில்லை.
காளை வாகனரே! இரவும் பகலும் உம் திருவடிகளையே பற்றியிருப்பேன்.
என் வயிற்றினுள் வலிகொண்டு குடல்கள் சுழன்று சுழன்று என்னை வருத்துகின்றன.
நோயின் வருத்தம் இனியும் நான் தாளேன். திருவதிகைக் கெடில வீரட்டானத்துள் கோயிற் கொண்டுள்ள இறைவா அருளும்."*3

*1. இணைப்பு -*1.*
*2. M.A. Durai Rangaswamy, "The Religion and Philosophy of Tevaram", 1990, Madras, p.31.
*3. Indira Viswanatha Peterson, "Poems to Siva", (1991), Delhi, P. 283-284

சமணத்துறவிகள் அப்பரைப் பற்பல கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள். நீற்றறையில் ஒருவார காலம் சிறைப்படுத்தினார்கள். நஞ்சூட்டினார்கள், யானையின் காலில் இடறச் செய்து, கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சினார்கள். இவ்வாறான அனைத்துச் சோதனைகளையும் வென்று, ஒரு துன்பமும் இன்றி மீட்சி பெற்றார் நாவுக்கரசர்.

நீற்றறையில் இட்டபோது திருநாவுக்கரசர் காந்தாரப் பண்ணில் பதிகம் பாடினார்.

"சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை".

திங்களூரில் திருநாவுக்கரசர் தம் அன்பர் அப்பூதி அடிகளாரின் மாண்ட மகனை உயிர்ப்பித்தார். இந்தளப் பண்ணில் நாவுக்கரசர் பாடிய பாடல் பின்வருமாறு:

"ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வளர
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே".

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் சம காலத்தவர் ஆவார். இளையவரான சம்பந்தர், மூத்தவரான திருநாவுக்கரசரை "அப்பர்" என அழைத்தார். அப்பர் பாடியவை திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை மற்றும் திருத்தாண்டகம் ஆகும்.

பாடல் அடிகள் நான்கினைக் கொண்டதாய், அடிதோறும் அறுசீர்கள் பயிலப் பாடப்படுவது திருநேரிசையாகும். நவரோசு ராகத்திற்குரியதான கொல்லிப் பண்ணில் திருநேரிசை மரபுவழி பாடப்பட்டு வருகின்றது.*1

"காடுடைச் சுடலை நீற்றர்
கையில்வெண் டலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப்
பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடு
சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி
இடைமரு திடங்கொண்டாரே".

பாடல் அடிகள் நான்கினைக் கொண்டதாய், அடிதோறும் நாற்சீர்கள் பயின்று வரப் பாடப்படுவது திருக்குறுந்தொகையாகும். எடுத்துக்காட்டுப் பாடல் பின்வருமாறு:

*1. "திருமுறைகண்ட புராணம்", செய்யுள் - 15.

"அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோ இப் பிறவியே".

திருநாவுக்கரசரால் 49,000 பாடல்கள் பாடப்பெற்றன என்பதைக் கீழ்வரும் பாடல் உறுதிப்படுத்துகிறது.

"திருநாவுக் கரையரெனுஞ் செம்மை யாளர்
தீயமணர் சிறைநீங்க வதிகை மேவும்
குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச் சூலை
கொடுங்கூற்றா யினவென்ன வெடுத்துக் கோதி
லொரு மானைத் தரிக்குமொரு வரையுங் காறு
மொருநாற்பத் தொன்பதினாயிரமதாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்
பிஞ்ஞகனா ரடியிணைகள் பெற்றுளாரே".

உமாபதி சிவாச்சாரியார் அப்பர் பாடியருளியவை 4,900 பதிகங்கள், அதாவது 49,000 பாடல்கள் எனக் கூறுகிறார். அப்பரின் பாடல்களும் "தேவாரம்" என வழங்கப்பெறுகின்றன.*1

## சுந்தரர்

ஆரூரர் என்று அழைக்கப்படும் சுந்தரர், சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் திருமகவாகத் திருநாவலூரில் திருவவதாரம் புரிந்தவர் ஆவார். பழமறையவராக வந்து தம்மை அடிமை என்று வழங்கினைத் தொடுத்து, திருவெண்ணெய்நல்லூருக்கு அழைத்துச் சென்று தம் திருமணத்தைத் தடுத்தாட்கொண்டவர் இறைவரே என உணர்ந்தபோது சுந்தரர் பாடிய முதற்பாடல் இந்தளம் பண்ணில் அமைந்ததாகும்.

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளாயினி அல்லேனெனல் ஆமே".

**பாடலின் விளக்கம் :**

"சடையிற் பிறையைச் சூடியுள்ள பித்தரே,
அருள் வடிவான இறைவா,
உம்மை மறவாது எப்பொழுதும்
உள்ளத்தே வைத்துப் போற்றுகின்றேன்.
பெண்ணை நதியின் தென்பால் கரையில்
அருட்டுறை ஆலயத்துள் கோயிற்கொண்டு விளங்கும் நீ
உமக்காளாய் எனைப் பணித்தால் நான்
மாட்டேன் என மறுத்திடவும் ஆமோ" *2

*1. M.A. Durai Rangaswamy, "The Religion and Philosophy of Tevaram", 1990, Madras, Pg. 31.

*2. Indira Viswanatha Peterson, "Poems to Siva", (1991), Delhi, Pg. 303.

சுந்தரர் பல அற்புதங்களைப் புரிந்துள்ளாரெனக் கூறப்படுகிறது. அவினாசித் தலத்தில் குறிஞ்சிப் பண்ணில் ஒரு பதிகம் பாடி முதலையுண்ட பாலனை உயிர்ப்பித்துள்ளார்.

"எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாய் என்றுன்னையே உள்குகின் றேனுணர்ந்துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே"

சுந்தரர் அறுபத்துமூன்று நாயன்மாரையும் பாடியுள்ள திருப்பதிகம் திருத்தொண்டத்தொகை என அழைக்கப்படுகிறது. திருத்தொண்டத்தொகை கொல்லிக் கௌவாணப் பண்ணில் பாடப்பெற்றுள்ளது.

"தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லை யந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே".

உமாபதி சிவாச்சாரியார் சுந்தரர் 3800 பதிகங்கள் அதாவது 38,000 பாடல்கள் பாடியதாகக் கீழ்வரும் பாடலில் கூறியிருக்கக் காண்கிறோம்.

"பின்பு சில நாளின் கணாரூர் நம்பி
பிறங்கு திரு வெண்ணெய் நல்லூர்ப் பித்தா வென்று
மின்பமுதற் திருப்பதிக மூழி தோறு
மீறாய்முப் பத்தெண்ணா யிரமதாக
முன்புகன் றவர்நொடித்தான் மலையிற் சேர்ந்தார்". *1

ஆரூரரின் பாடல்கள் "திருப்பாட்டு" என வழங்கப்படுகின்றன.*2

மூவர் பாடிய திருப்பதிகங்கள் அனைத்தும் இப்போது வழக்கில் இல்லை. அவற்றில் பல அழிந்தனபோக, திருமுறைகண்ட புராணம் கூறுவதைப்போல் மூவர்தம் பதிகங்கள் முறையே 384, 310, 100 மட்டுமே தற்போது வழக்கில் இருந்து வருகின்றன.

"பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி நான்கினா லிலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினால்
வண்பெற்ற முறைஒன்று நூற்றினால் வன்றொண்டர்."

*1. "திருமுறைகண்ட புராணம்", செய்யுள்.16.

*2. M.A. Durai Rangaswamy, The Religion and Philosophy of Tevaram", 1990, Madras, Page.31.

மன்னன் இராசராச சோழன் கண்டு உணர்த்தியபிறகு, மூவர் தேவாரங்களைக் காப்பதற்காக முதற்குலோத்துங்கச் சோழன் காலத்தில் அவன் படைத் தலைவன் மணவிற் கூத்தன் களிங்கராயன் தாமிரப் பட்டயத்தில் அவைகளைப் பொறித்துச் சிதம்பரத்தில் பத்திரப்படுத்தி வைத்தான் எனத்தெரிகிறது.

"முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவா
றொத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி - இத்தலத்தின்
எல்லைக்கிரிவாய் இசையெழுதினான் கூத்தன்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று".

அழிவிலாத ஓதுவார் மரபின் ஏற்றமும் தாழ்வும் பற்றி இனிவரும் இயல்களில் காண்போம்.

# இயல் 1

## ஓதுவார் தோற்றமும் வளர்ச்சியும்

ஒரு காலத்தில் பிடாரர், பண்டாரம் ஆகத் திகழ்ந்தவர்களே தற்போது ஓதுவார் என அழைக்கப்படுகின்றனர்.

“ஆலயங்களில் தெய்வப்பாக்களை ஓதிய பண்டாரங்களுக்குப் பெயரே ஓதுவார்.”*1

சிவாலயங்களில் தமிழ்த் தெய்வப் பனுவல்களைப் பாடுவதற்காக நியமிக்கப் பட்டவர்களே அவர்கள். தொழிலால் பெயர் பெற்றவர்களே ஓதுவார்கள் அல்லாது சாதி, வகுப்புகளால் அவர்கள் பெயர் பெற்றவர் அல்லர்.

இராஜராஜ சோழரின் ஆட்சிக் காலத்தில் ஓதுவார், ஓதுவா மூர்த்திகள் என அழைக்கப்பட்ட இவர்கள் பிடாரர் எனவும் அழைக்கப்பட்டனர். பிடாரர் என்ற சொல்லுக்கு மருத்துவர், இசைக் கலைஞர் மற்றும் குரு என்ற பல பொருள்கள் உண்டு.*2 தேவார இசை பாடுவோர் இம்மூன்றிலும் வல்லவராக விளங்கியமையால் பிடாரர் என அழைக்கப்பட்டனர்.

*பிடாரர்களின் மருத்துவப் பணி:* தங்கள் பாடலால் நோய்களைக் குணப்படுத்துவர். அவர்களின் இசையே நோய்க்கு மருந்துமாகும்.

*பிடாரர்களின் இசைப்பணி:* காலையில், இரவு நேரங்களில் மற்றும் அனைத்து நேரங்களிலும் பாடக்கூடிய பண்களை இவர்கள் அறிந்திருந்தார்கள்.

*பிடாரர்களின் ஆசிரியப் பணி:* சிவனை வழிபட்டு சிவாகமங்களைப் பரப்புவதும் இவர்கள் பணியாகும்.

செல்வக்குவியலும், பொருட்குவியலும் பண்டாரம் என வழங்கப்படும். பலகலை வல்லுநராகத் திகழ்ந்தமையால் இவர்கள் இப்பெயர் பெறலாயினர்.

“பண்டாரமாவார் சமயத்துறவி” *3

பண்டாரம் என்றசொல் சாதிப் பெயராகவும் விளங்கும், வேளாளர், பள்ளி முதலான சாதிகளில் தோன்றி ஆலயப்பணியாற்றுவார்க்கும் இப்பெயர் வழங்கும்.

சாதிப் பண்டாரங்கள் தீவிர சைவராகவும், சைவ உணவை மட்டுமே உண்பவராகவும் விளங்குவர். லிங்கத்தை அணிந்து மனநிறைவான வாழ்க்கையை

*1. E. Thurston, “Castes and Tribes of Southern India 1975, Delhi”, Vol-V, p.436.
*2. “இராஜராஜ சோழன் முடிசூடிய 1000 ஆண்டு விழா நினைவு சிறப்பிதழ்,” பக்கங்கள் 23-24.
*3. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி”, பக்கம்.668.

வாழ்வர். ஆலயப் பணியாளராகவும், பூத்தொடுப்பவராகவும் சிவ பண்டாரத்தினர் விளங்க, சிலர் தேவாரப் பாக்களைப் பாடிப் பணி செய்வர்.*1

தேசிகர் என்பதும் பண்டாரத்தில் ஒரு உட்பிரிவாகும்.*2 ஆலய ஓதுவார்களைக் குறிப்பிட இந்நாளில் பிடாரன், பண்டாரம் எனும் பெயர்கள் வழங்கப்படுவது இல்லை. பண்டாரம் எனும்சொல் மாணிக்க வாசகரின் திருவாசகத்தில் அதிகமாக வழங்கிடக் காண்கிறோம்.

திருப்பாண்டிப் பதிகத்தில் “மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே” எனவரும் தொடரைக் குறிப்பிடலாம்.*3 கற்றறிந்து ஆசிரியராகவும், துறவியராகவும் திகழ்பவரைச் சுட்ட இப்'பண்டாரம்' எனும்சொல் ஆளப்பட்டுள்ளது, கடவுளின் தூதுவர்களாக அவர்கள் போற்றப்பட்டனர். காலக்கிரமத்தில் அவர்கள் தேசிகர் எனவும் அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் பண்டாரம் எனும் சொல் வறியவரையும், இரப்போரையும் சுட்டும் சொல்லாகவும் மாறிவிட்டது.*4

தேவாரப் பாடல்களைப் பண்முறையோடு கடந்த ஆயிரத்தி இருநூற்றாண்டுக் காலமாகப் பாடி ஓதுவார்கள் போற்றி வருகின்றனர். பிற்காலச் சந்ததியினருக்குத் தேவாரத்தைக் காத்துத் தந்த பெருமை முழுவதும் ஓதுவார்களையே சாரும்.

இராஜராஜசோழனின் குருவும், பீகாரைச் சேர்ந்த கோளகிச் சைவருமான சதுரானன பண்டிதர் ஆலயத்தில் பாடுவோர் தீட்சை பெற வேண்டும் என்று விதித்தார். இவ்வாறு கோளகிசைவர்களால் தீட்சா நாமமுறை பழக்கத்திற்கு வந்தது.*5 அந்தணர்கள் வைதீக தீட்சையும் ஓதுவார்கள் சிவ தீட்சையும் பெற்றனர். சிவதீட்சை பெற்ற ஓதுவார்களே ஆலய வழிபாட்டில் சிவன் திருமேனியைத் தீண்டும் உரிமை பெற்றனர்.*6

திருமுறைகளிலிருந்து பாடல்களைத் தினம் பூசை வேளைகளிலும், ஆலய திருவிழாக்களிலும் பாடுவது ஓதுவார்களின் பொறுப்பாகும். பிராம்மண குருக்கள் இறைவனுக்குரிய வழிபாட்டுச் சடங்குகளைக் கருவறையிலிருந்து நிகழ்த்தும்போது, கருவறைக்கு வெளியே நின்று பாடுவது இன்றைய நிலையாகும்.*7

தாளத்துடனோ அல்லது தாளமின்றியோ விருத்தமாக ஓதுவார் பாடலிசைப்பார். அவ்வாறு பாடும்போது மேலாடை தரிப்பது விலக்கப்பட்டுள்ளது. புனித திருநீறும், உருத்திராக்கமும் ஓதுவார்கள் அணிந்திருப்பர். அவர்கள் தூய சைவ உணவு உட்கொள்பவரும் ஆதல் வேண்டும்.

*1. “Castes and Tribes of Southern India”, 1975, Delhi Vol-VI, Pages 45-46.
*2. Ibid, Vol-II, Page.124.
*3. E. சுந்தரமாணிக்கயோகீஸ்வரர், “திருவாசகம்”, 1929, திருச்சிராப்பள்ளி Vol-II, பக்கம் 313.
*4. இரா. செல்வகணபதி, “தமிழ் வளர்க்கும் தருமபுரம்”, 1981, தருமபுரம் பக்கம்-64.
*5. பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தருடன் நேர்காணல், 30.5.94, சென்னை.
*6. திரு. மீ.ப. சோமுவுடன் நேர்காணல், 8.5.94, சென்னை.
*7. Indira Viswanathan Peterson, “Poems to Siva”, 1990, Delhi, Page.60

ஒருகாலத்தில் தீட்சை பெற்றவரே ஓதுவார் ஆகமுடியும் என்ற எழுதாச்சட்டம் இருந்து வந்தது. தீட்சையில் சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை என்று மூன்று வகைகள் உண்டு.

### சமய தீட்சை:

மாணவர்க்கு பன்னிரண்டு வயது ஆகுமுன் செய்யப்படும் தீட்சை சமய தீட்சையாகும். பஞ்சாட்சர மந்திரம் பயிலக் கற்பிக்கப்படும்.

### விசேட தீட்சை:

விசேட தீட்சையானது சிவபூசை செய்ய மாணவரைத் தகுதிப்படுத்துவதாகும்.

### நிர்வாண தீட்சை:

நிர்வாண தீட்சை பெற்றவர் ஆசிரியர் ஆகும் தகுதி பெறுகிறார். தம் வகுப்பைச் சார்ந்த மற்றவர் இல்லச் சடங்குகளை நிகழ்த்தும் தகுதி பெறுகிறார்.

தற்போது பணிபுரியும் ஓதுவார்கள் பலர் இந்தத் தீட்சை பெற்றவர்கள் அல்லர். ஆரம்பக் காலத்தில் அவசியம், கட்டாயமென விதிக்கப்பட்டிருந்தவை பிற்காலத்தில் தளர்த்தப்பட்டுள்ளன.

தேவாரத்தை ஓதுமுன் ஓதுவார்கள் "திருச்சிற்றம்பலம்" எனக்கூறுவர். அவ்வாறே ஓதி முடிக்கும்போதும் "திருச்சிற்றம்பலம்" எனக் கூறுவர். திருவாரூரில் இம்முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை எனக் கூறப்படுகிறது. இராஜராஜ சோழன் தேவாரப் பதிகங்களைக் கண்டறிவதற்கு முன்னமே திருவாரூரில் தேவாரம் வழக்கிலிருந்து வந்ததே இதன் காரணமாகும்.

சில ஓதுவா மூர்த்திகள் தமிழில் திருமணச் சடங்குகளையும் நிகழ்த்துகிறார்கள். வடமொழி மந்திரங்களைப் போன்றனவே தமிழில் பாடப்பட்டுள்ள தேவாரமும், இல்லங்களில் நடைபெறும் விழாக்களுக்கும், சடங்குகளுக்கும் ஓதுவார்கள் அழைக்கப்படுகிறார்கள். திருமணச் சடங்குகளின்போது, ஓதுவார்கள் பாடும் தெய்வப் பனுவல்கள் பின்வருமாறு:

1. திருமணச் சடங்கின்போது திருநாவுக்கரசர் பாடியுள்ள "சொற்றுணை வேதியன்" பாடல்.

2. மணவாடைகளையும் அணிமணிகளையும் வழங்கும்போது சுந்தரர் பாடியுள்ள "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" பாடல்.

3. மணமகள் கழுத்தில் மங்கல நாண் அணிவிக்கும்போது திருஞானசம்பந்தர் பாடியுள்ள "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" பாடல்.

4. வேள்வித்தீயை மணமக்கள் வலம்வரும்போது சம்பந்தர் பாடியுள்ள "பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார்" பாடல்.

சில ஓதுவா மூர்த்திகள் மருத்துவராகவும் நோயுற்றவர்க்கு இயற்கை மருந்தினை வழங்கிக் குணப்படுத்துவர். அப்போது திருஞான சம்பந்தர் பாடியுள்ள "மந்திரமாவது நீறு" பாடல் பாடப்படும்.

தமிழகத்தின் சில இடங்களில் சைவ அடியார்களின் மரணத்தறுவாயில் தேவாரம் பாட ஓதுவா மூர்த்திகள் அழைக்கப்படுகின்றனர். அத்தகைய நேரங்களில், திருவாசகத்திலிருந்து "சிவபுராணம்" பாடப்பெறும்.

தேவாரம் ஓதி வந்தவர்களையே காலக்கிரமத்தில் "ஓதுவார்" என அழைக்கிறோம். மறைவுற்றிருந்த அக்கருவூலத்தை மீட்டெடுத்த அவ்வரலாற்றின் சுருக்கத்தையும், சோழ, பாண்டிய, பல்லவர்கள் போற்றி வளர்த்த சீர்மையையும் இனிக் காண்போம்.

## தெய்வப் பனுவல்களை மீட்டெடுத்த வரலாறு

தில்லைத் திருத்தலத்திலிருந்து இராஜராஜ சோழன் நம்பியாண்டார் நம்பிகளின் துணையோடு இத்தெய்வக் கருவூலத்தை மீட்டுத்தந்த சிறப்பால் "திருமுறை கண்ட சோழன்" என்று அழைக்கப்படுகிறான்.

கொற்றவன்குடி உமாபதி சிவம் அவர்கள் 45 பாடல்களால் பாடியுள்ள "திருமுறை கண்ட புராணம்', திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட வரலாற்றை விவரித்து கூறுகின்றது.

இராஜராஜ சோழன் என்று அழைக்கப்படும் அபயகுலசேகரன், சோழமண்டல மன்னன் திருவாரூர் தியாகராசருடைய ஆழ்ந்த பக்தன் ஆவான். மூவர் பாடலை ஒரு சிவனடியார் பாடக்கேட்ட இராஜராஜன் பக்தியில் நெக்குருகிப் போனார். மூவரும் பாடிய தெய்வப் பனுவல்களைத் தொகுத்திடவேண்டும் என்று அப்போதே ஆர்வம் கொண்டான். பாடல்கள் இருக்கும் இடம் தெரியாததால் மனம் தளர்ச்சியுற்றான். தேவாரப் பாடல்கள் எங்கு கிடைக்குமென பலரிடம் விசாரித்து அவற்றைத் தேடிக் காணும் முயற்சியைத் தீவிரப் படுத்தினான்.

ஒரு சிவக்குழந்தையால் மன்னரின் விருப்பம் நிறைவேறலாயிற்று. திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாருக்குப் பணி செய்து வந்த குருக்களின் பிள்ளையே இக்குழந்தை. எல்லாக் கலைகளையும் ஆர்வமுடன் கற்று வந்தது இக்குழந்தை.

ஒரு நாள் அக்குழந்தையின் தந்தையார் வேறு ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்ததால் சிவபூசை கைங்கரியங்களைப் பார்த்துக் கொள்ளுமாறு சிறுவனுக்குக் கட்டளையிட்டார். சிறுவனும் இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டியபின் விநாயகர் முன் நைவேத்தியம் படைத்து அதனை ஏற்றருளுமாறு வேண்டினார்.*1 உண்மையில் கடவுளே நைவேத்தியம் உண்டருள்வார் என அக்குழந்தை நம்பியது. கடவுள் நைவேத்தியம் ஏற்பதாகத் தெரியவில்லை. நான் ஏதும் பிழை செய்திருப்பின் பொறுத்து நைவேத்தியம் ஏற்க வேண்டும் என்று கேட்டுச் சிறுவன் தன் தலையால் மோதிக்கொள்ள ஆரம்பித்தான். உடனே இறைவன் பொல்லாப் பிள்ளையாரும் சிறுவன் முன்தோன்றி அவன் விருப்பத்தைத் நிறைவேற்றினார்.

*1. எம்பெருமானமுது செயவேண்டு மன்ன விறைஞ்சிட
'திருமுறைகண்ட புராணம்', Sec.4.



பொல்லாப்பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி மற்றும் அயகுலசேகரன்.

இவ்வாறு பூசையில் காலம் கடந்ததால் தாமதமாகப் பள்ளிக்குப் போனால் ஆசிரியர் அடிப்பார் என்று உணர்ந்தது அக்குழந்தை. இறைவர் பொல்லாப் பிள்ளையாரிடம் தனக்கு எல்லாக் கலைகளையும் கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். இவ்வாறு இறைவரால் ஆட்கொள்ளப்பெற்றவர் வேறு யாருமில்லை. 'திருவிரட்டை மணிமாலை' எனும் தமிழ்ப் பிரபந்தம் யாத்தவரான நம்பியாண்டார் நம்பிகள்தாம்.*1

திருநாரையூரில் நடந்த இவ்வற்புதம் தமிழ்நாடு முழுவதும் பரவியது. நம்பியாண்டார் நம்பிகளின் புகழை அறிந்து அவரைச் சிறப்பிப்பதற்காக இராஜராஜ சோழனே அவரைத் தேடி வந்தான். மூவர் பாடிய தேவாரப் பதிகங்களைத் தேடித்தருமாறு வேண்டினான். பொல்லாப் பிள்ளையாரின் உதவியை நம்பியாண்டார் நம்பியும் நாட, தில்லையம்பலத்தின் பூட்டிய ஓர் அறைக்குள் தேவாரப் பதிகங்கள் இருப்பதை அறிவுறுத்தினார்.

இறைவர் ஆணையிட்டவாறு, இராஜராஜனுடன் நம்பியாண்டார் நமபிகள் தில்லையம்பலம் சென்று தில்லையந்தணர்களிடம் தேவாரம் பூட்டிவைக்கப்பட்டுள்ள அறையின் கதவைத் திறந்து காட்டுமாறு கூறினார். மூவரும் வந்தால் அன்றி, அவ்வறையின் கதவைத் திறக்கமாட்டோம் என்று மறுத்துவிட்டனர். மூவரையும் வரவழைப்பது எவ்வாறு இயலும் என எண்ணிய மன்னன், மூவரின் திருமேனிகளைச் செய்து தில்லையர்ந்தணர் முன் வரச்செய்தான். பூட்டிய அறையைத் தில்லையர்ந்தணர்கள் பின் திறந்துவிட, அவ்வறைக்குள் சென்ற அவர்கள் தேவாரப்பதிகங்களில் பாதிக்குமேல் கறையான் அரித்திருக்கக் கண்டனர். மண்மூடி செல்லரித்த ஏடுகளைப் பழுது நீக்கிப் பிரித்தெடுப்பது மிகவும் வருத்தம் தரக்கூடியதாகவிருந்தது. அச்சமயம் அக்காலத்திற்கு வேண்டிய தேவாரத் திருப்பதிகங்கள் பாதுகாப்புடன் இருப்பதாக ஓர் அசரீரி எழுந்தது. திருமுறைகண்ட புராணம் இதனை "ஈண்டு வேண்டுவன வைத்தோம்" -இருப்பன இக்காலத்திற்கு வேண்டுவன எனக் கூறுகிறது.

மன்னன், நம்பியாண்டார் நம்பிகளைக் கிடைத்த தேவாரப் பதிகங்களை வரன்முறை செய்துதரக்கேட்டுக் கொண்டான். நம்பியாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தரின் பாடல்களை முதல் இரண்டு மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசரின் பாடல்களை நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகவும், சுந்தரர் பாடல்களை ஏழாம் திருமுறையாகவும் தொகுத்தார். இவ்வாறு தேவாரத் திருப்பதிகங்கள் தொகுக்கப் பெற்றன.

இவ்வாறே திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக வைக்கப்பெற்றன. திருமாளிகைத் தேவர், சுந்தரர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி, காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி மற்றும் சேதிராயர் பாடிய திருவிசைப்பா பாடல்களும், சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு பாடல்களும் சேர, ஆக ஒன்பதின்மர் பாடிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்றன. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுரம் உள்ளிட்ட பல நூல்கள் பதினோராம் திருமுறையாகவும் தொகுக்கப்பெற்றன.*2

*1. கா. வெள்ளைவாரணன். 'பன்னிரு திருமுறை வரலாறு',
1972, அண்ணாமலைநகர், பக்கம்.11.

*2. 'பன்னிரு திருமுறை வரலாறு', 1972, அண்ணாமலைநகர், பக்கம்.14.

தேவாரப் பதிகங்களுக்குப் பண்வகுக்க மன்னனும், நம்பியாண்டார் நம்பிகளும் திருவெருக்கத்தம்புலியூர் செல்லுமாறு தெய்வ அசரீரி ஆணை பிறப்பித்தது. திருவெருக்கத்தம்புலியூரில் வாழ்ந்திருந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழிவந்த ஒரு பக்தையை அவர்கள் பணிந்தனர்.*1 இவர்களின் வேண்டுகோளை ஏற்று அப்பெண்ணும் தேவாரப் பண்முறைகளை வகுத்து, பண்முறைக்கேற்ப பாடல்களை ஒழுங்குபடுத்தித்தந்தாள். அன்றைக்கு அவ்வம்மையார் வகுத்துத்தந்த பண்முறைப் படியே இன்றும் ஆலயங்களில் ஓதுவா மூர்த்திகள் தேவாரப் பதிகங்களைப் பாடிவருவது குறிப்பிடத்தக்கது.

## தேவாரம் ஓதுதலின் தொடக்கம்

தேவாரங்களை முறைப்படுத்தித் திருக்கோயில்களில் ஓதச்செய்தவர் என்ற பெருமை இராஜராஜ சோழனையே சேரும் என்றபோதும், தேவாரங்களை அவருக்கு முன்னும் ஓதுவார்கள் பாடிவந்ததாகத் தெரிகிறது.

தேவாரம் பாடியவர்களில் திருஞான சம்பந்தரே இளையவர் என்பது யாவரும் ஏற்றுக் கொண்டுவிட்ட ஒரு உண்மையாகும். திருவெழுகூற்றிருக்கையின் மூலம் திருஞான சம்பந்தரின் தந்தை தெய்வப்பாடல்களை ஓதிவந்ததாக அறிகிறோம். சிவபாத விருதயர் திருஞானசம்பந்தரின் எல்லாப் பதிகங்களையும் ஒழுங்குப்படுத்தி வைத்துப் பாடமுடியாமல்போனபோது, திருவெழுகூற்றிருக்கை மட்டும் பாடினால் போதுமானது என ஞானசம்பந்தர் அறிவுறுத்தியுள்ளார். எல்லாப் பதிகங்களையும் பாடுவதால் உண்டாகும். பலன்களைத் திருவெழுகூற்றிருக்கை ஒன்றுதிரட்டி உள்ளடக்கி யிருப்பதாகத் திருஞான சம்பந்தர் அறிவுறுத்தியுள்ளார்.

47 வரிகள் கொண்ட திருவெழுகூற்றிருக்கைப் பதிகம், புனிதத் திருத்தலங்கள் பன்னிரண்டின் பெயர்களை உள்ளடக்கிய பதிகமாகும்.*2 பண் வியாழக்குறிஞ்சியில் பாடப்பட்டுள்ள அப்பதிகம் முதலாம் திருமுறையைச் சார்ந்தது.

தேவாரம் ஓதுதல் அக்காலத்தில் "திருப்பதியம் விண்ணப்பித்தல்" என வழங்கப்பட்டு வந்தது. ஆலயங்களில் பாடப்படும் தமிழ்த்தெய்வப் பாக்களுக்குத் திருப்பதியம் என்பது பெயராகும். பக்தி இயக்கத்தைப் பரப்பி வந்த சைவ இசைவாணர்கள் அரசர்களால் பெரிதும் போற்றப்பட்டனர். மானியங்களாகவும் அறக்கட்டளைகளாகவும் அவர்கள் மதிப்புடன் வாழ்வதற்குத் தேவையான பொன்னாகவும் பொருளாகவும் வெகுமதிகள் வழங்கப்பட்டுப் போற்றப்பட்டனர்.

இராஜராஜ சோழனே முதன்முதலில் தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் தேவாரம் பாடுவதற்காக 48 பிடாரர்களையும், உடுக்கை மத்தளம் வாசிக்க இருவரையும் நியமித்தவன் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. ஆயினும் கல்வெட்டுச் சான்றுகள் வாயிலாக இராஜஇராஜ சோழனுக்கு முன்பே தேவாரம் ஓதும் முறை ஆலயங்களில் வழக்கில் இருந்து வந்ததாக அறிகிறோம்.

* 1. 'நல்லிசையாழ்பாணர் நன்மரபின் வழிவந்தவள்ளியொருத்தி'
"திருமுறைகண்ட புராணம்", Sec. 32.

* 2. சி.கே. சுப்பரமணியபிள்ளை, 'பெரியபுராணம்'
1971 கோவை, Vol. IV, பக்கங்கள் 329-330.



இராஜராஜசோழன் தஞ்சையில் கட்டிய பெரியகோயில்.

முதலாம் ஆதித்த சோழனின் கி.பி.873ஆம் ஆண்டைச் சார்ந்த திருவெறும்பியூர் கல்வெட்டு, கி.பி 876ஆம் ஆண்டைச் சார்ந்த பழுவூர்க் கல்வெட்டு, 910ஆம் ஆண்டைச் சார்ந்த முதலாம் பராந்தகச் சோழனின் திருவாவடுதுறைக் கல்வெட்டு, மற்றும் 944ஆம் ஆண்டைச் சார்ந்த திருத்தவத்துறைக் கல்வெட்டு, 911ஆம் ஆண்டைச் சார்ந்த அல்லூர்க் கல்வெட்டு, உத்தம சோழனின் 977ஆம் ஆண்டைச் சார்ந்த கோனேரி இராசபுரம் கல்வெட்டு, மற்றும் 984ஆம் ஆண்டைச் சேர்ந்த அந்துவ நல்லூர் கல்வெட்டுகளால் தேவாரம் பாடும் முறை இராசராச சோழனுக்கு முன்பே வழக்கில் இருந்து வந்தது தெளிவாகிறது.*1

## பழமையான நிவந்தம்

கி.பி.750ல் நந்திவர்ம பல்லவ அரசன் விஜய நந்தி விக்கிரமன் வழங்கிய கொடையே மிகப் பழமையான கொடையாகும். தன் ஆட்சியின் 17ஆம் ஆண்டில் திருவல்லம் ஆலயத்தில் பணிபுரிந்தவர்க்கு இவன் கொடை வழங்கியுள்ளான்.

ஆகவே கி.பி.எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தேவாரம் பாடும்முறை வழக்கில் இருந்து வந்ததை அறிகிறோம்.

தேவாரம் பாடியவர் உட்பட அனைத்து ஆலயப் பணியாளர்களுக்கும் அவன் மானியம் வழங்கியுள்ளான்.*2 திருவல்லம் (கி.பி.750) மற்றும் அல்லூர் கல்வெட்டுகள் இணைக்கப்பட்டுள்ளன.*3

## அந்தணர் ஓதுதல்

வால்குடிக்கு அருகில் உள்ள திருத்தவத்துறை ஆலயத்தில் இரு அந்தணர்கள் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய சிவகோசரிபிடாரன் தேசவிடங்கன் என்பார். நிலதானம் செய்தார் என்று முதற் பராந்தக சோழனுடைய 37ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.943) கூறுகிறது.

இந்நிவந்தம் போதாமையால் அதற்கும் 16 ஆண்டுகளுக்குப்பிறகு சுந்தர சோழனுடைய மூன்றாவது ஆட்சியாண்டில் (கி.பி.959) மேற்கூறிய சிவகோசரி பிடாரன் மேலும் சிறிது நிலம் அளித்தான் என்றும், நிலத்தினின்று பெறும் எள்ளுக்கு உரிய எண்ணெய் குடிவாரப்பகுதி கோயிலுக்குச் சேரவேண்டும்; நிலத்துக்குரிய செவ்வாரப்பகுதி திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் பெற வேண்டும் என்று ஏற்பாடு செய்தான் என்று இன்னொரு கல்வெட்டு கூறுகிறது.*4

ஓதுவாருக்கு நிலக்கொடை வழங்கியதை கூறும் அந்துவநல்லூர் கல்வெட்டு (கி.பி.984) இணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.*5

* 1. "பன்னிரு திருமுறை வரலாறு", 1972, அண்ணாமலைநகர், பக்கம் 24.
* 2. "பன்னிரு திருமுறை வரலாறு", 1972, அண்ணாமலைநகர், பக்கம் 28.
* 3. இணைப்பு 2, 3.
* 4. கா.மா. வேங்கடராமையா, 'திருப்பதியம் விண்ணப்பித்தல்', திருக்கோயில், 1960, பக்கம் 42.
* 5. இணைப்பு 4.

பிராம்மணர்களும் ஓதுவாராகப் பணிபுரிந்தமைக்கு இவை தலையாய சான்றுகளாகும். கடந்த பல நூற்றாண்டுகளில் தேவாரம் ஓதும் அந்தண ஓதுவார் அருகி, தற்போது சென்னையில் ஒரே ஒரு அந்தண ஓதுவார் மட்டும் பணிபுரிந்து வருவது இயல் மூன்றில் விவரிக்கப்பட்டுள்ளது. அவரும் ஆர்வம் காரணமாக பணியாற்றி வருகிறார். மற்றொரு அந்தண ஓதுவார் அருள்மிகு திருவொற்றியூர் திருக்கோயில் பணியாற்றி வருகிறார்.

## குருடர்கள் ஓதுவாராகப் பணியாற்றியமை :

சோழர்காலத்தில் பார்வையற்ற இறை இசைவாணர்கள் ஓதுவாராக நியமிக்கப்பட்டுள்ளனர். திருவாமாத்தூர் அழகிய தேவர் கோயிலில் தேவாரம் பாட இரண்டாவது குலோத்துங்கச் சோழன் (கி.பி.1200) பதினாறு பார்வையற்றவர்களை நியமித்திருந்தான். மேலும் அவர்களுக்கு வழிகாட்டி உதவ இருவரை உதவியாளர்களாக நியமித்திருந்தான். பார்வையற்ற ஓதுவார்களுக்கு வழிகாட்டி உதவிய அவ்விருவரும் "கண்காட்டுவர்" என அழைக்கப்பட்டுள்ளனர்.

புறக்கண் இல்லாத போதும், தம் அகக்கண்ணால் இறைவனைக் கண்டு பாடி, இறைவனோடு தொடர்புகொண்டு விளங்கினர். பார்வைக் குறைவைப் பொருட்படுத்தாது அவர்களின் சமய ஞானத்தைப் போற்றி அக்காலத்து மன்னர்கள் அவர்களிடம் பெருந்தன்மையோடு நடந்து கொண்டுள்ளனர். அவர்களும் இறைய யருள்பெற்ற தெய்வீகப் பாடகர்களாகத் திகழ்ந்துள்ளனர். கண்பார்வையில்லாத பதினாரு ஓதுவார்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டதைப் போலவே அவர்களுடைய "கண்காட்டுவர்" இருவருக்கும் ஊதியம் வழங்கப்பட்டதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.*1 அக்கல்வெட்டு இணைப்பில் தரப்பட்டுள்ளது.*2

## தேவரடியார் பாடுதல்:

திருவொற்றியூர் கல்வெட்டு, திருப்பள்ளியெழுச்சி மற்றும் திருவெம்பாவை பாடி, நடனம் புரிந்த இருப்பத்திரெண்டு தளியிலார் பணி செய்து வந்ததைக் கூறுகிறது. திருப்பதியம் விண்ணப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இத்தளியிலாருக்கும் பதினாறு தேவரடியார்களுக்கும் நிலக் கொடை வழங்கப்பட்டுள்ளது. நாட்டிய அபிநயத்துடன் தேவாரங்களைப்பாடி அவர்கள் பணி செய்துள்ளனர். கி.பி. 1063 முதல் கி.பி. 1070 முடிய அரசாண்ட வீர ராசேந்திர சோழன் காலக் கல்வெட்டினால் இது தெளிவாகிறது.*3

## புதுக்கோட்டை கல்வெட்டு:

திருவிளாங்குடியில் இடிந்துகிடக்கும் சிவன் கோயிலிற் காணும் முதலாம் இராசராச சோழனது இருப்பத்தியெட்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சில சுவையான செய்திகளைக் கூறுகிறது. திருப்பதியம் விண்ணப்பம் செய்வாருக்கு நிவந்தம்

* 1. கா.மா. வேங்கடராமையா, 'திருப்பதியம் விண்ணப்பித்தல்', பக்கம் 43.
* 2. இணைப்பு - 5.
* 3. கா.மா. வேங்கடராமையா, 'திருப்பதியம் விண்ணப்பித்தல்', பக்கம் 44.

இல்லாமையால், அப்பணி புரிந்து வந்த நால்வருக்குச் சம்பளம் வழங்கப்பட்ட விவரம் அறிகிறோம். *1

விஜயநகரத்தை ஆண்டிருந்த கிருஷ்ண தேவராயரின் திருவண்ணாமலைக் கல்வெட்டு (சகம் 1438) ஒரு முக்கிய செய்தியைக் கூறுகிறது. இக்கல்வெட்டில்தான் முதன் முதலாக 'ஓதுவார்' என்ற சொல் பயின்று வரக் காண்கிறோம்.*2 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அக்கல்வெட்டு இணைப்பில் தரப்படுகிறது.*3

## இராஜராஜசோழனின் பெரும்பணி

இராஜராஜசோழனின் காலத்திலிருந்துதான் தேவாரம் திருக்கோயில்களில் முறையாக ஓதப்பட்டுவருகின்றது. அவருடைய காலத்திற்குமுன்பே தேவாரம் ஓதப்பட்டமைக்குப் பல சான்றுகள் இருப்பினும், ஆலயங்களில் முறையாகத் தேவாரம் பாட வழிவகை செய்தவர் இராஜராஜ சோழனே ஆவார். நாளும் தேவாரம் முறையாக ஆலயங்களில் ஓதுவதற்கு அறக்கட்டளை அமைத்தார். நாற்பத்தியெட்டு பிடாரர்களையும் (ஓதுவார்கள்) மற்றும் உடுக்கை வாசிப்பான், மத்தளம் கொட்டுலான் என இருவரையும் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நியமித்தார். அவர்கள் ஆலயத்தின் முழுநேரப் பணியாளர்கள் ஆவர். கீழ்வரும் கல்வெட்டால் இதனை அறியலாம்.

**ஆணை:**

உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும், இவர்களிலே நிலையார் உடுக்கை வாசிப்பான் ஒருவனும், இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதிண்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் இராஜகேசரியோடக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தேய் பெறவும்.

இவர்களிலே செத்தார்க்கும், அனாதேசம் மோனார்க்கும் நிலைமாறு அவ்வர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பம் செய்யவும் அவ்வவர்க்கு அடுத்த முறை கடவாறின்றியொழியில் அந்த நாயத்தாரே யோக்கியராரிப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டுஇட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும்.*4

மன்னன் நாற்பத்தியெட்டு பிடாரர்களையுயம் (ஓதுவார்களையும்) ஒரு உடுக்கை வாசிப்பானையும், ஒரு கொட்டி மத்தளம் வாசிப்போனையும் நியமித்தான்.

* 1. கா.மா. வேங்கடராமையா, திருப்பதியம் விண்ணப்பித்தல், பக்கம் 44.
* 2. Ibid. பக்கம் 42.
* 3. இணைப்பு 6.
* 4. இரா. நாகசாமி, "தஞ்சை பெருவுடையார் கோவில் கல்வெட்டுகள்" 1969, பக்கம் 48-49.

ஓதுவார்களுக்கு மிக தாராளமாக ஊதியம் வழங்கினர். ஆலயக் கருவூலத்திலிருந்து இவர்கள் ஐம்பதுபேருக்கும் நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் முன்குறுணி நெல் (இருபத்துநான்கு பட்டணம்படி) ஆடவல்லான் மரக்காலால் அளந்து சம்பளமாக வழங்கியிருக்கிறான்.*1 இன்னொரு குறிப்பிடவேண்டிய சிறப்பு என்னவெனில் முக்கிய கலைஞர்களுக்கும், அவர்களுடைய உதவியாளர்களுக்கும் வேறுபாடின்றி ஊதியம் வழங்கியிருக்கின்றான். யாராவது ஒருவர் நோய்வாய்ப் பட்டாலோ அல்லது பணிக்கு வராதிருந்தாலோ அவருக்குப் பதிலாக மற்றொருவர் நியமிக்கப்பட்டு அன்றைய ஊதியம் அவருக்கே வழங்கப்பட்டது.

இவர்கள் ஐம்பதுபேர் பெயர்களும் சிவன், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பெயர்வருமாறு அன்றிருந்த வழக்கப்படி அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. தேவாரம் மற்றும் திருத்தலச்சார்புடைய பெயர்களையும் நாம் காண்கிறோம்.

உதாரணமாக

"திருவெண்ணாவல் செம்பொற்சோதியான
தட்சிணமேருவிடங்க பிச்சனான ஞானசிவன்".

என்ற பெயரைக் காண்க. திருவெண்ணாவல் என்பது தலத்தின் பெயர். செம்பொற்சோதி என்பது தேவாரத்தில் பயின்றுவரும் ஒரு சொல். தட்சிண மேரு விடங்கப் பிச்சன் என்பது இராஜராஜேஸ்வரத்துடன் தொடர்புடையது. ஞானசிவன் என்பது பிடாரரின் பெயர்.

ஐம்பது பிடாரர்களில் (ஓதுவார்களில்) மூவர் தொடர்புடைய பெயர்கள் பின்வருமாறு:

1. மாதவன் திருஞான சம்பந்தனான ஞானசிவன்
2. சிவக்கொழுந்து சம்பந்தனான அகோர சிவன்
3. சோமன் சம்பந்தனான அகோர சிவன்
4. இராமன் சம்மந்தனான சத்திய சிவன்
5. சம்பந்தன் ஆரூரரான வாமசிவன்
6. பொற்சுவரன் திருநாவுக்கரையனான பூர்வசிவன்
7. கம்பன் திருநாவுக்கரையனான சதாசிவன்
8. அப்பி திருநாவுக்கரையனான நேத்ரசிவன்
9. ஆரூரன் திருநாவுக்கரையனான ஞானசிவன்
10. மாதேவன் திருநாவுக்கரையனான விஞ்ஞான சிவன்
11. சக்தி திருநாவுக்கரையனான ஈசான சிவன்
12. அச்சன் திருநாவுக்கரையனான நேத்ர சிவன்
12. கயிலாயன் ஆரூரன் தருமசிவன்
14. ஐநூற்றுவன் சியாரன் தத்புருஷசிவன்
15. மறைக்காடன்நம்பி ஆரூரனான ஞானசிவன்
16. பொற்சுவரன் நம்பி ஆரூரனான தர்மசிவன்

கல்வெட்டு (கி.பி. 985-1014) இணைப்பில் உள்ளது.*2

* 1. "கருணாம்ருத சாகரம்", 1917, தஞ்சை, பக்கம் 127.
* 2. இணைப்பு - 7.

இச்சூழ்நிலையில், தில்லைத் திருத்தலத்தின் நிலவரையிலிருந்து இராஜராஜசோழன் திருமுறை பற்றி எண்ணிப்பார்ப்பது நல்லது என எண்ணுகிறேன். தென்னிந்தியக் கல்வெட்டுக்களைப் பொதுவாக ஆய்வு செய்து பார்க்கும்போது கோயிலுக்கு விளக்கு அளித்தது போன்ற மிகச்சிறிய செய்திகளைக்கூட அதன் சிறப்பைச் சுட்டும் வகையில் கல்வெட்டில் பொறித்திருக்கக் காண்கிறோம். அப்படியிருக்க திருமுறைக் கருவூலத்தை மீட்டது எவ்வளவு சிறப்புமிக்க சாதனை அதை ஏன் கல்வெட்டில் பொறிக்கவில்லை என்று பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் எழுப்புவது நியாயமான கேள்வியே ஆகும். *1

ஆனால் திரு வெள்ளைவாரணன் போன்ற பிற அறிஞர்கள் திருமுறை கண்ட வரலாற்றை மறுத்துரைக்கவில்லை. பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் போன்ற மிகச்சிலரே திருமுறைகண்ட வரலாற்றை மறுத்துரைக்கிறார்கள் என்றபோதும், அவர்கள் கருத்தை மறுப்பதற்கான ஆதாரங்கள் அதிகமாக இல்லை. எனினும் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளும் ஒருகருத்தாக நிலைபெற்று நிற்பது இராஜராஜசோழனே தேவாரம் ஓதும் முறையை வகுத்தான் என்பதே ஆகும்.

தேவாரப் பதிகங்கள் ஆலயங்களில் ஓதப்பட்டன. அவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்காக திருக்கைக்கோட்டி மண்டபத்தில் அவற்றை வைத்துப் போற்றினார்கள். நாகை வட்டத்தில் திருக்காறாயிலில் உள்ள கல்வெட்டு திருக்கைக்கோட்டி மண்டபத்தில் தேவாரம் ஓதிய ஓதுவார்களுக்கு நிலம் வழங்கப் பெற்றதைத் தெரிவிக்கிறது. திருவீழிமிழலையில் நரசிங்க தேவரால் திருக்கைக் கோட்டி மண்டபம் கட்டப்பட்டுள்ளது என்பது அங்குள்ள கல்வெட்டொன்றால் (கி.பி.13ஆம் நூற்றாண்டு) அறியப்படுகிறது. அக்கல்வெட்டையும் இணைப்பில் காணலாம்.*2 கல்வெட்டின் நிழற்பட நகலை இணைப்பில் காணலாம்.*3 கோவிலூரில் பணிசெய்த திருக்கைக் கோட்டி ஓதுவாருக்கு இராஜகம்பீர சோழிய வரையன் நிலம் வழங்கியுள்ளான்.

## திருமலை நாயக்கரால் திருமுறை ஓதுவார்களுக்கு வழங்கப்பட்ட தாமிரப்பட்டயம்

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயத்தில் அலங்கார ஓதுவார், அவர் மகன்கள், அவர் பேரன்கள் பணியாற்றியுள்ளார். அவர்கள் பணியைப் போற்றும் வகையில் ஒரு கிராமம் முழுவதும் "ஓதுவார் செங்குளம்" திருமலை நாயக்கர் மானியமாக வழங்கியுள்ளார். அந்த ஓதுவார்களின் வழிவந்த குருசாமி ஓதுவாரிடம் அந்தச் செப்புப் பட்டயம் இருந்து வருகிறது.*4 அச்செப்புப் பட்டயத்தில் கண்டுள்ள விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.*5

* 1. பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தருடன் நேர்காணல், 30.5.94, சென்னை.
* 2. இணைப்பு 8.
* 3. இணைப்பு 9.
* 4. திரு. குருசாமி ஓதுவாருடன் நேர்காணல், ஜூலை 1994, சென்னை.
* 5. இணைப்பு 10.

# இயல் 2

## பண்களும் அவற்றின் முறைவகுப்பும்

"பண்ணப்படுவது பண்". ஒலிதோற்றத்திற்கு ஆதாரமாக எட்டு உறுப்புக்களும், இணைந்து செய்யப்படுவதால் பண் என்ற பெயர் இதற்கு உண்டாகியுள்ளது.

ஒலிதோற்றத்திற்கு ஆதாரமான எட்டு உறுப்புக்களாவன: மார்பு, தொண்டை, நா, மூக்குத்துளைகள், வாயின் மேற்பகுதி, உதடுகள், பற்கள் மற்றும் தலையாகும்.*1

"பாவோ டணைதல் இசை என்றார்; பண் என்றார்
மேவார் பெருந்தானம் எட்டானும் - பாவாய்
எடுத்தான் முதலாய் இருநான்கும் பண்ணிப்
படுத்தமையால் பண்ணென்று பார்" *2

எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு மற்றும் தாக்கு - இவையெட்டும் எட்டு விதமான ஒலி வேறுபாடுகளாம். பரிமேலழகர் கூற்றுப்படி "பண்களாவன பாலையாழ் முதலிய நூற்றுமூன்று".

பண் என்ற சொல் பெரும் பண் எனவும் பொருள்படும் பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி ஆகிய முக்கிய பண்கள் பெரும் பண்களாகும். தற்போதுள்ள ஏழுசுரங்களின் ஏற்ற இறக்க வரிசை பெரும்பண்.

இந்த நான்கு முக்கிய பண்கள் இருபத்திஒன்று திறன்களை உள்ளடக்கியதாகும். இந்த இருபத்திஒன்று திறன்களும் ஒவ்வொன்றும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என நான்கு வகையுடையதாய் மொத்தம் எண்பத்திநான்கு பண்களாகும்.

நான்கு முக்கிய பண்களும் அகம், புறம், அருகு, பெருகு என நான்கு வகையாய் பதினாறு ஆகும். இவ்வாறு எண்பத்திநான்கும் பதினாறும் சேர்ந்து நூறு பண்கள் ஆகும். இவற்றுடன் தாரபண்டிறம், பையுள் காஞ்சி மற்றும் படுமலை எனும் மூன்று பண்களைச் சேர்க்க, பண்கள் நூற்றிமூன்று ஆகும்.*3 தேவாரம் பண்களின் முறைவகுப்பு இணைப்பாகத் தரப்பட்டுள்ளது.*4

பண் என்ற சொல் பெரும் பண்ணையும் சுட்டினும், இதன் வகைப்பாடுகள் பண்ணியல் திறம், திறம், திறத்திறம் எனப்படும். இதனைக் கீழ்வரும் பாடலால் அறியலாம்.

* 1. M. Arunachalam, "Musical Tradition of Tamilnadu", பக்கம் - 30.
* 2. "பன்னிரு திருமுறை வரலாறு", 1972.
அண்ணாமலை நகர், பக்கங்கள் 581-584.
* 3. பழந்தமிழ் இலக்கியத்தில் இசைஇயல், 1986, சென்னை, பக்கம் - 92.
* 4. இணைப்பு 11.

"நாற்பெரும் பண்ணும் சாதி நான்கும்
பார்படு திறனும் பண் எனப்படுமே".*1

பண்ணியல் திறம், கர்நாடக இசையிலுள்ள ஷாடவம் என்பதற்கு இணையாகும். திறம் ஆவது கர்நாடக இசையிலுள்ள ஔடவம் என்பதற்கு இணையாகும். மற்றும் திறத்திறம் என்பது சுவராந்தரம் என்பதற்கு இணையாகும்.

"பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்." *2

இசையோடு இயையாத இராகத்தால் பலனில்லை, அதைப்போல பார்வையற்ற கண்ணாலும் பயன் இல்லை. கண்ணோட்டம் என்பது வெறும் 'பார்வை' அல்ல. கண்டவிடத்து தாரதம்மியம் அறிந்து முறையான தாட்சண்யமும், நாகரீகமும் காட்டும் நற்பண்பே கண்ணோட்டம் எனப்படும். 'ஆள் நிதானம்' அறியாதார், பிறரிடம் பழகுவதில் பிழை பல செய்து துன்புறுவர். அன்னவர்க்கு கண்கள் வெறும் புறப்பார்வைக் கருவிகளேயல்லாமல், முறையாக நடந்துகொள்ள உதவா.

பண்கள் பகற்பண், இரவுப்பண், பொதுப்பண் என்ற வகைப்படும், அவற்றைப் பாடுவதற்குரிய நேரமும், அவற்றினோடு தொடர்புடைய ராகங்களும் ஒரு ஏட்டில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டிருப்பதாக திருவாவடுதுறை பொன் ஓதுவார் கூறுகிறார். பண்களோடு தொடர்புடைய ராகங்களின் விவரம் பின்வருமாறு:*3

| பகற்பண்கள் | சமமான ராகம் |
|---|---|
| 1. புறநீர்மை | ஸ்ரீ கண்டி |
| 2. காந்தாரம், பியந்தை | இச்சிச்சி |
| 3. கௌசிகம் | பைரவி |
| 4. இந்தளம், திருக்குறுந்தொகை | நெலிதபஞ்சமி |
| 5. தக்கேசி | காம்போஜி |
| 6. நட்டராகம், சாதாரி | பந்துவராளி |
| 7. நட்டபாடை | நாட்டகுறிஞ்சி |
| 8. பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| 9. காந்தார பஞ்சமமம் | கேதாரகௌள |
| 10. பஞ்சமம் | ஆகிரி |

| இரவுப்பண்கள் | சமமானராகம் |
|---|---|
| 1. தக்கராகம் | கண்டைகாம்போஜி |
| 2. பழந்தக்கராகம் | சுத்தஸாவேரி |

*1. வி.பா.கா.சுந்தரம் "பழந்தமிழ் இலக்கியத்தில் இசை இயல்", *1986* சென்னை பக்கம்-*92*.

*2. "திருக்குறள்" - பரிமேலழகர் உரை. *1976*.

*3. "யாழ்நூல்", பக்கம் - *268*.

| | |
|---|---|
| 3. சீகாமரம் | நாதநாமகிரியை |
| 4. கொல்லி, கொல்லிகௌவானம் திருநேரிசை, திருவிருத்தம் | சிந்துகன்டை |
| 5. வியாழக்குறிஞ்சி | சௌராஷ்புரம் |
| 6. மேகராகக்குறிஞ்சி | நீலாம்பரி |
| 7. குறிஞ்சி | மலஹரி |
| 8. அந்தாளிக்குறிஞ்சி | சைலதேசாட்சி |

| பொதுப்பண்கள் | சமமான ராகம் |
|---|---|
| 1. செவ்வழி | யதுகுல காம்போஜி |
| 2. செந்துருத்தி | மத்யமாவதி |
| 3. திருத்தாண்டகம் | ஹரிகாம்போஜி. |

ஒவ்வொரு பண்ணிற்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு; மூவரும், ஒரு சில பண்கள் தவிர அனைத்துப் பண்களையும், ஏறத்தாழப் பயன்படுத்தியிருக்கிறார்கள். எடுத்துக் காட்டிற்கு செந்துருத்திப் பண்ணில் சுந்தரர் மட்டுமே பாடியிருக்கிறார். மற்ற இருவரும் செந்துருத்திப் பண்ணில் பாடவில்லை. திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, திருநேரிசை பதிகங்களைத் திருநாவுக்கரசர் மாத்திரமே பாடியுள்ளார். சாதாரிப் பண்ணில் சம்பந்தரும், திருநாவுக்கரசரும் மாத்திரம் பாடியுள்ளார்கள்.

ஓதுவார்கள் தற்போது தேவாரப் பதிகங்களைப் பாடும் பண்களும், அவற்றிற்கு இணையான ராகவிவரங்களும் பின்வருமாறு:

### செவ்வழி

நூற்றி மூன்று பண்களில் 13-ஆவது செவ்வழிப் பண்ணாகும். இரண்டாம் திருமுறையில் 113 முதல் 122 பதிகங்கள் செவ்வழிப் பண்ணில் பாடப்பட்டுள்ளன. செவ்வழிக்குச் சமமாக ஓதுவார்கள் பாடும் ராகம் யதுகுல காம்போஜி ஆகும்.

### தக்கராகம்

103 பண்களில் 17-ஆவது இடம்பெறுவது தக்கராகம், முதல் திருமுறையில் 23 முதல் 46 பண்களும், ஏழாம் திருமுறையில் 13 முதல் 16 பதிகங்களும் தக்கராகப் பண்ணில் பாடப்பட்டுள்ளன. தற்போது ஓதுவார்கள் தக்கராகப் பண் பதிகங்களை காம்போஜி ராகத்தில் பாடி வருகிறார்கள்.

### புறநீர்மை

நூற்றிமூன்று பண்களில் 27-வது பண் புறநீர்மை ஆகும். மூன்றாம் திருமுறையில் 118 முதல் 123 பதிகங்களும், ஏழாவது திருமுறையின் 83 முதல் 85 பதிகங்களும் புறநீர்மை ஆகும்.

இப்புறநீர்மை பண் அமைந்த பாடல்கள் காலையில் பூபாள ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

### பஞ்சமம்

இது 25-வது பண் ஆகும். பஞ்சமம், மூன்றாம் திருமுறையில் 56 முதல் 66 பதிகங்களும், ஏழாம் திருமுறையில் 97-100 பதிகங்களும் பஞ்சமப் பண்ணில் பாடப்பட்டுள்ளன. தற்போது ஓதுவார்களால் பஞ்சமப் பண் பாடல்கள் ஆஹிரி ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

### நட்டபாடை

37வது பண் ஆகும் நட்டபாடை, பழங்கால இலக்கியங்களில் நைவளம் எனச் சுட்டப்பட்டுள்ளது. வடக்கில் நாட்டிய பாஷா என வழங்கும் சொல் தமிழில் நட்டபாடை ஆயிற்று. முதல் திருமுறையில் 1 முதல் 22 பதிகங்களும், ஏழாம் திருமுறையில் 78-82 முதல் பண்களும், 11-வது திருமுறையில் காரைக்கால் அம்மையார் பாடியுள்ள மூத்த திருப்பதிகமும் நட்டபாடை பண் ஆகும். விபுலானந்த அடிகள் இப்பண்ணுக்கேற்ற ராகம் நாட்டைக்குறிஞ்சி என்கிறார்.1 தற்போது ஓதுவார்கள் நட்டபாடை பண்பாடல்களைக் கம்பீர நாட்டை ராகத்தில் பாடுகிறார்கள். நாட்டை ராகத்திலும் நட்டபாடை பண் பாடல்களைப் பாடுவது ஒரு மரபாகும்.

### அந்தாளிக்குறிஞ்சி

இது 38-வது பண்ணாகும். குறிஞ்சிப் பண்ணிலிருந்து தோன்றியது அந்தாளிக் குறிஞ்சியாகும். மூன்றாம் திருமுறையில் 124, 125 பதிகங்கள் இந்தப் பண்ணில் பாடப்பட்டுள்ளன. தற்போது அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்த பாடல்கள் சாமாராகத்தில் பாடப்படுகின்றன.

### காந்தாரம்

இது 41வது பண் ஆகும். இரண்டாம் திருமுறையில் 54 முதல் 82 பதிகங்களும், நான்காவது திருமுறையில் இரண்டு முதல் ஏழு மற்றும் ஏழாது திருமுறையில் 71 முதல் 75 பதிகங்களும் இப்பண்ணில் பாடப்பட்டுள்ளன. தற்போது ஓதுவார்கள் நவரோஸ் ராகத்தில் காந்தாரப் பண் பாடல்களைப் பாடி வருகின்றனர்.

### பழம்பஞ்சுரம்

46-வது பண்ணாகிய, குறிஞ்சிப் பண்ணைச் சார்ந்த இப்பண் பஞ்சுரம் என அழைக்கப்படுகிறது. நான்காவது திருமுறையில் 14, 15 பதிகங்களும், ஏழாம் திருமுறையில் 47 முதல் 53 பதிகங்களும் இப்பண்ணைச் சார்ந்ததாகும். இப்பண்ணிற்குச் சமமான இன்றைய ராகம் சங்கராபரணம்.

### மேகராகக் குறிஞ்சி

103 பண்களில் இது 47வது பண் ஆகும். நாரத சங்கீத மகரந்தம் இதனை மேகரஞ்சி எனக்கூறுகிறது.*2 ஓதுவார்கள் இப்பண் பாடல்களை நீலாம்பரி ராகத்தில் பாடி வருகின்றனர்.

* 1. "யாழ்நூல்", 1974, தஞ்சை, பக்கம்-287.
* 2. "யாழ்நூல்", 1974, தஞ்சை, பக்கம்-290.

### கொல்லிக்கௌவாணம்

இது 49வது பண் ஆகும். மூன்றாவது திருமுறையின் 42வது பதிகமும் ஏழாம் திருமுறையில் 38 முதல் 46 பதிகங்களும் இப்பண் சார்ந்தவை ஆகும். ஓதுவார்களால் இப்பண் பாடல்கள் நவரோஸ் ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

### பழந்தக்கராகம்

இது 54-வது பண் ஆகும். முதல் திருமுறையில் 47 முதல் 62 பதிகங்களும் நான்காவது திருமுறையில் 12, 13 பதிகங்களும் பழந்தக்கராகப் பண்ணில் அமைந்தவை. 1951 ஆம் ஆண்டு நடைபெற்ற பண் ஆராய்ச்சி மாநாட்டில் ஆரபி இராகம் என இதனைச் சிலரும், தேவ காந்தாரி ராகம் எனச் சிலரும், சுத்த சாவேரி எனச்சிலரும் அறிவித்துள்ளனர்.*1

### குறிஞ்சி

முக்கியப்பண் குறிஞ்சி 61வது பண் ஆகும். முதல் திருமுறையில் 75 முதல் 103 பதிகங்களும், நான்காவது திருமுறையில் 21வது பதிகம் மற்றும் ஏழாவது திருமுறையில் 90 முதல் 94 பதிகங்கள் இக்குறிஞ்சிப் பண்ணில் பாடப்பெற்றுள்ளன. நாரத சங்கீத மகரந்தம் இதனைக் குறுஞ்சி என்றே குறிப்பிடுகின்றது. ஓதுவார்கள் இப்பண்ணில் அமைந்த பாடல்களை ஹரிகாம்போதி பாடத்தில் பாடுகிறார்கள்.

### நட்டராகம்

62வது பண்ணாகும் இது. இரண்டாம் திருமுறையில் 97 முதல் 112 பதிகங்களும், ஏழாம் திருமுறையில் 17 முதல் 30 பதிகங்களும் இப்பண்ணில் பாடப்பெற்றுள்ளன. விபுலானந்த அடிகள் தம் யாழ்நூலில் தென்னாட்டு இந்தோளத்திற்கு இது சமம் என்று கூறுகிறார். ஓதுவார்கள் இப்பண்ணில் அமைந்த பாடல்களைப் பந்துவராளி ராகத்தில் பாடுகிறார்கள்.

### வியாழக்குறிஞ்சி

64ஆவது பண்ணாகும் இது. முதல் திருமுறையில் 104 முதல் 128 பதிகங்கள் இப்பண்ணில் அமைந்துள்ளன. தற்போது சௌராஷ்டிரராகத்தில் இப்பண்ணில் அமைந்த பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன.

### செந்துருத்தி

65 ஆவது பண்ணாகும் இது. ஏழாம் திருமுறையில் 95வது பதிகம் இப்பண்ணில் பாடப்பட்டுள்ளது. நாரத சங்கீத மகரந்தம் இதனை மதுமாதவி எனக்குறிப்பிடுகிறது. மதுமாதவி பிறகு மத்யாமாவதி என மாறியது. செந்துருத்திப் பண்ணில் அமைந்த பாடல்களை ஓதுவார்கள் மத்யமாவதி ராகத்தில் பாடிவருகின்றனர்.*2

* 1. "பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும்." 1974.
* 2. "யாழ்நூல்", 1974, தஞ்சை, பக்கம் 289.

## தக்கேசி

103 பண்களில் தக்கேசி 69வது பண்ணாகும். முதல் திருமுறையில் 63 முதல் 74 பதிகங்களும் ஏழாவது திருமுறையில் 54 முதல் 70 பதிகங்களும் இப்பண்ணில் பாடப்பட்டுள்ளன. தற்போது தக்கேசி பண்ணில் அமைந்த பாடல்கள் காம்போஜி ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

## கொல்லி

70வது பண்ணாகும் இது. மூன்றாம் திருமுறையில் 24 முதல் 41 பதிகங்களும், நான்காது திருமுறையின் முதல் பதிகமும், ஏழாவது திருமுறையில் 31 முதல் 37 பதிகங்களும் இப்பண்ணில் பாடப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் பாடியுள்ள திருநேரிசை மற்றும் திருவிருத்தம் பாடல்கள் இக்கொல்லிப் பண்ணில் பாடப்பட்டவை. நவரோஸ் ராகம் இப்பண்ணிற்குச் சமமானது ஆகும்.

## இந்தளம்

73வது பண்ணாகும் இது. இரண்டாம் திருமுறையில் 1 முதல் 39 பதிகங்கள், நான்காவது திருமுறையில் 16, 17, 18 பதிகங்கள், ஏழாம் திருமுறையில் 1 முதல் 13 பதிகங்கள் இப்பண்ணில் அமைந்தவை. இப்பண்ணில் அமைந்த பாடல்கள் மாயாமாளவகௌள ராகத்தில் பாடப்படவேண்டும் என்பது மரபாகக் கூறப்படுகிறது. இப்பண்ணில் அமைந்த பாடல்கள் தற்போது நாதநாமக்கிரியை ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

## காந்தார பஞ்சமம்

76 ஆவது பண்ணாகும் இது. மூன்றாம் திருமுறையில் 1 முதல் 23 பதிகங்களும், நான்காவது திருமுறையில் 10, 11வது பதிகங்களும் மற்றும் ஏழாவது திருமுறையில் 75வது பதிகமும் இப்பண்ணில் அமைந்த பதிகங்களாகும். இப்பண்ணில் அமைந்த பாடல்கள் தற்போது கேதார கௌளை ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

## கௌசிகம்

80வது பண்ணாகும் இது. மூன்றாவது திருமுறையில் 43 முதல் 55 பதிகங்கள் இப்பண்ணில் அமைந்த பதிகங்களாகும். கௌசிகம் பண்ணில் அமைந்த பாடல்கள் பைரவி ராகத்தில் பாடப்படுவது மரபாகும்.

## பியந்தை காந்தாரம்

81வது பண்ணாகும் இது. பியந்தை, பியந்தை காந்தாரம் என அழைக்கப்படும். இரண்டாம் திருமுறையில் 83 முதல் 96 பதிகங்களும், நான்காம் திருமுறையில் எட்டாம் பதிகமும், ஏழாம் திருமுறையில் 76-வது பதிகமும் இப்பண்ணில் அமைந்துள்ளவை. இப்பண்ணிற்குச் சமமான ராகம் நவரோஸ் ஆகும்.

*சீகாமரம்*

82வது பண்ணாகும் இது. இரண்டாம் திருமுறையில் 40 முதல் 53வது பதிகங்களும் நான்காம் திருமுறையில் 19,20வது பதிகங்களும் ஏழாவது திருமுறையில் 86 முதல் 89 பதிகங்களும் இப்பண்ணில் அமைந்தவை. நாத நாமக்கிரியை ராகத்தில் ஓதுவார்கள் இப்பண்ணில் அமைந்த பாடல்களைப் பாடி வருகின்றனர்.

*சாதாரி*

103 பண்களில் இப்பண் 98வது பண்ணாகும். மூன்றாம் திருமுறையில் 67 முதல் 117 பதிகங்கள், நான்கம் திருமுறையில் 9வது பதிகமும் இப்பண்ணில் அமைந்தவை. பந்துவராளி ராகத்தில் தற்போது சாதாரிப்பண் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன.

மேற்காட்டியவற்றால் சில பண்கள் ஒரே ராகத்தில் பாடப்படுவதைக் காணலாம். சான்றாக காந்தாரம், கொல்லி மற்றும் கொல்லி கௌவாணம் பண்ணில் அமைந்த பாடல்கள் நவரோஸ் ராகத்தில் பாடப்படுவதைக் காண்கிறோம். அதைப் போலவே நட்டராகம், சாதாரிப்பண்களில் அமைந்த பாடல்கள் பந்துவராளி ராகத்திலும், தக்கேசி, தக்கராப் பண்களில் அமைந்த பாடல்கள் காம்போஜி ராகத்திலும் பாடப்படுவதைக் காண்கிறோம். திருநாவுக்கரசரின் திருத்தாண்டகப் பாடல்கள் ஹரிகாம்போஜி ராகத்தில் பாடப்படுகின்றன. சில மடாலயங்களில் பேகடா ராகத்தில் பாடப்படுவதைக் காண்கிறோம். அப்பரின் திருக்குறுந்தொகைப் பாடல்கள் மாயாமாளவகௌள ராகத்தில் பாடப்படவேண்டும். ஆனால் ஓதுவார்கள் தற்போது தாங்கள் விரும்பும் ராகத்தில் பாடிவரக் காண்கிறோம். திருநேரிசை, திருவிருத்தம் பாடல்கள் நவரோஸ் ராகத்தில் பாடப்படுகின்றன. ஓதுவார்கள் திருவிருத்தம் பாடல்களைப் பெரும்பாலும் பைரவி ராகத்தில் பாடி வருகிறார்கள்.*1

*கட்டளை:*

பதிகங்களில் காணப்படும் யாப்பு, மெட்டு, ஒலிப்பு ஆகியவற்றின் பொருத்தம் கருதி அவை கட்டளை என அழைக்கப்படும்.*2 மூவர் பாடல்களில் பயின்றுவரும் பண்கள் மற்றும் கட்டளைகளின் எண்ணிக்கையை திருமுறை கண்டபுராணம் கூறுகிறது. கட்டளை முறைப்படியே தற்போது ஓதுவார்கள் தேவாரம் பாடம் பயின்று வருகின்றார்கள்.

திருமுறை கண்டபுராணம் பாடல்களும், கட்டளை அட்டவணையும் இணைப்பில் தரப்பட்டுள்ளன.*3

*1. "பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும்", சென்னை 1974.

*2. Indira Viswanathan Peterson, "Poems to Siva", (1991) Delhi Pg. 62.

*3. இணைப்பு 12, 13.

# இயல் 3

## சென்னை நகரில் அமைந்துள்ள சில சிவாலயங்களில் பணியாற்றி வரும் ஓதுவாமூர்த்திகளின் பங்கு

இந்த ஆய்வு சென்னை நகரில் அமைந்துள்ள சில சிவாலயங்களில் பணியாற்றி வரும் ஓதுவாமூர்த்திகள் என்கிற அளவில் வரையறுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பதினான்கு ஆலயங்களுடன் தொடர்பு கொண்டு பதினாறு ஓதுவாமூர்த்திகளைப் பேட்டி கண்டேன்.

பொதுவாக ஓர் ஆலயத்திற்கு ஒரு ஓதுவாரே உள்ளார். எனினும் அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்திலும், அருள்மிகு வடபழநி ஆலயத்திலும் இரு ஓதுவார்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

சில ஓதுவார்கள் தற்போது திருக்கோயில்களில் பணியாற்றாமல் சுதந்திரமாகத் தேவார பாட சாலைகளில் பயிற்சியாசிரியராக விளங்கி வருகின்றனர். அத்தகைய ஓதுவாமூர்த்திகளில் தருமபுரம் திரு.ப. சுவாமிநாதன், காஞ்சிபுரம் திரு. ஆ. விநாயக முதலியார், மற்றும் குடந்தை திரு. வெ. லட்சுமணன் ஆகியோருடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

ஆலயங்களில் பணியாற்றும் ஓதுவார்களில் இதுவரை தொடர்பு கொள்ளப் பட்டோர் விவரம் பின்வருமாறு:

1. வால்குடி திரு.எம். சுவாமிநாதன், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் மயிலை, சென்னை.
2. திருக்களர் திரு. சு. நாகநாதன், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் மயிலை, சென்னை.
3. திரு. ந. ஆறுமுக ஓதுவார், அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை.
4. திரு. சா. சாமிதண்டபாணி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை.
5. திரு. சி. வரத ஓதுவார், அருள்மிகு கங்காதரேசுவரர் திருக்கோயில், புரசைவாக்கம், சென்னை.
6. திரு. து. சண்முகதேசிகர், அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் தங்கசாலை, சென்னை.
7. திரு. சி.. கபாலி ஓதுவார், அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில், மயிலை, சென்னை.
8. சைதை திரு. இரா. பாலசுந்தரம், அருள்மிகு கச்சாலீசுவரர் திருக்கோயில், பாரிமுனை, சென்னை.
9. திரு. கோ. இரத்தின சபாபதி ஓதுவார், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், கந்தகோட்டம், ராசப்பசெட்டி தெரு, சென்னை.

10. திரு. த. அருணாசல தேசிகர், அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் மற்றும் சுந்தரேசுவரர் திருக்கோயில், இராயப்பேட்டை, சென்னை.

11. திரு. இரா. விசுவநாத ஓதுவார், அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம், சைதை, சென்னை.

12. திரு. மா. பாலசுப்பிரமண்யன், அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில், மயிலை, சென்னை.

13. திரு. சு. இராஜரத்தினம், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை.

14. திரு. டி.எஸ். சுந்தரமூர்த்தி ஓதுவார், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை.

15. திரு. டி.என். பாலசந்திரன், அருள்மிகு திருவல்லீசுவரர் திருக்கோயில், பாடி, சென்னை.

16. திரு. ஏ. சாம்பசிவம், அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை.

ஓதுவார்கள் விடையிறுத்த வினாப்பட்டி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*1 அவ்வினாப்பட்டியின் அடிப்படையில் நேர்காணல் செய்யப்பட்டது.

ஆய்வுக்குக் கொள்ளப்பட்ட பதிநான்கு ஆலயங்களில் ஆறு ஆலயங்கள் பாடல் பெற்ற தலங்களாகும்.*2 பாடல்பெற்ற தலம் என்பது தேவார மூவரால் பாடப்பெற்று, அழியாப் பெருஞ்சிறப்பினைப் பெற்றதாகும். மயிலை, திருவான்மியூர், திருவொற்றியூர், திருவலிதாயம், திருவேற்காடு மற்றும் திருமுல்லைவாயிலுள்ள சிவாலயங்களே அவை. திருமுல்லைவாயில் அருள்மிகு மாசிலா மணீசுவரர் ஆலயத்தில் ஓதுவார் இல்லையாதலால் அத்தலம் ஆய்விற்குக் கொள்ளப்படவில்லை. மயிலை அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலயம் தனியார் நிர்வாகத்திலும், மற்ற ஆலயங்கள் தமிழக அறநிலைய ஆட்சித்துறை ஆளுகையிலும் இருந்து வருகின்றன.

பொதுவாக சிவாலயங்களில் தேவாரம் திருவனந்தல் (காலை 5 மணிமுதல் 6 மணி வரை) காலை சந்தி (மணி 8 முதல் 9 வரை) உச்சிக்காலம் (11.30 மணி முதல் 12.30 மணி வரை) சாயரட்சை (பிற்பகல் 4 முதல் 6 மணி வரை) மற்றும் அர்த்தசாமம் (இரவு 9 மணி முதல் 10 மணி வரை) ஆகிய ஐந்து காலங்களில் ஓதுவார்களால் ஓதப்பட்டு வருகின்றன.

இந்த ஐந்து காலங்களில் சாயரட்சை மிகவும் முக்கிய நேரமாகும். 5.30 மணி அளவில் வேதபாராயணம் மற்றும் தேவாரப் பதிக ஓதுதலோடு தீபாராதனை நடை பெறும்.

*1. இணைப்பு 14.
*2. இவை வரைபடத்தில் முன்னுரைக்கு முன்னே கொடுக்கப்பட்டுள்ளது.



தருமபுரம் ப. சுவாமிநாதன்.

இறைவனைத் துயில் எழுப்பும் வகையில் வைகறையில் திருப்பள்ளியெழுச்சி பாடப்பெறும். இறைவன் பல்லக்கில் சில முறை வலம் வந்தபிறகு கர்ப்பகிரகத்திற்கு எழுந்தருளுவார். இம்முறை சில ஆலயங்களில் மட்டும் கடைப்பிடிக்கப்படுகிறது. இதைப்போலவே அர்த்த சாமப் பூசையில், இறைவன் பல்லக்கில் சிலமுறை வலம் வருவார். பிறகு பள்ளியறைக்குத் திரும்புவார். ஓதுவா மூர்த்திகளால் பொன்னூசல் ஆட்டப்பெறும். பொன்னூசல் என்பது இறைவனை துயில்விக்கப்பாடும் தாலாட்டு முறையில் அமைந்ததாகும்.

திருப்பள்ளியெழுச்சி மற்றும் பொன்னூசல் பாடல்களை ஓதுவாமூர்த்திகள் பாடுவர். சில ஆலயங்களில் பொன்னூசல் பாடப்பெறுவது இல்லை.

ஆலயங்களில் பஞ்சபுராணம் பாடுவது என்பது ஒரு முக்கிய மரபாகும். பஞ்ச புராணம் பாடப்படாத ஆலயம் இல்லை எனலாம். பொதுவாக எல்லா ஆலயங்களிலும் சாயரட்சை பூசையின்போது ஒவ்வொரு நாளும் பஞ்சபுராணம் ஓதப்பெறும். ஒரு சில ஆலயங்கள் இதற்கு விலக்காகவும் இருக்கலாம். மயிலை அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலயத்தில் ஒவ்வொரு நாளிலும் சாயரட்சைப் பூசையின்போது பஞ்சபுராணம் ஓதப்படுவதில்லை. திருவிழாக் காலங்களில் மட்டும் பஞ்சபுராணம் ஓதப்படுகிறது.

பஞ்சபுராணத்தின் தோற்றம் எப்படி ஏற்பட்டது என்பது தெரியவில்லை. இது ஒரு மரபாகப் பயின்று வருவதாக ஓதுவாமூர்த்திகள் கூறுகிறார்கள். சோடச உபசாரத்தின்போது பஞ்சபுராணம் ஓதப்படவேண்டும். பஞ்சபுராணம் என்பது திருமுறைகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட ஐந்து பாடல்களாகும்.

அவையாவன:

1. மூவர் பாடிய ஏழு திருமுறைகளிலிருந்து ஒருபாடல்.
2. எட்டாவது திருமுறையான திருவாசகத்திலிருந்து ஒரு பாடல்.
3. ஒன்பதாவது திருமுறையான திருவிசைப்பாவிலிருந்து ஒரு பாடல்.
4. ஒன்பதாவது திருமுறையான திருப்பல்லாண்டிலிருந்து ஒரு பாடல்.
5. பன்னிரண்டாம் திருமுறையான பெரிய புராணத்திலிருந்து ஒரு பாடல்.

பஞ்சபுராணத்தில் மூன்றும், நான்குமான பாடல்கள் ஒரே திருமுறையிலிருந்து தேர்வு செய்யப்படுகின்றன. இவ்வைந்து பாடல்களில் ஒன்றுக்கு மட்டுமே புராணம் என்ற பெயர் இருக்கும்போது, பஞ்சபுராணம் மட்டும் என்ற பெயர் ஏன் ஏற்பட்டது என்பது இன்னும் விடை காணவேண்டிய ஒன்று.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தம் படைப்பான மாயூரபுராணத்தில் பஞ்சபுராணத்தின் ஐந்து பாடல்களை வரிசைப் படுத்தியிருக்கக் காண்கிறோம். சிவாலயதரிசனப் படலத்தில் அப்பாடல் இடம் பெற்றுள்ளது.

நிறையருட் பாடலாகி நிரம்பு தேவாரம்யாரு
மறைதிருவாசகஞ்சீரமை யிசைப்பா பல்லாண்டு
குறைதவிர் புராணமின்ன கொண்டுறத்துதித்தல் செய்து
மறைபுகல் விபூதிமேனி வளைந்திருகையா லேற்று.1

1. மீனாஷி சுந்தரம்பிள்ளை, "மாயூரபுராணம்", பக்கம்-189.

திரு ஆறுமுக நாவலர் (1822) தம் நூலில் இந்த ஐந்து பாடல்களை இணைத்துப் பஞ்சபுராணம் பாடும் வழக்கத்தை ஏற்படுத்தியதாகவும், பஞ்சபுராணம் ஓதும் மரபை அவரே தோற்றுவித்தவர் எனவும் கருதப்படுகிறது.*1

## தருமபுரம் திரு. ப.சுவாமிநாதன்

தருமபுரம் திரு.ப. சுவாமிநாதன் அவர்கள் செங்குந்த முதலியார் குலத்தில் 29.5.1923 அன்று பிறந்தவர் ஆவார். திரு. பஞ்சநத முதலியார் மற்றும் பார்வதி அம்மையார் இவருடைய தாயும் தந்தையுமாவர். தஞ்சை மாவட்டம் நன்னிலம் இவர் பிறந்த ஊராகும்.*2

### தேவாரப் பயிற்சி

தருமபுரம் குருமகா சந்நிதானத்தில் இவர் பயின்றவர் ஆவார். தம்முடைய 19வது வயதில் திருப்பனந்தான் மடத்துத் தம்பிரான் ஒருவரிடம் இவர் ஆரம்பப் பயிற்சி பெற்றார். அங்குள்ள தேவாரப் பாடசாலையில் சேர்ந்து 1942 ஆம் ஆண்டு முதல் 1947 முடிய திருமுறைக் கலாநிதி திரு வேலாயுத ஓதுவாரிடம் தேவாரம் பயின்றார். பிறகு 1947 முதல் 1951 ஆம் ஆண்டு முடிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பேராசிரியர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, மதுரை சுப்பிரமணிய முதலியார், மன்னார்குடி ராஜகோபாலப் பிள்ளை, மன்னார்குடி வைத்தியலிங்கம் போன்ற இசையாசிரியர்களிடம் கர்நாடக சங்கீதத்தை முறைப்படி கற்றுக் கொண்டார்.

### பணி:

தருமபுரம் ஆதீனத்தில் தேவார ஆசிரியராக 16 ஆண்டுகள் பணியாற்றினார். 1968 ஆம் ஆண்டில் தம் பணியிலிருந்து விலகி சென்னை வந்து அருள்மிகு அகத்திய ஆலயப் பக்தர்களுக்காக “திருமுறை வழிபாட்டுத் திருக்கூட்டம்” தொடங்கினார். இன்றுவரை 208 வழிபாட்டுத் திருக்கூட்டங்களை நிகழ்த்தியுள்ளார். ஆலயங்களில் முக்கியத் திருவிழாக்களில் இவருடைய திருமுறை இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### சிறப்புகள்

அ. தமிழ்நாடு அரசு 1975 இல் ‘கலைமாமணி’ பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

ஆ. தமிழ் இசைச்சங்கம் 1986இல் “இசைப் பேறிஞர்” பட்டம் வழங்கியுள்ளது.

இ. குன்றக்குடி அடிகளார் “பண்ணிசைமணி” பட்டம் வழங்கியுள்ளார்.

ஈ. மதுரை ஆதீனத்தின் “திருமுறை திலகம்” பட்டம்.

உ. சண்முகன் அடியார் சங்கம் “திருமுறை இசைக்கடல்”. திருக்கழுக்குன்றத்தில் நடைபெறும் திருஞானசம்பந்தர் இசைவிழா வழங்கியுள்ள தேவார “தமிழ் இசைத்தென்றல்” பட்டம்.

ஊ. 2.7.1942 முதல் 2.7.1947 முடிய இசைப்பயிற்சி பயின்றமைக்காக தருமபுரம் ஆதினம் வழங்கியுள்ள “தேவார இசை மணி” பட்டம்.

எ. குன்றத்தூர் தமிழகத் தெய்வப் பேரவையின் “திருத்தொண்டர் மாமணி” பட்டம்.

*1. எஸ்.கே. சிவபாலன், “பண்ணிசை தத்துவம்”, பக்கம்-90.

*2. தருமபுரம் திரு. ப. சுவாமிநாதருடன் நேர்காணல், 27.10.1993, சென்னை.



காஞ்சீபுரம் ஆ. விநாயக முதலியார்.

இவையன்றி தருமபுரம் சுவாமி நாதன் அவர்கள் பல பதக்கங்கள், சான்றிதழ்கள், பொற்கிழிகளைப் பெற்றுள்ளார்கள்.

மாணவர்களுக்குத் தேவாரத் திருமுறைகளைப் பயிற்றுவிக்க ஒரு அறக்கட்டளை அமைத்து நடத்தி வருகிறார். தமிழிசைச் சங்கம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் நிகழ்த்திவரும் பண் ஆராய்ச்சி மாநாடுகளில் பங்கேற்று வருகிறார். சென்னை வானொலி நிலையம் இவரை முதல் தர இசைக் கலைஞராக அங்கீகரித்துள்ளது. சென்னைத் தொலைக் காட்சியில் பல திருமுறை இசை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்.

## காஞ்சீபுரம் திரு ஆ. விநாயக முதலியார்

1919 ஆம் ஆண்டு கதிர்காமத்தில் செங்குந்த முதலியார் குலத்தில் தோன்றியவர் திரு ஆ. விநாயக முதலியார். இவர்தம் தந்தையார் திரு ஆறுமுக முதலியார், ஓதுவார் இல்லை; அவர் ஒரு நெசவாளி.*1

*பயிற்சி:*

20 ஆண்டுக்காலம் இவர் இசையைக் கற்றுக் கொண்டார். வீணா தனம்மாள் அவர்களின் சீடனான சைதை முனுசாமி பண்டிதரிடம் இவர் பத்தாண்டுக் காலம் கர்நாடக இசையைக் கற்றுக் கொண்டார். தம் 15 வயதில் நெல்லை சுந்தரமூர்த்தி ஓதுவாரிடம் மாணவராகச் சேர்ந்து பத்தாண்டுகாலம் தேவாரம் பயின்றார்.

*பணி:*

காஞ்சி தேவாரப் பாடசாலையில் பயிற்சியாசிரியராக 1935 ஆம் ஆண்டு முதல் 1950 முடிய பயின்றார். ஞானப் பிரகாசகர் மடத்தில் வகுப்புகள் நடத்தி வருகிறார். தேவாரம் கற்பித்தலோடு கர்நாடக இசையையும் பயிற்றுவிக்கிறார். ஹார்மோனியம் வாசிக்கவும் கற்றுத் தருகிறார்.

*சிறப்புகள்:*

தமிழ்நாடு அரசின் இயல் இசை மன்றம் 1983-இல் "கலைமாமணி" விருது வழங்கிச் சிறப்பித்தது.

தருமபுரம் ஆதீனம் 1985 இல் "திருமுறைக்கலாநிதி" விருது வழங்கியது.

1989 இல் திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் இசை விழாவில் "தமிழிசைத் தென்றல்" பட்டம் வழங்கப்பட்டது.

குன்றத்தூர் தமிழகத் தெய்வச் சேக்கிழார் மன்றம் "திருத்தொண்டர் மாமணி" பட்டம் வழங்கியது.

நாடறிந்த தமிழறிஞர்களான திரு. அருணை வடிவேல் முதலியார் அவர்களும், திரு வஜ்ஜிரவேல் முதலியார் அவர்களும் "திருநெறித் தமிழிசை வேந்தர்" பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர்.

*1. திரு. விநாயக முதலியாருடன் நேர்காணல், 2.7.1994, காஞ்சிபுரம்.

12 மாணவர்களுக்கு நாள்தோறும் மாலை 5 மணிமுதல் இரவு 8 மணி வரை தேவார வகுப்புகளை நடத்தி வருகிறார், தேவாரப் பாக்கள் பாடப்பெற்ற வரலாற்றையும் விவரிக்கிறார்.

"மூவர் தேவாரம்" இவர் பாடி, ஒலிநாடாவாக அண்மையில் வெளியிடப் பெற்றுள்ளது. சென்னை வானொலி நிலையத்தின் முதல் தர இசைக் கலைஞராக விளங்கும் இவர் சென்னைத் தொலைக் காட்சியில் பல இசை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்.1

## குடந்தை திரு. வெ. இலட்சுமணன்

நகரில் நேரில் கண்டு உரையாடிய ஓதுவா மூர்த்திகளில் இவர் ஒருவரே பிராமணர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. திருச்சிக்கு அருகில் உள்ள ஆறுபாதி கிராமத்தில் 1932இல் பிறந்த இவர் தெலுங்கு பிராமணர் குலத்தைச் சேர்ந்தவர்.*1

### *பயிற்சி*

இவருடைய தந்தை திரு. வெங்கட்ராம ஐயர் அவர்கள் ஒரு ஆங்கிலக் கம்பெனியில் பணிபுரிந்தவர். தம்முடைய சொந்த ஆர்வத்தின் பேரில் இவர் தேவாரத்தைக் கற்றுக் கொண்டார். தருமபுரம் ஆதீனத்தில 1953 முதல் 1958 முடிய தேவாரம் பயின்றார். கர்நாடக இசையிலும் இவர் வல்லுநரானார்.

### *பணி:*

தருமபுர ஆதீனத்தில் தேவார வகுப்புகள் நிகழ்த்தி வருகிறார். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஏற்பாடு செய்த தேவாரப் பயிற்சி வகுப்புகளிலும் பங்கு கொண்டு தேவாரம் பயிற்றுவித்து வருகிறார்.

### *சிறப்புகள்:*

தருமபுரம் ஆதீனம் வழங்கியுள்ள "தேவார இசைமணி" பட்டத்தைப் பெற்றுள்ளார்.

"பஞ்சசபைத் தலங்கள்" மற்றும் "பஞ்ச பூதத் தலங்கள்" என இரு ஒலி நாடாக்கள் இவரால் பாடப் பெற்றுள்ளன.

இரண்டாம் நிலை இசைக் கலைஞராக சென்னை வானொலி நிலையம் அங்கீகரித்துள்ள இவர், தொலைக் காட்சியிலும் நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார். கர்நாடக இசையில் வல்லுநராக விளங்கிய போதும், தேவார இசை நிகழ்ச்சிகளையே இவர் நிகழ்த்தி வருகிறார்.

டெல்லி, பம்பாய், கர்நாடகம், கேரளம் ஆகிய இடங்களில் இவருடைய தேவார இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

*1. குடந்தை திரு. வெ. இலட்சுமணருடன் நேர்காணல், 5.7.1994 சென்னை.



அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்.

## அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்

புகழ்வாய்ந்த அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம் சென்னையின் மையப்பகுதியான திருமயிலையில் அமைந்து விளங்குகிறது. இவ்வாலயம் தமிழில் 'திருமயிலைக் கபாலீச்சரம்' என வழங்கப்படுகிறது. இறைவி பார்வதிதேவி மயில் உருவாகி இறைவனை வணங்கியதாகக் கூறப்படுவதால் இவ்விடம் "மயிலாப்பூர்" என அழைக்கப்படுகிறது. பூம்பாவையை உயிர்ப்பித்துத் தந்த திருஞான சம்பந்தரின் தேவாரப் பாடல்களால் இத்திருத்தலம் அழியாப் பெருஞ்சிறப்பு பெற்றுள்ளது.

இப்போதுள்ள கபாலீசுவரர் ஆலயம் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இதற்கு முன்னிருந்த ஆலயம் கடற்கரையருகாக அமைந்திருந்து பின்னர் அழிவுபட்டதாக ஆங்கில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.*1

திருஞானசம்பந்தரின் திருப்பதிகத்தால் இவ்வாலயம் பாடல் பெற்ற தலமாகும்.

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"

இரு ஓதுவார்கள் இவ்வாலயத்தில் உள்ளனர். அவர்கள்

1. திரு லால்குடி எம். சுவாமிநாதன்,
2. திரு. சு. நாகநாதன்.

## திரு. லால்குடி எம். சுவாமிநாதன்

திரு லால்குடி சுவாமிநாதன் (27.11.1928 இல் பிறந்தவர்) ஓதுவார் மரபினர் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது. துணிவியாபாரம் செய்யும் ஒரு செட்டியார் குடும்பம் இவர் குடும்பமாகும். தம்முடைய ஆர்வத்தாலும், சுய முயற்சியாலும், அரும் உழைப்பாலும், முறையான குருகுலப் பயிற்சியாலும் இவர் ஓதுவார் ஆகியுள்ளார்.

### பயிற்சி:

தாம் பயின்ற குரு குலத்தில் தம் பத்தாவது வயதிலேயே (1935) பழநி சம்பந்தம் பிள்ளை அவர்களிடம் தேவாரப் பயிற்சியும், திரு மகாதேவ ஐயரிடம் கர்நாடக இசைப் பயிற்சியும் பெறும் பேறு பெற்றார். பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவராகச் சேர்ந்து மாபெரும் இசைமேதைகளான திருமிகு எம்.எம். தண்டபாணி தேசிகரிடமும், திருமிகு டி.கே. ரங்காச்சாரி அவர்களிடமும் இசை பயிலும் பேறு பெற்றார்.

*1. சு. இராஜசேகரன், கபாலீசுவரர் திருக்கோயில், 1990.

பணி:

4.10.1963 முதல் அருள்மிகு கபாலீசுவரர் ஆலய ஓதுவாராகப் பணியாற்றி வருகிறார்.

ஊதியம்:

தற்பொழுது ஒட்டுமொத்த மாத ஊதியமாக ரூபாய் 2,693/- இவருக்கு வழங்கப்பட்டு வருகிறது. அருள்மிகு கபாலீசுவரர் ஆலய தலைமை ஓதுவாராக விளங்கிவரும் இவர்தான் அரசு நியமன ஓதுவார்களில் அதிக ஊதியம் பெறுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்புகள்:

அ. அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் சங்கீத பூஷணம் விருதிற்குத் தகுதி பெற்றார். (1959-1962).

ஆ. தமிழக அரசு 1981 இல் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்தது.

இ. இந்தியக் குடியரசுத் தலைவர் வழங்கும் சங்கீத நாடக அகாதமி விருது பெற்றார்.

ஈ. இவருக்கு "இறையருட்பாடகர்" எனும் பட்டம் வழங்கப்பெற்றுள்ளது.

இவர் முப்பது மாணவர்களுக்குத் தேவாரம் வகுப்புகள் நடத்தி வருகிறார். அவர்களில் சிலர் பிராம்மணர் ஆவர். ஆலயத்தில் அவருடைய அலுவல் நேரம் காலை 5 மணி முதல் நண்பகல் 12.30 மணி ஆகும். சென்னை வானொலி நிலையத்தின் முதல்தர இசைக் கலைஞர் இவராவார். வெளிநாடுகள் பலவற்றிற்குச் சென்று வந்துள்ளார். அண்மையில் 1993 நவராத்திரியின்போது பாங்காக் சென்று ஆலயத் தமிழ் இசையைப் பரப்பி வந்துள்ளார். வெளிநாட்டுத் தமிழ் மக்களிடம் தேவார இசையைப் பரப்புவதில் தம் சிறப்பான பணி ஆற்றிவரும் இவர் தேவாரம், திருவாசகம், திருமுருகாற்றுப்படை ஒலிநாடாக்களை வழங்கியுள்ளார். *1

## திரு சு. நாகநாதன்

1949இல் தேசிகர் குலத்தில் தோன்றிய இவர் தமிழகத்தின் பழமையான திருக்களர் ஓதுவார் மரபைச் சேர்ந்தவர்.

பயிற்சி:

இதே ஆலயத்தில் பணி புரிந்தவரான தம் தந்தையார் திரு. சுந்தரேசுவர தேசிகரிடம் பயிற்சி பெற்றவர் இவர், அறநிலையத்துறையின் தெய்வீகப் பேரவை நடத்தி வந்த தேவாரப் பயிற்சி வகுப்புகளிலும் இவர் பயிற்சி பெற்றுள்ளார்.

பணி:

அருள்மிகு கபாலீசுவரர் ஆலய ஓதுவாராக 12.4.1978 அன்று பணியில் சேர்ந்தார். இவர்தம் தந்தையார் திரு. சுந்தரேசுவர தேசிகர் 1962 முதல் 1967 முடிய இதே ஆலய

*1. திரு. லரல்குடி எம். சுவாமிநாதனுடன் நேர்காணல், 2.11.1993, சென்னை.



சு. நாகநாதன்.

ஓதுவாராகப் பணியாற்றியுள்ளார். சுந்தரேசுவர தேசிகரின் முன்னோடி திரு. முருகைய தேசிகர் ஆவார்.

**ஊதியம்:**

தற்போது ஒட்டுமொத்த மாத ஊதியமாக ரூ.1,802/- இவர் பெற்று வருகிறார்.

தமிழக அரசு நடத்திவரும் அனாதை இல்லமான 'அன்பு இல்ல'த்தில் இவர் தினமும் காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் மாலை 5.00 மணி முதல் 6.00 மணிவரையிலும் தேவார வகுப்புகள் நடத்தி வருகிறார். ஆலயத்தில் அவருடைய அலுவல் நேரம் காலை 4.00 மணி முதல் 10 மணி ஆகும். தமிழிசை விழாவில் கலந்து கொள்வதற்காக இவர் மலேசிய நாட்டிற்கு இருமுறை சென்று வந்துள்ளார்.

லால்குடி சுவாமிநாதன் திருக்களர் நாகநாதன் ஆகிய இவ்விரு ஓதுவாமூர்த்திகளும் ஆலயத்திற்கு அருகிலேயே உள்ள ஆலய வசிப்பிடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

கபாலீசுவரர் ஆலயத்தில் தினமும் ஓதுவாமூர்த்திகளால் ஓதப்பட்டு வரும் பாடல் விவரம் பின்வருமாறு:

| 1. பிள்ளையார் சந்நிதி | | பாடல் |
|---|---|---|
| அ. திருவனந்தல் | (காலை 5-6) | பண் வியாழக்குறிஞ்சி - முதல் திருமுறை - திருஞானசம்பந்தர். |
| ஆ. காலைசந்தி | (காலை 8-9) | "பிடியதன் உருவுமை கொளமிகு கரியது" |
| இ. உச்சிகாலம் | (11.30-12.30) | "வானுலகும் மண்ணுலகும்" -பதினோராம் திருமுறை. |
| ஈ. சாயரட்சை | (மாலை 4-6) | "திகடசக்கரம்"-கச்சியப்ப சிவாசாரியார். |
| உ. அர்த்தசாமம் | (இரவு 9-10) | -இப்பாடல்கள் கம்பீரநாட்டை ராகத்தில் விருத்தமாகப் பாடப் பெறும். |

| II. சுவாமி சந்நிதி | | பாடல் |
|---|---|---|
| அ. காலைசந்தி | - | தேவாரம்-1 |
| ஆ. உச்சிகாலம் | | தேவாரம்-1 |
| ஈ. சாயரட்சை | | பஞ்சபுராணம் (தேவாரப்பாடல் ஒன்று திருவாசகம் ஒன்று, திருவிசைப்பா ஒன்று, திருப்பல்லாண்டு ஒன்று, பெரியபுராணப் பாடல் ஒன்று.) |
| ஈ. அர்த்த சாமம் | | தேவாரம்-1 |

| III. அம்பாள் சந்நிதி | | பாடல் |
|---|---|---|
| அ. திருவனந்தல் | | திருப்பள்ளியெழுச்சி ஒன்று தேவாரம் ஒன்று (பண்-புறநீர்மை) |
| ஆ. காலைசந்தி | | அபிராமி அந்தாதி |

| | |
|---|---|
| இ. உச்சிகாலம் | அபிராமி அந்தாதி |
| ஈ. சாயரட்சை | பிள்ளைத்தமிழ் |
| உ. அர்த்த சாமம் | அபிராமி அந்தாதி |

பள்ளியறையில் பொன்னூசல் பாடப்பெறும்

## IV. சுப்பிரமணியர் சந்நிதி பாடல்

| | |
|---|---|
| அ. காலை சந்தி | கந்தரலங்காரம் ஒன்று |
| ஆ. உச்சிகாலம் | கந்தர் அனுபூதி ஒன்று |
| இ. சாயரட்சை | பிள்ளைத் தமிழ் ஒன்று |
| ஈ. அர்த்த ச்சாமம் | கந்தரனுபூதி ஒன்று |

## V. சுவாமி சந்நிதி பாடல்

| | |
|---|---|
| அ. நடராசர் | தில்லைப் பாடல் ஒன்று |
| ஆ. சோமாஸ்கந்தர் | தேவாரம் ஒன்று |
| இ. அம்பாள் | அபிராமி அந்தாதி |
| ஈ. சுப்பிரமணியர் | கந்தரலங்காரம் அல்லது கந்தரனுபூதி |
| உ. ஆறுமுகர் | கந்தரனுபூதி ஒன்று |
| ஊ. நால்வர்<br>திருஞான சம்பந்தர்<br>திருநாவுக்கரசர்<br>சுந்தரர்<br>மாணிக்கவாசகர் | "பூழியர்கோன் வெப்பு ஒழித்த"-உமாபதி சிவாச்சாரியார்தம் பாடல் விருத்தமாகப் பாடப்பெறும். |
| எ. தட்சிணாமூர்த்தி | தட்சிணாமூர்த்தி மற்றும் நமசிவாயத் திருப்பதிகம் ஒன்று |
| ஏ. அறுபத்திமூன்று நாயன்மார்கள் | சுந்தரர் பாடியுள்ள திருத்தொண்டத் தொகையிலுள்ள பாடல் ஒன்று |
| ஐ. சேக்கிழார் | சேக்கிழார் பாடல். |

## வெளிப்பிரகாரத் தெய்வங்கள்

| | |
|---|---|
| அ. பழநியாண்டவர் | கந்தரலங்காரம் அல்லது கந்தர் அனுபூதி ஒன்று. |
| ஆ. வாயிலார் நாயனார் | "மறவமையான் அமைத்த" சேக்கிழாரின் பெரிய புராணத்திலுள்ள வாயிலார் பாட்டு. |
| இ. அருணகிரி நாதர் | திருப்புகழ் ஒன்று, கந்தரனுபூதி |
| ஈ. அங்கம்பூம்பாவை | "மட்டிட்ட புன்னையங் கானல்"- திருஞான சம்பந்தர் இரண்டாம் திருமுறை- சீகாமரப் பண். |
| உ. புன்னை வனநாதர் | "கானமர் சோலை" - திருஞான சம்பந்தர் - இரண்டாம் திருமுறை - சீகாமரப் பண். |

| | |
|---|---|
| ஊ. சனீசுவரர் | கோளறு பதிகப்பாடல் ஒன்று. |
| எ. சுந்தரேசுவரர் | தேவாரம் ஒன்று. |
| ஏ. நவகிரகம் | கோளறு·பதிகப்பாடல் ஒன்று. |
| ஐ. ஜகதீசுவரர் | தேவாரம் ஒன்று. |
| ஒ. அண்ணாமலையார் | அண்ணாமலைப் பதிகப் ப்ாடல் ஒன்று. |

இப்பாடல்கள் யாவும் சாயரட்சையின்போது பாடப்பெறுகின்றன.

## திருவிழாக் காலங்களில் ஓதுவார் பணி

பங்குனி உத்திரப் பெருவிழா, அறுபத்துமூவரின் திருநட்சத்திர விழா, பிரதோசம், கிருத்திகை, ஆடிப்பூரம், ஆவணி மூலம், சஷ்டி, நவராத்திரி, திருமுறை விழா, திருக்குட நீராட்டு ஆகியன ஆலயத் திருவிழாக்களாகும். இவ்விழாக் காலங்களில் ஓதுவா மூர்த்திகளால் பல்வேறு தெய்வப் பாடல்கள் பாடப்பெறுகின்றன.

1. அறுபத்துமூவர் விழாவில் திருத்தொண்டத்தொகை பாடப்பெறுகிறது.
2. பிரதோச காலங்களில் ஓதுவார்கள் ஆலயத்தை மும்முறை வலம் வருவார்கள். திருஞான சம்பந்தர் அருளிய "வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்" பாடலைப் பியந்தை காந்தாரப் பண்ணில் முதற்சுற்றின்போது பாடுவர். "அங்கணன் கயிலை யாக்கும்" பா·டலை இரண்டாம் சுற்றில் பாடுவர். மூன்றாவது சுற்றில் ஏதாவதொரு தேவாரப் பாடலைப் பாடுவர்.
3. முருகன் புகழ்ப்பாடல்கள் கிருத்திகையில் பாடப்பெறும்.
4. ஆடிப்பூரம், ஆவணி மூல விழாக்களில் அபிராமி அந்தாதிப் பாடலும், மதுரைத் திருத்தலப்பாடலும் பாடப்பெறும்.
5. நவராத்திரியின் போது பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் பாடப்பெறும்.
6. சஷ்டியின் போது கந்தரலங்காரத்திலிருந்தும், கந்தர் அனுபூதியிலிருந்தும் முருகன் புகழ்ப் பாக்கள் பாடப்பெறும்.
7. ஆவ:ணி மாதத்தில் பன்னிரு திருமுறை விழா 13 நாட்கள் நடைபெறும். பன்னிரு நாட்களிலும் வரிசை முறைப்படி திருமுறைப் பாடல்கள் பாடப்பெறும். இறுதி பதின்மூன்றாவது நாளில் எல்லாத் திருமுறையிலிருந்தும் பாடல்கள் பாடப்பெறும். மற்ற ஆலய ஓதுவார்களும் கலந்து கொண்டு திருமுறைப் பாராயணம் செய்வர்.

லட்சார்ச்சனை நடைபெறும்போது காலையில் இரண்டு மணி நேரமும், மாலையில் இரண்டு மணி நேரமும் வயலின், மிருதங்கம் மற்றும் பக்க வா,த்தியங்களுடன் தேவாரம் இசைக்கப்பெறும்.

ஒவ்வொருநாளும் சோடச உபசாரத்தின் (16 offerings) போது பஞ்சபுராணம் இசைக்கப்பெறும்.

வீதியுலாவின்போது பல்லாக்கில் அடியார்களால் இறைவுலா நிகழ்த்தப்பெறும். ஓதுவார்கள் இறைவனின் பின்பாக வயலின், மிருதங்கம் மற்றும் பக்க வாத்தியங்களோடு தேவாரம் பாடிக்கொண்டு செல்லுவர்.

திருஞான சம்பந்தர் விழாவின்போது திருஞான சம்பந்தரின் தேவாரத்தையும், சுந்தரர் திருநட்சத்திர உற்சவத்தின்போது சுந்தரர் தேவாரத்தையும் ஓதுவாமூர்த்திகள் பாடுவர்.

மேலும், வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் ஒரு குறிப்பிடத்தக்க பாடல் பாடப்பெறுவதும் இவ்வாலயத்தில் சிறப்பாகும்.

| நாள் | பாடல் |
|---|---|
| திங்கள் | மதுரைத் திருத்தலப்பாட்டு |
| செவ்வாய் | முருகன் பாட்டு |
| புதன் | தேவாரம் |
| வியாழன் | நமச்சிவாயத் திருப்பதிகம் |
| வெள்ளி | அம்பாள்பாட்டு |
| சனி | திருநள்ளாறுப்பாட்டு |
| ஞாயிறு | தேவாரம் |

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் பிரம்மோற்சவம் கொண்டாடப்படுகிறது. பத்து நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழாவின்போது ஒவ்வொரு நாளும் ஓதுவாரால் பாடப்பெறும் பாடல் விவரம் பின்வருமாறு:

| நாள் | | பாடல் |
|---|---|---|
| முதல்நாள் | கொடியேற்றம் கொடிப்பாட்டு | - "படைமலிந்த மழுவாளும் மானுந்தோன்றும், பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை"<br>- திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம்<br>- ஆறாம் திருமுறை |
| இரண்டாம் நாள் | வாகனம்-சூரியசந்திரன் | - "சந்திரனை மாகங்கைத் திரையில் மோதச் சடாமகுடத் திருத்துமே"<br>- திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை |
| மூன்றாம் நாள் | வாகனம்-புதன்பூதகி | - "வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளையெருதேறிப் பூதஞ்சூழப் பொலியவருவார் புலியின்உரி தோலார்"<br>- பண் தக்கேசி<br>- திருஞானசம்பந்தரின் முதல் திருமுறை |
| நான்காம் நாள் | வாகனம் - நாகம் | - "முற்றாலமையின நாகமோ டேனமுளைக் கொம்பவை பூண்டு"<br>- பண்-நட்டபாடை<br>- திருஞான சம்பந்தரின் முதல் திருமுறை |



பங்குனி உத்திரப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் ஓதுவார் கோஷ்டி.

| | | |
|---|---|---|
| ஐந்தாம் நாள் | வாகனம் - ரிஷபம் | - "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி"<br>- பண்-நட்டபாடை<br>- திருஞானசம்பந்தரின் முதல் திருமுறை |
| ஆறாம் நாள் | வாகனம் - யானை | - "அரியானை அந்தணர்தம் சிந்தையானை"<br>- திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம்<br>- ஆறாம் திருமுறை |
| ஏழாம் நாள் | தேர்த்திருவிழா | - " |
| எட்டாம் நாள் | அறுபத்துமூவர் விழா | - திருத்தொண்டர் புராணப்பாடல்கள் |
| ஒன்பதாம் நாள் | பிச்சாண்டவர் ஊர்வலம் | - "பிச்சைக்கொள நுகர்வ" |
| பத்தாம் நாள் | - பங்குனி உத்திரப் பெருவிழா | - "மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலை"<br>- திருஞானசம்பந்தர். |

## அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடக்குத் தமிழகம் தொண்டை நன்னாடு என வழங்கப்பட்டு வருகிறது. அது முன்னாளில் இருபத்திநான்கு கோட்டங்களாகப் பிரிவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ஒன்று புலியூர் கோட்டமாகும். பெரியபுராண ஆசிரியரான சேக்கிழார் பிறந்த குன்றத்தூர், புலியூர் கோட்டம் சார்ந்த பகுதியாகும். அந்தப் புலியூரே இப்போது கோடம்பாக்கம் என வழங்கப்பட்டுவருகிறது.

வடபழநியில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் வடபழநியாண்டவர் என்று அழைக்கப்படுகிறார். தமிழகத்தின் தெற்குப் பகுதியிலுள்ள ஆவினன்குடி ஏற்கனவே பழநி என பிரசித்திபெற்று விளங்குவதால், வட தமிழகத்தில் அமைந்து விளங்கும் இம்முருகர் ஆலயம் வடபழநி என அழைக்கப்பட்டுவருகிறது.

அண்ணாசாமி நாயகர், ரத்தினசாமி செட்டியார் மற்றும் பாக்கியலிங்கத்தம்பிரான் ஆகிய மூன்று துறவிகள் வடபழநி ஆலயம் உருவாகி வளரக் காரணம் ஆவர். இம்மூவரும் தங்கள் நாவினைப் பாவாடம் செய்து முருகனுக்கு அர்ப்பணித்து அருஞ்செயல் புரிந்தவர் ஆவர். இம்மூவரும் வருங்காலத்தைக் குறியுணர்வால் உணர்த்தி அதனால் மக்களின் பிரசித்திக்கு ஆளானார்கள்.

அண்ணாசாமி நாயகர் பழநியிலிருந்து ஒரு முருகர் படம் வாங்கி வந்து அதை ஒரு சிறிய கொட்டகையில் அமைத்து ஆலயத்தை தோற்றுவித்தார். அவருடைய சீடர் ரத்தினசாமி செட்டியார் ஆலயம் அமைத்தார். அவருடைய சீடர் பாக்கிலியலிங்கத்தம்பிரான் இன்றுள்ளதுபோல் கற்கட்டிடம் அமைய காரணமானார்.

இம்மூவருடைய சமாதிகளும் இன்றுள்ள ஆலயத்திற்குத் தென்கிழக்குத் திசையில் அமைந்து விளங்குகின்றன. பாக்கியலிங்கத் தம்பிரான் காலத்தில்தான் வடபழனியாண்டவர் ஆலயம் பிரசித்தி பெற்றது. இவ்வாலயம் சுமார் **130** ஆண்டு பழமை வாய்ந்ததாகும். *1

1963ல் ஆறுமுக ஓதுவார் நியமிக்கப்படுவதற்கு முன்பாக இவ்வாலயத்திற்கு ஓதுவாமூர்த்திகள் இல்லை.

தற்போது இரு ஓதுவாமூர்த்திகள் பணியில் இருந்து வருகின்றனர். அவர்களாவர்.

1. திரு. ந. ஆறுமுக ஓதுவார்.
2. திரு. சா. சாமி தண்டபாணி.

## திரு. நா. ஆறுமுக ஓதுவார்

1937 இல் பிறந்த இவர் செங்குந்த முதலியார் வகுப்பைச் சேர்ந்தவராவார். திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்தைச் சேர்ந்த தேசிமுகப் பேட்டையில் ஒரு நெசவாளர் குடும்பம்பத்தில் தோன்றியவர் இவர்.

### பயிற்சி:

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் தேவாரப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த தம் தந்தை திரு. நடேச முதலியாரிடம் இவர் தேவாரம் கற்றுக் கொண்டார். நடேச முதலியார் காஞ்சீபுரம் நயினா பிள்ளை அவர்களிடம் கர்நாடக இசையைப் பயின்றவர் ஆவார்.

### பணி:

அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலய ஓதுவாராக **16.3.1963** முதல் திரு. ஆறுமுக ஓதுவார் பணியாற்றி வருகிறார்.

### சிறப்புகள்:

1. தமிழ்நாடு தெய்வீகப் பேரவை மயிலாடுதுறையில் நடத்திய தேவாரப் பயிற்சி வகுப்புகளில் **8.5.1969** முதல் **31.5.1969** முடிய பங்கு கொண்டு, சான்றிதழைப் பெற்றுள்ளார்.
2. தமிழ்நாடு அரசு **1983** இல் வழங்கிய கலைமாமணி பட்டம் பெற்றுள்ளார்.
3. திருஞான சம்பந்தர் இசைவிழாவில் "தேவாரத் தமிழிசைத் தென்றல்" பட்டம் பெற்றுள்ளார்.

திரு ஆறுமுக ஓதுவார் மாணவர்களுக்குத்தேவார வகுப்புகள் நடத்தி வருகிறார். தேவாரம் பாடல் கற்பிப்பதோடு, அவற்றின் விளக்கங்களையும் கூறித் தெளிவுபடுத்துகிறார். வடபழநியாண்டவர் ஆலயத்தில் அவருடைய பணிநேரம் மாலை **4.00** மணிமுதல் 10.00 மணி வரை ஆகும்.

*1. நா.ரா. முருகவேள், "ஸ்ரீ வடபழநி ஆண்டவர் கோயில் வரலாறு", **1964**.



ந. ஆறுமுக ஓதுவார்.

சென்னை வானொலி நிலையத்தாரால் இரண்டாம் நிலை இசைக் கலைஞராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். 'சண்முகக் கவசம்' ஒலிநாட வழங்கியிருப்பதோடு 15 ராகங்களில் பாம்பன் சுவாமிகளின் சண்முகக் கவசத்திற்கு இசையமைத்திருக்கிறார்.

ஆரம்பத்தில் கஞ்சீரமெனும் இசைக் கருவியை வாசிப்பவராக விளங்கி வந்த இவர் கடந்த 30 ஆண்டுகளாக முழுநேர ஆலய ஓதுவாராகப் பணியாற்றி வருகிறார்.1

## திரு. சா. சாமி தண்டபாணி

1955 ஆம் ஆண்டு தேசிகர் குலத்தில் பிறந்த திரு. சா. சாமி தண்டபாணி அவர்கள், ஓதுவார் பரம்பரையைச் சார்ந்தவர்.

*பயிற்சி:*

திருக்கடவூரில் வாழ்ந்திருந்த தம் தந்தையார் திரு சாமி அய்யா தேசிகரிடம் இவர் தேவாரம் பயின்றார். மயிலை தேவார பாட சாலையிலும் ஐந்தாண்டுக்காலம் திருக்களர் சுந்தரேஸ்வர தேசிகரிடமும் இவர் தேவாரம் பயின்றார்.

திரு சாமி தண்டபாணி அவர்கள் தேவார வல்லுநர் மட்டுமின்றி கர்நாடக இசையும் பயின்றுள்ளார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நான்காண்டுக் காலம் கர்நாடக இசை பயின்றார். மேலும் இசைப் பேரறிஞர் டாக்டர் எஸ். இராமநாதன் அவர்களிடம் இரு ஆண்டுகள் இசை பயின்றுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவருக்குக் கர்நாடக இசை பயிற்றுவித்த ஆசிரியர் திரும்பாம்புரம் சிவசுப்பிரமணியபிள்ளை ஆவார்.

*பணி:*

உறையூருக்கு அருகில் உள்ள திருமுக்கீச்சரம் ஆலயத்தில் ஓதுவாராக இரு ஆண்டுகளும், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திரிபுவன ஆலயத்தில் ஓதுவாராக ஆறு ஆண்டுகளும் பணிபுரிந்துள்ளார். வடபழநி ஆலய ஓதுவாராக 26.8.1987 முதல் பணியாற்றி வருகிறார்.

*ஊதியம்:*

அனைத்துப் படிகளுடன் ரூ.1,130 இவருக்கு மாத ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

*சிறப்புகள்:*

அ. மயிலை தேவார பாடசாலையில் 1970-1974 ஆண்டுகளில் தேவாரம் பயின்று "தேவார இசைமணி" பட்டம் பெற்றார்.

ஆ. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்றார்.

1. திரு. ஆறுமுக ஓதுவாருடன் நேர்காணல், 23.3.1993, வடபழநி.

திரு சாமி தண்டபாணி அவர்களின் பாட்டனார் தியாகராஜ தேசிகரும், திருவாரூர் பரம்பரையைச் சார்ந்த ஒதுவார் ஆவார்.

திரு சாமி தண்டபாணி அவர்களின் ஆலய அலுவல் நேரம் காலை 5.30 மணி முதல் மதியம் ஒரு மணி வரையிலும் ஆகும். தியாகராய நகரிலுள்ள தருமபுரம் மடத்தில் சுமார் பதினைந்து மாணவர்களுக்கு வாரத்தில் மூன்று முறை திருமுறை வகுப்புகளை நடத்தி வருகிறார்.1

## வடபழநி ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

பள்ளியறையில் தினமும் காலை 5.30 மணிக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடப்பெறும். திருப்பள்ளியெழுச்சி பாடப்பெற்ற பிறகு இறைவன் பல்லக்கில் பிரகாரத்தைச் சுற்றிவந்து, கர்ப்பகிரகத்திற்கு எழுந்தருளுவார். மாணிக்க வாசகர் அருளியுள்ள "போற்றியென் வாழ்முதலாகிய பொருளே" எனத் தொடங்கும் திருப்பள்ளியெழுச்சிப்பாடல் பூபாள ராகத்தில் (பண்-புறநீர்மை) விருத்தமாகப் பாடப்பெறும்.

காலைசந்தி பூஜையின்போது (காலை 6.00 மணி முதல் 6.30 மணி) திருப்புகழ்ப்பாடல் ஏதாவது ஒன்றும், கந்தரலங்காரம், அல்லது கந்தரனுபூதி பாடலும் பாடப்பெறும். இறுதியில் வடபழநி அந்தாதியிலிருந்து ஒருபாடல் பாடப்பெறும். காலை 6.30 மணிக்கு ஒதுவார்கள் தேவார, திருவாசகப் பாடல்களை ஒலிபெருக்கியில் பாடுவர்.

உச்சிகாலப் பூஜையின் போது (பகல் 12.30 மணி) முருகன் புகழ்போற்றும் திருப்புகழ்பாடல் ஒன்றும், வடபழநி அந்தாதிப் பாடல் ஒன்றும் பாடப்பெறும்.

| சாயரட்சை (மாலை 4.00 மணி) | பாடல் |
|---|---|
| 1. விநாயகர் சந்நிதி | விநாயகர்துதி |
| 2. மூலஸ்தானம் | திருப்புகழ் மற்றும் வடபழநி அந்தாதி |
| 3. நடராசர் | சிதம்பரத்தல தேவாரம். |
| 4. சொக்கநாதர் | மதுரையம்பதி தேவாரம் |
| 5. அம்பாள் | அபிராமி அந்தாதி அல்லது அம்பாள் பிள்ளைத்தமிழ் |
| 6. ஆறுமுகர் | வாழ்த்து-"உருவாய் அருவாய், உளதாய் இலதாய்." |

### அர்த்தசாமம்: (இரவு 9.30 மணி)

கந்தரலங்காரம் மற்றும் வடபழநி அந்தாதிப் பாடல் பாடப்பெறும்.

காலை கடைப்பிடிக்கப்பட்ட முறையே இரவிலும் பின்பற்றப்படும். பல்லக்கில் இறைவரைப் பிரகாரவலம் செய்வித்து பள்ளியறையில் சேர்ப்பர். பொன்னூசல் பாடப்பெறும். தாலாட்டு முறையில் இறைவரைத் துயிலுறுத்த பாடப்பெறும் பாடல் இது. "சீரார் பவளல்கள் முத்தன் கயிறாக" எனத் தொடங்கும் பாடல் நீலாம்பரி அல்லது ஆனந்தபைரவி ராகத்தில் பாடப்பெறும். 1

# திருவிழாக்கள்

வைகாசி விசாகப் பெருவிழா (பிரம்மோற்சவம்) இவ்வாலயத்தின் முக்கிய திருவிழாவாகும். ஒவ்வொரு ஆண்டும் பத்து நாட்கள் இத்திருவிழா கொண்டாடப்பெறும்.

சுவாமியைப் பல்லக்கில் ஏற்றி வீதிவலம் வருவர். ஊர்வலத்தின்போது ஓதுவார்கள் பஞ்சபுராணம், திருப்புகழ் மற்றும் வடபழநி அந்தாதிப் பாடல்களைப் பாடுவர்.

இத்திருவிழாவின்போது பாடப்பெறும் பாடல் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மங்கள விமானம் | - கொடியேற்றம் | "சேவுயருந்திண்கொடியோன் திருவடியே" -பண் மேக ராகக் குறிஞ்சி - திருஞான சம்பந்தர், முதல் திருமுறை. |
| யானை வாகனம் | | - "அடுத்தானை உரித்தானை அருச்சுனர்க்குப் பாசுபதம் கொடுத்தானை" - பண்காந்தாரம் - திருநாவுக்கரசர், நான்காம் திருமுறை |
| குதிரைவாகனம் | | - "நரியைக் குதிரை செய்வானும், நரகரைத் தேவு செய்வானும்" -பண்காந்தாரம் - திருநாவுக்கரசர் நான்காம் திருமுறை. |
| ரிஷப வாகனம் | | - "உயிராவணமிருந்துற்று நோக்கி" திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். |

வாகனமில்லாத நாட்களில் தேவாரம் ஓதப்பெறும் இறுதிநாள் கொடியிறக்கம் ஆகும். அன்று "கண்காட்டு நுதலானும், கனல் காட்டுங் கையாளும்" எனத்தொடங்கும் திருஞானசம்பந்தர் தேவாரம் (இரண்டாம் திருமுறை) பாடப்பெறும். பண்-சீகாமரம்.

பிரம்மோற்சவத்தின் முதல் மற்றும் கடைசி நாட்களில் நவசந்தி பூஜை நடைபெறும். குருக்கள் பண்களை ஓதுவாரிடம் கூறி, ஓதுவாரும் அப்பண்ணை முறைப்படி பாடுவார்.

| நாள் | சந்தி | பண் |
|---|---|---|
| 1. | பிரம்மா | மேகராகக்குறிஞ்சி |
| 2. | இந்திரன் | காந்தாரம் |
| 3. | அக்கினி | கொல்லி |
| 4. | யமன் | கௌசிகம் |
| 5. | நிருதி | நட்டபாடை |
| 6. | வருணன் | சீகாமரம் |
| 7. | வாயு | தக்கேசி |
| 8. | குபேரன் | தக்கராகம் |
| 9. | ஈசானம் | பஞ்சமம் |

வயலின், மிருதங்கம், சுருதிப் பெட்டி ஆகிய இசைக்கருவிகளும் பயன் படுத்தப்பெறும்.

மார்கழி மாதத்தில் (டிசம்பர்-ஜனவரி) திருவாதிரை விழா நடைபெறும். ஒன்பது நாள் கொண்டாடப்பெறும் இவ்விழாவின் இறுதிநாள் திருவாதிரை ஆகும். வீதிவுலாவின்போது மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்பெறும்.

முருகர் வீதிவலம் வருவார். சோடச தீபாராதனைக்குப்பிறகு ஓதுவார்கள் பஞ்சபுராணம் ஓதுவர். ஒவ்வொரு அர்ச்சனையின் முடிவிலும் கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி பாடல்பாடப்பெறும்.

கும்பாபிசேகத்தின்போது இறைவனுக்கு யாகசாலை பூஜை நடைபெறும். யாகம் தொடர்பான பாடல்கள் பாடப்பெறும். "ஓதிய ஞானமும் ஞானப்பொருளும் ஒளி சிறந்த வேதியர் வேதமும், வேள்வியுமாவன விண்ணும் மண்ணும்" எனத் தொடங்கும் பாடல் பாடப்பெறும்.

கீழ்காணும் விழாக்களின்போது பாடப்பெறும் பாடல்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| பிரதோசம் | - | தேவாரம் |
| தைப்பூசம் | - | தேவாரம் |
| கிருத்திகை | - | திருப்புகழ் |
| மாசிமகம் | - | தேவாரம் |

## அருள்மிகு கங்காதீசுவரர் திருக்கோயில்

பகீரதச் சக்கரவர்த்தி, தெய்வ கங்கையைப் பூமிக்கே கொண்டு வந்தார் எனவும், அக்கங்கை நதியே ஆலய வளாகத்தில் அமைந்திருக்கும் கிணற்றில் இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறது எனவும் ஆலயதலபுராணம் கூறுகிறது.

ஆகவேதான் இவ்வாலயம் அருள்மிகு கங்காதீசுவரர் ஆலயம் என வழங்கப்படுகிறது. சைவசமய குரவருள் ஒருவரான சுந்திரமூர்த்தி நாயனார் இவ்வாலயத்தின் பெருமையைப் போற்றும் வகையில் ஒரு தெய்வப் பாடலை (திருநாட்டுத்தொகை) பாடியுள்ளார். இங்கு எழுந்தருளியுள்ள இறைவி பங்கஜாம்பாள். இவ்வாலய நிர்வாகத்திற்கு உட்பட்டு 4 துணைக் கோயில்கள் புரசைவாக்கத்திலேயே உள்ளன. அவையாவன:

1. அருள்மிகு சுமுக விநாயகர் திருக்கோயில், சென்னை-84.
2. அருள்மிகு பாதாள பொன்னியம்மன் திருக்கோயில், சென்னை-84.
3. அருள்மிகு கற்பகவிநாயகர் திருக்கோயில், சென்னை-84.
4. அருள்மிகு சந்தான கணபதி திருக்கோயில், சென்னை- 84.

திருவரத ஓதுவார் அருள்மிகு சங்காதீசுவரர் ஆலய ஓதுவாராகப் பணியாற்றி வருகிறார்.

## திரு. சி. வரத ஓதுவார்

1934 இல் பிறந்தவரான திரு வரத ஓதுவார், காஞ்சீபுரத்தில் முதலியார் குலத்தில் பிறந்தவர் ஆவார். இவருடைய தந்தை திரு சிதம்பரம் அவர்கள் ஒரு கொத்தனார் ஆவார்.

*பயிற்சி:*

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த திரு பனப்பாக்கம் ருத்ரசுவாமி அவர்களிடமும், மயிலை திருக்கரை சுந்தரேஸ்வர தேசிகரிடமும் இவர் தேவாரம் பயின்றுள்ளார்.

*பணி:*

ஆரம்பத்தில் நெசவாளராகப் பணி புரிந்த இவர் தம்முடைய நாற்பத்தி நான்காம் வயதில் இவ்வாலய ஓதுவாராகப் பணியில் சேர்ந்துள்ளார். இவருக்குமுன் இவ்வாலய ஓதுவாராகத் திகழ்ந்தவர் திரு பார்த்தசாரதி ஆவார்.

*ஊதியம்:*

தம் மாத ஊதியமாக ரூ.1,210/- இவர் பெற்று வருகிறார்.

*சிறப்புகள்:*

"திருமுறை இசைவாணர்" என்ற பட்டம் இவர் பெற்றுள்ளார்.

திருவொற்றியூரில் இராமசாமி பிள்ளை அறக்கட்டளையால் நடத்தப்பட்டுவரும் ஒரு பாடசாலையில் இவர் தேவார வகுப்புகளை நடத்தி வருகிறார். காலை 9.45 மணி முதல் 10.45 மணி வரை ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கும் மாலை 2.45 முதல் 3.45 மணி வரை பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும் இவர் தேவாரம் கற்பித்து வருகிறார். பல இல்லங்களில் இவர் தமிழ்த் திருமணங்களை நடத்தியுள்ளார். ஆலயத்தில் இவருடைய அலுவல் நேரம் காலையில் 5.30 முதல் 7.30, 11.00 மணிமுதல் 11.30, மாலையில் 4.30 மணிமுதல் 7.30 பிறகு 8.00 மணி முதல் 9.30.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

விடிகாலை வேளையில் திருப்பள்ளியெழுச்சி பாடப்பெறும்.

| சந்நிதி | பாடல்கள் |
|---|---|
| அ. விநாயகர் | தேவாரம் |
| ஆ. முருகர் | கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், திருப்புகழ். |
| இ. நடராசர் | தேவாரம், திருவாசகம். |
| ஈ. சுவாமி | தேவாரம் |
| உ. அம்பாள் | அபிராமி அந்தாதி |

### உச்சிக்காலம்

| | |
|---|---|
| அ. மூலவர் | - தேவாரம் |
| ஆ. அம்பாள் | - அபிராமி அந்தாதி |

### சாயரட்சை

| | |
|---|---|
| அ. பிள்ளையார் | - தேவாரம், திருப்புகழ் |
| ஆ. முருகர் | - கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி |
| இ. நடராசர் | - தேவாரம், திருவாசகம் |
| ஈ. சுவாமி | - பெரியபுராணம் |
| உ. அம்பாள் | - அபிராமி அந்தாதி மற்றும் மீனாட்சி பிள்ளைத்தமிழ். |

### அர்த்தசாமம்

| | |
|---|---|
| அ. மூலவர் | - தேவாரம் |
| ஆ. அம்பாள் | - அபிராமி அந்தாதி |
| இ. பள்ளியறை | - தேவாரம், பொன்னூசல் |

வார நாட்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பாடல் குறிப்பிடத்தக்கதாகும்.

| நாள் | பாடல் |
|---|---|
| ஞாயிறு | தேவாரம் |
| திங்கள் | மதுரையம்பதி தேவாரம், கச்சி ஏகம்பம் |
| செவ்வாய் | தேவாரம் |
| புதன் | திருமுல்லைவாயில் தேவாரம் |
| வியாழன் | தேவாரம் |
| வெள்ளி | மதுரையம்பதி தேவாரம் |
| சனி | கோளறுபதிகம், திருநள்ளாறு தேவாரம் |

திருவிழாக் காலங்களில் தேவார இசை பாடப்படும்போது வயலின், மிருதங்கம், சுருதிப்பெட்டி பயன்படுத்தப்படும். இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட ஓதுவார்களும் வெளியிலிருந்து வந்து விழாக்களில் பங்கேற்பர்.1

## அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்

மூன்று பெரிய ஆலயங்கள் சென்னைக்கு ஆங்கிலேயர் (1621 AD) வருகை தருவதற்கு முன்பே மக்களால் நன்கு அறியப்பட்டு இருந்தன. அவற்றில் ஒன்று ஏகாம்பரேசுவரர் ஆலயம், மற்ற இரண்டு ஆலயங்கள் முத்தியாலுப்பேட்டையில் மல்லிகார்ச்சுனர் ஆலயமும், பெத்து நாயக்கன் பேட்டையில் அருள்மிகு சென்னை மல்லீசுவரர் ஆலயமும் ஆகும்.

காஞ்சி காமாட்சியின் பக்தர் ஒருவர் தற்போது ஜார்ஜ்டவுன் என்று அழைக்கப்படும் அப்போதைய இடையர் பாளையத்தில் இவ்வாலயம் அமைத்தாகத் தலவரலாறு கூறுகின்றது.

1. திரு. சி. வரத ஓதுவாருடன் நேர்காணல், 13.1.1994, அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயில், சென்னை.



அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்

அவ்வடியார் தினமும் காஞ்சி காமாட்சியை வழிபடுவதற்காக நாள்தோறும் சென்னையிலிருந்து காஞ்சிக்குச் சென்றுவந்தார். காமாட்சி வழிபாடு சில நாட்களில் தடைப்படவே சென்னையிலேயே தம் வழிபாட்டிற்காக அவர் இவ்வாலயத்தை அமைத்தார்.

திரு. H.D. லோவ் என்ற வரலாற்றாசிரியர் 600 வருடங்களுக்கு முன்பு ஆலிங்கல் பிள்ளை என்பவரால் தங்கசாலை தெருவில் ஏகாம்பரேசுவரர். ஆலயம் அமைக்கப்பட்டதாக எழுதியுள்ளார். ஆங்கில வணிகரிடம் மொழி பெயர்ப்பாளராக பணிபுரிந்த மக்கள் தொண்டரான ஆலங்காத்த பிள்ளை கி.பி.1680 இல் இவ்வாலயத்தைக் கட்டிக் கும்பாபிசேகம் நடத்தியுள்ளார்.

திருவல்லிக்கேணி ஜாம்பஜாரில் அவர் வாழ்ந்திருந்த தெருவிற்கு அவர் பெயர் இடப்பெற்று இன்றும் ஆலங்காத்த பிள்ளை தெருவென அழைக்கப்பட்டு வருகிறது. பிரிட்டீசார் 1773 இல் வெளியிட்ட வரைபடத்தில் ஏகாம்பரேசுவரர் ஆலய கோபுரம் இடம் பெற்றுள்ளது. இவ்வாலயம் விளங்கும் தங்க சாலைத் தெருவில் பிரிட்டீசாருக்குரிய தங்கசாலை 1680 ஆம் ஆண்டில் இருந்துள்ளது.1

திரு சண்முக தேசிகர் அருள்மிகு ஏகாம்பரேசுவரர் ஆலய ஓதுவாராகப் பணியாற்றி வருகிறார்.

## திரு து. சண்முக தேசிகர்

இவர் 1941 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் பிறந்தவர். இவர் தந்தை திரு துரைசுவாமி தேசிகர் ஒரு வைதீகர்.

*பயிற்சி:*

இவர் முதலில் வைத்தியலிங்க தேசிகரிடமும் பிறகு திருநெல்வேலி சுந்தர ஓதுவமூர்த்திகளிடமும் தேவாரம் பயின்றுள்ளார். 1992 இல் 3 மாதங்கள் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு தருமபுரம் சுவாமிநாதன், லால்குடி சுவாமி நாதன் மற்றும் நடராசன் ஆகியோரிடம் தேவார பாடங்களைக் கேட்டுள்ளார்.

*பணி:*

1962 இல் இவர் ஓதுவாராக நியமிக்கப்பட்டார். இவருக்குமுன் 1954 முதல் 1965 முடிய திரு வைத்தியலிங்க தேசிகர் ஓதுவாராகப் பணியாற்றினார்.

*ஊதியம்:*

ஒட்டுமொத்த மாத ஊதியம் ரூ.1,110/- ஓதுவாருக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

*1. பண்டித நடேசனார்; சென்னை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், 1988.

*சிறப்புகள்:*

தேவாரப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகளில் **3** மாத காலம் சிறப்புப் பயிற்சி பெற்றமைக்காக இவருக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டு உள்ளது.

இவர் சமய மற்றும் விசேச தட்சை பெற்றுள்ளார். ஆலயத்தில் இவருடைய அலுவல் நேரம் காலை **6** முதல் **8** மணி, மாலை **4.30** மணி முதல் **8** மணி.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

*காலைசந்தி:*

பள்ளியறையில் திருப்பள்ளியெழுச்சி பாடப்பெறும். சிவனார் சந்நிதியில் நால்வர் துதியும் பாடப்பெறும்.

*சாயட்சை:*

| | |
|---|---|
| அ. சுவாமி சந்நிதி | தேவாரம் |
| ஆ. அம்பாள் சந்நிதி | அபிராமி அந்தாதி |
| இ. நடராசச் சந்நிதி | தேவாரம் மற்றும் சேக்கிழாரின் பெரிய புராணம் |
| ஈ. உற்சவர் | மூவர் தேவாரம், மாணிக்கவாசகரின் திருவாசகம் மற்றும் பஞ்ச புராணம். |

ஒவ்வொருநாளும் இரவு **7** மணி முதல் **7.30** மணி வரை சிவநாம ஜெபம் (ஓம் நமசிவாய) செய்யப்பட்டு வருகிறது.

## திருவிழாக்களின்போது பாடப்பெறும் பாடல்கள்

### திருவிழாக்களின் பாடல்கள்

| | |
|---|---|
| 1. சித்திரையில் திருநாவுக்கரசர் விழா (ஏப்ரல்-மே) | திருநாவுக்கரசரின் அற்புத திருப்பதிகம். |
| 2. சித்திரா பௌர்ணமி (ஏப்ரல்-மே) | திருப்புகழ் |
| 3. ஆனித்திருமஞ்சனம் (ஜுன்-ஜுலை) நடராசர் திருவிழா | தேவாரம் |
| 4. ஆடிப்பூரம் (ஜுலை-ஆகஸ்ட்) | - அபிராமி அந்தாதி, தேவாரம் "ஆலந்தான் உகந்து" - பண் தக்கேசி சுந்தரர் - ஏழாம் திருமுறை. |
| 5. விநாயக சதுர்த்தி | - "கைத்தல நிறைகனி" - திருப்புகழ் |
| 6. கார்த்திகையில் அண்ணாமலை தீபம் (நவம்பர்-டிசம்பர்) | - திருஞானசம்பந்தர் தேவாரம் "உண்ணாமுலை" உமையாளொடு உடனாகிய ஒருவன்" |
| 7. திருவாதிரை விழா (மாணிக்கவாசகர்) | - திருவெம்பாவை |
| 8. சிவராத்திரி | - தேவாரம் |

திருவாதிரை விழாவின் இறுதி நாளில் தேவாரம், மற்றும் திருவாசகம் பாடப்பெறும்.

பங்குனி உத்திரப் பெருவிழா பத்துநாட்கள் நடைபெறும். அப்போது பாடப்பெறும் பாடல்கள்

| நாள் | சிறப்பு | பாடல் |
|---|---|---|
| 1. | கொடியேற்றம் | பஞ்சபுராணம் |
| 2. | ரிஷபவாகனம் | தேவாரம் |
| 3. | ராவணேஸ்வரம் | "இலங்கை வேந்தன் இராவணன் சென்று தன்" |
| 4. | இடபம் | "வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறி" பண்-தக்கேசி திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை |
| 5. | புருஷாமிருகம் | - தேவாரம் |
| 6. | யானைவாகனம் | - "போர்த்தாயங் கோரானையின் ஈருரிதோல்" பண்கொல்லி - திருநாவுக்கரசர் நாலாம் திருமுறை. |
| 7. | குதிரைவாகனம் | - தேவாரம் |
| 8. | அறுபத்துமூவர் | - "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" -சுந்தரர் |
| 9. | பிச்சாடனர் | - "வருந்தான்காண் மனமுருகி நினையாதார்க்கு" திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் - ஆறாம் திருமுறை |
| 10. | கொடியிறக்கம் | - பெரிய புராணம்.1 |

## அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் ஆலயம்

அர்ச்சகர் நிர்வாகத்தின்கீழ் இருந்துவந்த இவ்வாலயத்தை அரசு, 1954இல் தன் பொறுப்பில் ஏற்று அறங்காவலர்களை நியமித்தது. *1958* மற்றும் *1973, 1979, 1983, 1992* ஆண்டுகளில் திருக்குடநீராட்டுவிழா நடைபெற்றுள்ளது.

முண்டகம் என்பது தாமரை. இங்குள்ள அம்பாள் சுயம்புவாகத் தோன்றியவர். அம்பாளின் முகம் மட்டும் கருவறையில் உள்ளது. முண்டகக்கண்ணி என்ற பெயர் முண்டம்-(தலையற்றது) என்ற சொல்லிலிருந்தும் மருவியிருக்கக் கூடும்.2

இவ்வாலயத்தில் திரு கபாலி ஓதுவார் பணியாற்றி வருகிறார்.

### திரு சி. கபாலி ஓதுவார்

1938ஆம் ஆண்டு மயிலாப்பூரில் முதலியார் (சோழிய வேளாளர்) குலத்தில் பிறந்தவர் இவர். இவருடைய தந்தையார் திரு. சிங்காரவேலு முதலியாரும் ஓதுவாரே.

**1. திரு. து. சண்முக தேசிகருடன் நேர்காணல், *13.3.1994*,
அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், சென்னை.

**2. புலியூர்கேசிகன், "நலந்தரும் நாயகி அன்னை முண்டகக்கண்ணி, 1992.

திருநெல்வேலி சுந்தர ஓதுவா மூர்த்திகள் மற்றும் திரு இராஜாராம் பிள்ளை ஆகியோரிடம் இவர்தம் தந்தையார் தேவாரம் பயின்றுள்ளார்.

**பயிற்சி:**

திரு கபாலி ஓதுவாரின் தேவார ஆசிரியர் இவர்தம் தந்தையாரே. பிறகு இவர் **1956-57** ஆண்டுகளில் தண்டபாணி தேசிகரிடம் பயின்றுள்ளார். தருமபுரம் சுவாமிநாதன் அவர்களிடமும் கற்று இவர் தருமபுரம் தமிழிசை வல்லுநர் ஆனார்.

**பணி:**

இவர் பத்தாண்டுக்காலம் திருவேட்டீசுவரர் ஆலயத்தில் ஓதுவாராகப் பணிபுரிந்தார். **1975** ஆம் ஆண்டு அருள்மிகு முண்டகக்கண்ணி ஆலயப் பணியில் சேர்ந்தார். அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத் திருவிழாக்களிலும், சுவாமிப் புறப்பாட்டின்போதும் இவர் பங்குபெற்று வருகிறார்.

**ஊதியம்:**

இவருக்கு மாத ஊதியம் ரூ.**700** வழங்கப்பட்டு வருகிறது. காசி மற்றும் திருச்செந்தூர் ஆலய விழாக்களில் பணியாற்றியுள்ளார். ஆலயத்தில் இவர் பணி நேரம் பகல் **12** மணி உச்சிகாலப் பூசையில் பாடுவதும், இரவு **6.00** மணி முதல் **7.00** மணி வரையும் ஆகும்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

அம்பாளே இவ்வாலய முக்கிய தெய்வம் ஆகும்.

**உச்சிக்காலம் பாடல்கள்**

அ. அம்பாள் — தேவாரம், பிள்ளைத்தமிழ் மற்றும் அபிராமி அந்தாதி

**சாயரட்சை**

அ. அம்பாள் — அ. "அண்டங்கள் எண்ணிலாவாம் ஆருயிர்கள் எண்ணிலாவாம்" பண் செந்துருத்தி - பூபதி சுவாமிகள்.
ஆ. "நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி நலஞ்சுடரே" திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்

## வாரத்தில் ஒவ்வொருநாளும் பாடப்பெறும் சிறப்புப் பாடல்கள்

| நாள் | பாடல் |
|---|---|
| ஞாயிறு | அண்ணாமலை தேவாரம் |
| திங்கள் | மதுரை தேவாரம் |
| செவ்வாய் | வைத்தீஸ்வரன் கோயில் தேவாரம் |
| புதன் | தேவாரம் |
| வியாழன் | தேவாரம் |

| | |
|---|---|
| வெள்ளி | "மங்கையர்க்கரசி" எனத்தொடங்கும் சம்பந்தர் தேவாரம் - பண் புறநீர்மை மூன்றாம் திருமுறை |
| சனி | திருநள்ளாறு தேவாரம் |

## திருவிழாக்களின்போது பாடப்பெறும் பாடல்கள்

| | |
|---|---|
| ஆடிப்பூரம் (ஜுலை-ஆகஸ்ட்) | தேவாரம், பிள்ளைத்தமிழ் |
| சித்ரா பௌர்ணமி (ஏப்ரல்-மே) | தேவாரம் |
| நவராத்திரி | அபிராமி அந்தாதி, தேவாரம் |
| கும்பாபிசேகம் | மீனாட்சி பிள்ளைத்தமிழ். |

இப்பாடல்கள் பாடப்படும்போது தாளம், வயலின், மிருதங்கம், சுருதி ஆகியன பயன்படுத்தப்பெறும்.1

## அருள்மிகு கச்சாலீசுவரர் திருக்கோயில்

கிழக்கிந்திய கம்பெனியில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்த தளவாய் செட்டியார் சென்னையிலிருந்து தினமும் காஞ்சிபுரம் சென்று அருள்மிகு கச்சாலீசுவரரை வழிபட்டுத் திரும்புதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருசமயம் இயற்கை இடர்ப்பாடு காரணமாக காஞ்சியிலிருந்து சென்னைக்குத் திரும்ப முடியவில்லை. சென்னையில் அவர் செய்ய வேண்டிய பணிகளை அவருக்காக இறைவனே நிறைவேற்றினார். தம்மை வழிபடும் பொருட்டு ஒவ்வொரு நாளும் தம் அடியவர் சிரமம் கொள்வதைத் தவிர்க்க விரும்பிய இறைவர், பக்தரின் இருப்பிடத்திற்கேவந்து காட்சி தருவதாக உறுதி கூறினார். தளவாய் செட்டியார் சென்னையில் தற்போதுள்ள கச்சாலீசுவரர் ஆலயத்தை 1725 ஆம் ஆண்டு கட்டி 1728 இல் கும்பாபிசேகம் நடத்தினார்.2

திரு சைதை பாலசுந்தரம் இவ்வாலய ஓதுவார் ஆவார்.

## திரு சைதை இரா. பாலசுந்தரம்

இவர் 1924 ஆம் ஆண்டு செங்குந்த முதலியார் வகுப்பில் பிறந்தார். கும்பகோணம் திருநாகேஸ்வரம் இவர் ஊராகும். அடங்கன் முறை அருணாசலம் ஐயா அவர்களின் சீடரான இராமலிங்க முதலியார் இவருடைய தந்தையார் ஆவார்.

### பயிற்சி

தேவாரஇசை வல்லுநர் பலரிடம் இவர் பயிற்சி பெற்றுள்ளார். தம் பதினைந்தாவது வயதில் தம் தந்தையாரிடமும், பிறகு 25-வயது வரை சைதை நடராசன்

*1. திரு. கபாலி ஓதுவாருடன் நேர்காணல், 29.3.1994, சென்னை.
*2. அருள்மிகு கச்சாலீசுவரர் திருக்கோயில் தலவரலாறு, 1989.

அவர்களிடமும் இவர் தேவாரம் கற்றார். காஞ்சிபுரம் விநாயக முதலியாரிடமும் பிறகு 1979இல் தருமபுரம் சுவாமிநாதன் அவர்களிடமும் இவர் தேவாரம் பயின்றார். பிறகு சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடமும் ஐந்து ஆண்டுகள் கர்நாடக இசை பயின்றுள்ளார்.

### பணி

இவர் 40 ஆண்டுக்காலங்களாக தேவாரம் பாடி வருகிறார். 1986 ஆம் ஆண்டு இவர் அருள்மிகு கச்சாலீசுவரர் ஆலய ஓதுவாராக ஆனார். இவருக்கு முன் இதே ஆலயத்தில் திரு சிவசங்கர முதலியார் அவர்கள் 20 ஆண்டுக்காலம் ஓதுவாராகப் பணிபுரிந்துள்ளார்.

ஊதியம்: ரூ.575/- இவருக்கு ஒட்டுமொத்த மாத ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

### சிறப்புகள்

1980இல் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் இவருக்கு "திருமுறை இசைமணி" என்ற பட்டம் வழங்கியுள்ளார். தென்னிந்தியக் கலாச்சார மையம் இவருக்குச் சான்றிதழ் வழங்கியுள்ளது. 1992 ஆம் ஆண்டு இவர் சில மாதங்கள் சிறப்புப் பயிற்சி பெற்றமைக்காக தெய்வீகப் பேரவை சான்றிதழ் வழங்கியுள்ளது.

சென்னை வானொலி நிலையத்தின் இரண்டாம் நிலை இசைக் கலைஞர் ஆவார் இவர். தொலைக் காட்சியிலும் நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புரசை நேத்தப்பாக்கம் முனுசாமி முதலியார் பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குத் தேவார வகுப்புகள் நடத்தி வருகிறார். தனியாகவும் மாணவர்களுக்குத் தேவார வகுப்புகள் நடத்தி வருகிறார். திருக்குறளை இசையமைத்து ஒலிநாடா வழங்கியுள்ளளார். ஓதுவாராகப் பணி புரிவதோடு தமிழ் முறைத் திருமணங்களையும் நடத்தி வருகிறார்.

சைவ சித்தாந்த திருமுறை மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு இலங்கைப் பயணம் மேற்கொண்டுள்ளார். கந்தர் சஷ்டி விழாவிற்காக காசி மற்றும் மைசூர் சென்று பாடி வந்துள்ளார். தினமும் மாலை 6.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை இவர் ஆலய அலுவல் நேரம் ஆகும். சிறப்பு நாட்களில் காலையிலும் 9.00 மணி முதல் 12.00 மணி வரை பணிபுரிவார்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

| சந்நிதி | பாடல் |
|---|---|
| அ. விநாயகர் | "வானுலகும் மண்ணுலகும்" - பதினோராம் திருமுறை. |
| ஆ. நடராசர் | "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ்சிரிப்பும்" - திருநாவுக்கரசர் |
| இ. சுவாமி | a. "முந்தைகாண் மூவரினும் முதலானான் காண்" திருத்தாண்டகம் - திருநாவுக்கரசர்<br>b.பெரிய புராணம் |

| | |
|---|---|
| ஈ. அம்பாள் | அபிராமி அந்தாதி |
| உ. முருகர் | திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் |
| ஊ. சண்டிகேசுவரர் | "சண்டியார் பதம் தந்தோம்" பெரியபுராணம் |

## திருவிழாக்களின்போது பாடப்பெறும் பாடல்கள்

சித்திரை மாதத்தில் பிரம்மோற்சவ விழா பத்துநாட்கள் கொண்டாடப் பெறும்.

| நாள் | வாகனம் | பாடல் |
|---|---|---|
| முதல்நாள் | கொடியேற்றம் | "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி" பண் நட்டபாடை திருஞான சம்பந்தர் - முதல் திருமுறை |
| இரண்டாம் நாள் | சந்திரப்பிறை | "சந்திரனை மாகங்கை" - திருநாவுக்கரசர் திருத்தாண்டகம். |
| மூன்றாம் நாள் | அதிகார நந்தி | "நந்தி நாமம் நமச்சிவாயவே" பண் கௌசிகம் - திருஞான சம்பந்தர் மூன்றாம் திருமுறை. |
| நான்காம் நாள் | நாகவாகனம் | "நாகத்தை நங்கை அஞ்ச நங்கையை மஞ்ஞை என்று" திருநேரிசை அப்பர் |
| ஐந்தாம் நாள் | ரிஷபவாகனம் | "வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி" பண்-தக்கேசி திருஞான சம்பந்தர் - முதல் திருமுறை |
| ஆறாம் நாள் | யானை வாகனம் | "அடுத்தானை உரித்தானை அருச்சுனர்க்குப் பாசுபதம் கொடுத்தானை" பண்-காந்தாரம் திருநாவுக்கரசர் நாலாம் திருமுறை |
| ஏழாம் நாள் | சுந்தரர் | "பண்ணிடைத் தமிழொப்பாய் பழந்தினிற் சுவையொப்பாய்". பண் நட்டராகம் - சுந்தரர் ஏழாம் திருமுறை. |
| எட்டாம் நாள் | குதிரைவாகம் | "நரியைக் குதிரைப் பரியாக்கி" - மாணிக்க வாசகர் |
| ஒன்பதாம் நாள் | பிச்சாடனர் | |
| பத்தாம் நாள் | கொடியிறக்கம் | "உறைப்புடைய இராவணன் பொன்மாலையை" திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை. |

பஞ்சபுராணம் ஓதுவதோடு திருவிழா நிறைவு பெறுகிறது.

வைகாசி மாதத்தில் (மே-ஜூன்) வசந்தவிழா பத்து நாட்கள் கொண்டாடப் பெறும்.

அப்பொழுது "மாசில் வீணையும் மாலை மதியமும்" பாடப்பெறும் (திருக்குறுந்தொகை - திருநாவுக்கரசர்).

நடராசருக்குரிய ஆனித்திருமஞ்சனத் திருவிழாவில் (ஜூன்-ஜூலை) தேவாரம் பாடப்பெறும்.

ஆவணியில் விநாயக சதுர்த்தியின்போது தேவாரம் பாடப்பெறும்.

புரட்டாசியில் நவராத்திரி விழாவின்போது (செப்-அக்டோபர்) அபிராமி அந்தாதிப் பாடல்கள் பாடப்பெறும்.

ஐப்பசியில் (அக்-நவம்பர்) கந்தர் சஷ்டியின்போது திருப்புகழ்ப் பாடல்கள் பாடப்பெறும்.

கார்த்திகைத் தீபத்தின்போது (நவம்-டிசம்பர்) திருவண்ணாமலைப் பதிகம் பாடப்பெறும்.

மார்கழியில் (டிசம்பர்-ஜனவரி) திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடல்கள் பாடப்பெறும்.

வயலின், ஹார்மோனியம், மிருதங்க இசைக்கருவிகளும் இவ்விழாக்களின்போது பயன்படுத்தப்பெறும்.1

## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி ஆலயம்

இவ்வாலயம் 320 ஆண்டுகள் பழமையுடையது.

## திரு. கோ. இரத்தின சபாபதி ஓதுவார்

அருள்மிகு முத்துக்குமார சுவாமி ஆலயத்தில் பணியாற்றிவரும் ஓதுவார் திரு. இரத்தின சபாபதி ஓதுவார் ஆவார்.

1931 இல் பிறந்த இவர் ஒரு சைவ வேளாளர். இவருடைய தந்தையார் கோவிந்தராஜ முதலியார் ஒரு விவசாயி.

**பயிற்சி**

தருமபுர ஆதீனத்தில் 1957 முதல் 1962 முடிய தருமபுரம் சுவாமிநாதன் அவர்களிடம் இவர் பயிற்சி பெற்றார். கடந்த நாற்பது ஆண்டுக்காலம் இவர் தேவாரம் பாடி வருகிறார். இவர் வயலினில் கர்நாடக இசை மீட்டவும் கற்றுக் கொண்டார்.

கந்தகோட்டத்தில் பணி புரிவதற்கு முன் இவர் திருவொற்றியூர் ஆலயத்தில் இருபத்திநான்கு ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். இவர் தமிழகத்தின் பல இடங்களுக்கும் சென்று பாடி வந்துள்ளார். தற்போது கந்தகோட்டத்தில் ஓதுவாராகப் பணிபுரிந்து வருகிறார்.

***ஊதியம்:***

இவருக்கு மாத ஊதியம் ரூ.900/- வழங்கப்பட்டு வருகிறது.

1. திரு. சைதை இரா. பாலசுந்தரமுடன் நேர்காணல், 7.4.1994, அருள்மிகு கச்சாலீஸ்வரர் திருக்கோயில், சென்னை.

*சிறப்புகள்:*

தருமபுர ஆதீனம் வழங்கியுள்ள சான்றிதழ் பெற்றுள்ளார். 1986 இல் திருமுறைச் சதுரர் பட்டம் பெற்றுள்ளார். 1971ல் சுந்தரேசுவர தேசிகர் "திருமுறை தமிழ் இசை வேந்தா" பட்டம் வழங்கியுள்ளார். 1994 ஜனவரியில் வேலாயுத ஓதுவார் இவருக்கு "இசை வித்தகா" பட்டம் வழங்கியுள்ளார். தமிழக அரசும் "தமிழ் அறிஞர்" பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இவர் இரண்டு ஒலி நாடாக்களையும் வழங்கியுள்ளார். ஒன்று "பன்னிரு திருமுறை"; மற்றொன்று திருநாவுக்கரசரின் "அற்புத வரலாற்றுப் பதிகம்". ஆலயத்தில் இவருடையஅலுவல் நேரம் காலை 11.00 மணி முதல் 12.00 மணி; மாலையில் 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

மாணிக்க வாசகரின் திருவாசகம் ஓதி தம் பணியைத் தொடங்குகிறார் ஓதுவார். முறையே தெய்வச் சந்நிதானங்களில் பாடப்பெறும் பாடல் விவரம் பின்வருமாறு:

| சந்நிதி | பாடல் |
|---|---|
| அ. விநாயகர் சந்நிதி | "பிடியதன் உருவுமை கொளமிகு கரியது"<br>பண்வியாழக் குறிஞ்சி - திருஞான சம்பந்தர்<br>- முதல் திருமுறை |
| ஆ. முருகர் சந்நிதி | "நங்க டம்பனைப் பெற்றவன் புங்கினம்"<br>- திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை<br>- ஐந்தாம் திருமுறை.<br>"முந்தை காண் மூவரினும் முதலானான் காண்"<br>திருநாவுக்கரசர் திருத்தண்டகம்<br>- ஆறாம் திருமுறை திருப்புகழ். |
| இ. சுவாமி சந்நிதி | மதுரை தேவாரம். |
| ஈ. அம்பாள் | "தாயும்நீயே தந்தைநீயே சங்கரனே அடியேனன்"<br>பண் பழந்தக்க ராகம்<br>- திருஞான சம்பந்தர் - முதல் திருமுறை.<br>அபிராமி அந்தாதி<br>மீனாட்சிப் பிள்ளைத்தமிழ் |
| உ. ஆறுமுகர் | திருப்புகழ், கந்தர் அனுபூதி. |

தீபாராதனைக்குப்பிறகு பஞ்சபுராணம், திருப்புகழ் மற்றும் தெய்வமணிமாலைப் பாடல்கள் பாடப்பெறும்.

தேவாரம், திருப்புகழ் பாடல்கள் பிரம்மோற்சவம், பங்குனி உத்திரம், வசந்தவிழா மற்றும் சஷ்டி விழாக்களின்போது பாடப்பெறும். 1

1. திரு. கோ. இரத்தின சபாபதி ஓதுவாருடன் நேர்காணல், அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், 24.4.1994, சென்னை.

## அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் மற்றும் சுந்தரேசுவரர் திருக்கோயில்

இவ்வாலயம் *1888* ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். *1910* இல் கும்பாபிசேகம் நடைபெற்றது. சுந்தரேசுவரர், சுவர்ணாம்பிகை, கதிர்காம வேலர், பழநி ஆண்டவர் மற்றும் சித்தி புத்தி விநாயகர் ஆகிய ஐந்து தெய்வச் சந்நிதானங்கள் இவ்வாலயத்தை அலங்கரிக்கின்றன.

இவ்வாலயத்தில் திரு அருணாசல தேசிகர் ஓதுவாராகப் பணி புரிந்து வருகிறார்.

## திரு. த. அருணாசல தேசிகர்

1924 ஆம் ஆண்டு வயலூரில் தேசிகர் குலத்தில் பிறந்தவர் இவர். இவர்தம் தந்தையார் திரு தட்சிணாமூர்த்தி தேசிகர் ஒரு மடாதிபதி ஆவார்.

*பயிற்சி:*

திருப்பனந்தாள் மடத்தில் *1935* முதல் *1940* முடிய ஐந்து ஆண்டுக்காலம் இவர் தேவாரம் பயின்றார். திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும், திரு. வெங்கடாசலம் பிள்ளையும் இவர்தம் ஆசிரியராவர். இவர் வடமொழியும் பயின்றுள்ளார்.

*பணி:*

1969 இல் இவர் இவ்வாலய ஓதுவாராகப் பணியில் சேர்ந்தார். 1969க்கு முன் 30 ஆண்டுக்காலம் திரு. குப்புசாமி தேசிகர் இவருக்கு முன் ஓதுவாராகப் பணிபுரிந்துள்ளார்.

*ஊதியம் :*

ரூ.700/- ஒட்டுமொத்த மாத ஊதியமாக இவருக்கு வழங்கப்படுகிறது.

*சிறப்புகள்:*

இந்து சமய அறநிலையத்துறை இவருக்கு "அபிராமி அருள்பெற்ற அருணாசல தேசிகர்" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இவர் சமயதீட்சையும் பெற்றுள்ளார். தேவாரம் பாடுவதோடு, தமிழ் முறைப்படியும், வடமொழி மந்திரம் ஓதியும் அவரவர் விருப் பப்படி திருமணங்களையும் நிகழ்த்துகின்றார். புரோகிதராக வீட்டுச் சடங்குகளையும் செய்கின்றார். ஆலயத்தில் இவருடைய அலுவல் நேரம் காலை *7.00* மணி முதல் *11.00* மணி; மாலையில் *4.30* மணி முதல் *9.00* மணி வரை. இரவு *7.00* முதல் *8.00* மணி வரை ஒலி பெருக்கியில் தேவாரம் பாடுகிறார்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

விசேட நாட்களில் மட்டும் காலை *7.00* மணிக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடப்பெறுகிறது. சுந்தரேசுவரர் சந்நிதியில் தேவாரமும் திருவாசகமும்

பாடப்பெறுகிறது. சாயரட்சையில் சுந்தரேசுவரர் சந்நிதியில் பஞ்சபுராணம் ஓதப்படுகிறது.

சாயரட்சை

| சந்நிதி | பாடல் |
|---|---|
| முருகர் | பிள்ளைத்தமிழ் |
| அம்பாள் | அபிராமி அந்தாதி |
| நடராசர் | "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்" திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை. |
| நவகிரகம் | கோளாறு பதிகம் "வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்" பண் காந்தாரம் - திருஞானசம்பந்தர் இரண்டாம் திருமுறை. |

பொன்னூசல் இவ்வாலயத்தில் பாடப்பெறுவதில்லை.

## திருவிழாக்களில் பாடப்பெறும் பாடல்கள்

| மாதம் | திருவிழா | பாடல் |
|---|---|---|
| அ. சித்திரை (ஏப்ரல்-மே) | சித்ரா பௌர்ணமி | தேவாரம் |
| ஆ. வைகாசி (மே-ஜுன்) | பிரம்மோற்சவம் | a. தேவாரம்<br>b. முருகர் பிள்ளைத்தமிழ் |
| இ. ஆனி (ஜுன்-ஜுலை) | திருமஞ்சனம் | திருத்தொண்டர் தொகை. |
| ஈ. ஆவணி (ஆகஸ்ட்-செப்.) | விநாயகர் சதுர்த்தி | விநாயகர் அகவல் |
| உ. புரட்டாசி (செப்-அக்.) | நவராத்திரி | அபிராமி அந்தாதி |
| ஊ. ஐப்பசி (அக்-நவம்பர்) | சஷ்டி | a. திருப்புகழ்<br>b. பிள்ளைத்தமிழ் |
| எ. கார்த்திகை (நவம்-டிசம்பர்) | தீபம் | பஞ்சபுராணம் |
| ஏ. மார்கழி (டிச. - ஜனவரி) | திருப்பள்ளியெழுச்சி | திருவெம்பாவை |
| ஐ. மாசி (பிப்ர-மார்ச்) | சிவராத்திரி | தேவாரம் |
| ஒ. பங்குனி (மார்ச்-ஏப்ரல்) | பங்குனி உத்திரம் | தேவாரம் |

ஓதுவாருடன் திருவிழாக்காலங்களில் வயலின், மிருதங்கக் கலைஞர்களும் சேர்ந்து பணியாற்றுவர்.1

## அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

இவ்வாலயம் சுமார் 500 ஆண்டுகள் பழமையுடையது. திரு. விசுவநாத ஓதுவார் இங்குப் பணியாற்றுகிறார்.

### திரு நா. விசுவநாத ஓதுவார்

1932இல் செங்குந்த முதலியார் வகுப்பில் பிறந்தவர் இவர்.

*பயிற்சி:*

தம் தந்தை திரு. இராமலிங்க ஓதுவாரிடமும், தற்போது அருள்மிகு கச்சாலீசுவரர் ஆலய ஓதுவாராகப் பணியாற்றிவரும் தம் சகோதரர் சைதை ஆர். பால சுந்தரம் அவர்களிடமும் தேவாரம் பயின்றவர் இவர்.

*பணி:*

நெசவாளராக முதலில் பணியாற்றி 1969 முதல் ஓதுவாராக இவ்வாலயத்தில் பணிபுரிந்து வருகிறார்.

*ஊதியம்:*

மாத ஊதியம் ரூ.350 இவருக்கு வழங்கப்படுகின்றது. ஆலயத்தில் இவருடைய அலுவல் நேரம் மாலை 5.30 முதல் இரவு 9 மணி முடிய ஆகும்.

### ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

| சந்நிதி | பாடல் |
|---|---|
| அ. விநாயகர் | தேவாரம், திருப்புகழ் |
| ஆ. சிவபெருமான் | தேவாரம் |
| இ. நால்வர் | நால்வர்துதி |
| ஈ. நடராஜர் | தேவாரம் |
| உ. மூலஸ்தானம் | திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி |
| ஊ. அம்பாள் (வள்ளி, தெய்வானை) | அபிராமி அந்தாதி |
| எ. உற்சவர் | கந்த புராணம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ். |

**1. திரு. த. அருணாசல தேசிகருடன் நேர்காணல், 6.6.1994, சென்னை.

திருப்பள்ளியெழுச்சி மற்றும் பொன்னூசல் பாடல்கள் இவ்வாலயத்தில் பாடப்பெறுவதில்லை. 1

## அருள்மிகு வெள்ளீசுவரர் ஆலயம்

மயிலையில் அமைந்துள் இவ்வாலயம், தனியார் நிர்வாகத்திலுள்ளது. சுமார் 300 ஆண்டுக்காலம் பழமை பெற்றது.

## திரு. மா. பால சுப்பிரமணியம்

இவ்வாலய ஓதுவார் திரு பாலசுப்பிரமணியம் ஆவார். திருப்போரூரை அடுத்துள்ள செம்பாக்கம் கிராமத்தில் தேசிகர் குலத்தில் 1940 ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். இவருடைய தந்தையார் திரு மாணிக்கம், ஆலயம் பூசகர் ஆவார்.

**பயிற்சி:**

திரு குழந்தை வடிவேல் முதலியார் அவர்களிடம் ஐந்தாண்டுக் காலம் தேவாரம் பயின்றிருப்பதோடு, வால்குடி சுவாமிநாதன், தருமபுரம் சுவாமிநாதன், சைதை நடராசன் ஆகியோரிடமும் பயின்றுள்ளார்.

**பணி:**

கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுக்காலமாக இவர் இவ்வாலயத்தில் பணிபுரிந்து வருகிறார்.

**உதியம்:**

ரூ.700/- மாத ஊதியமாக இவருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**சிறப்புகள்:**

1987-88 ஆண்டுகளில் ஓதுவார் பயிற்சி பெற்றமைக்காகச் சான்றிதழ் பெற்றுள்ளார் இவர்.

எல்லா நேரமும் இவர் ஆலயத்தில் இருந்து வருகிறார். தேவாரம் பாடுவதோடு, தமிழ்முறைத் திருமணங்களையும் நடத்தி வைக்கிறார். புதுமனைபுகுவிழா, நீத்தார் வழிபாடு சடங்குகளையும் நிகழ்த்துகிறார். ஒவ்வொரு வெள்ளியும் ஆலய வளாகத்தில் இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை மாணவர்களுக்குத் தேவார வகுப்புகள் நடத்துகிறார். இவர் சிவதீட்சை பெற்றவர்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

காலை 6.10 மணிக்குத் திருப்பள்ளியெழுச்சியின்போது புறநீர்மைப் பண்ணில் தேவாரமும் பாடப்படுகிறது. காலை 9 மணிக்கு சிவபெருமான் சந்நிதியில் தேவாரமும், திருவாசகமும் பாடப்படுகிறது.

1. திரு. நா. விசுவநாத ஓதுவாருடன் நேர்காணல், 3.7.1994 சென்னை.

| சந்நிதி | பாடல் |
|---|---|
| பிள்ளையார் | தேவாரம் |
| சிவபெருமான் | தேவாரம் |
| அம்பாள் | அபிராமி அந்தாதி |
| முருகர் | பிள்ளைத் தமிழ் |

## திருவிழாக்களின்போது பாடப்பெறும் பாடல்கள்

வைகாசித் திங்களில் பிரம்மோற்சவம் பத்துநாள் கொண்டாடப்படுகிறது.

பிரம்மோற்சவத்தின்போது ஒவ்வொரு நாளும் இருமுறை பஞ்சபுராணம் ஓதப்படுகிறது. பிறபாடல்கள் விவரம் வருமாறு.

| நாள் | வாகனம் | பாடல் |
|---|---|---|
| முதல்நாள் | கொடியேற்றம் | |
| இரண்டாம் நாள் | சந்திரன், சூரியன் | "பொடியுடைமார்பினார் போர் விடையேறி" பண் தக்கராகம் - திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை |
| மூன்றாம் நாள் | பூதவாகனம் | - |
| நான்காம் நாள் | நாகவாகனம் | - |
| ஐந்தாம் நாள் | ரிஷபவாகனம் | "வேதமொதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி" - பண் தக்கேசி - திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை |
| ஆறாம் நாள் | யானை வாகனம் | "அரியானை அந்தணர்தம் சிந்தயானை" - பெரிய திருத்தாண்டகம் - அப்பர் ஆறாம் திருமுறை |
| ஏழாம் நாள் | தேர் | "அடுத்தானை உரித்தானை அருச்சுனர்க்குப் பாசுபதம் கொடுத்தானை" - பண் காந்தாரம் - திருநாவுக்கரசர் - நாலாம் திருமுறை |
| எட்டாம் நாள் | விமானம் | - |
| ஒன்பதாம்நாள் | பிச்சாடனர் | "பத்தூர்புக்கு இரந்துண்டு பலபதிகம் பாடி" - பண் கொல்லி கௌவாணம் சுந்தரர் |
| பத்தாம் நாள் | புஷ்ப விமானம் | "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்" - பண்கொல்லி - திருஞானசம்பந்தர் - மூன்றாம் திருமுறை |

## விசேட நாட்களில் பாடப்பெறும் பாடல்கள்

அ. விநாயகர் சதுர்த்தி - "கைத்தல நிறைகனி" - அருணகிரிநாதர்

ஆ. நவராத்திரி - அபிராமி அந்தாதி

இ. சஷ்டி - திருப்புகழ், பிள்ளைத்தமிழ்

ஈ. ஆருத்ரா தரிசனம் - திருவெம்பாவை

உ. மாசிமகம் (பிப்-மார்ச்) - "ஏவியிடர்க் கடலிடைப் பட்டு இளைக்கின்றேனை"

- திருத்தாண்டகம் - அப்பர் ஆறாம் திருமுறை

ஊ. ஆடிப்பூரம் - அம்பாள் புகழ்பாடும் தேவாரம்
(ஜூலை-ஆகஸ்டு)

மற்ற ஆலயங்களில் பாடப்படுவதைப் போல இங்கும் பஞ்சபுராணம் தினமும் பாடப்படுவதில்லை. முக்கிய திருவிழாக்களின் போது பாடப்படும். * 1

## அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்

சென்னையில் திருவான்மியூரில் உள்ள அருள்மிகு மருந்தீசுவரர் ஆலயம் பாடப்பெற்ற தலமாகும். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர். வெள்ளம் காரணமாக மேற்குக் கரையில் நின்றிருந்த அப்பைய தீட்சிதர் தம்பக்கம் திரும்பி இறைவனைக் காட்சி தரவேண்டியதாகத் தலபுராணம் கூறுகிறது. இப்பொழுதும் சிவலிங்கம் மேற்கு நோக்கியிருக்கக் காண்கிறோம். இவ்வாலயத்தில் தான் அகத்தியருக்குச் சிவபெருமான் மூலிகைகள் வழங்கியதாக புராணம் கூறுகிறது. எனவே மருந்தீசுவரர் என்ற திருநாமம் உண்டானது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புப் பெற்றது அருள்மிகு மருந்தீசுவரர் ஆலயம். நாயன்மார் பாடலைப் பெற்றும், திருக்குளத் தீர்த்தச் சிறப்பினைப்பெற்றும், மூர்த்தி சுயம்பு என்ற பெருமை பெற்றும் இவ்வாலயம் சிறப்புற்று விளங்குகிறது.

சேக்கிழார் தாம் அருளிய திருத்தொண்டர் புராணத்தில் திருவான்மியூரைச் சிறப்பித்துள்ளார். ஏழாம் நூற்றாண்டிலேயே இத்திருத்தலம் சிறப்புமிக்கதாகத் திகழ்ந்துள்ளது.*2

திருஞானசம்பந்தர், இத்தளம் பண்ணில் இத்தலத்தைப் பாடியுள்ள திருப்பதிகம் இரண்டாம் திருமுறையில் உள்ளது.

கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வேள் விப்பவன்
நிரையு லாங்கழி மீனுக ளுந்திரு வனமியூர்
உரையு லாம்பொரு ளாயுள காளுடை யீர்சொலீர்
வரையு லாமட மாதுட னாகிய மாண்பதே

திருநாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகைப் பாடல் ஐந்தாம் திருமுறையில் உள்ளது.

* 1. திரு. மா. பாலசுப்ரமணியம் அவர்களுடன் நேர்காணல், அருள்மிகு வெள்ளீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை, நாள் 25.8.1994.

*2. திரு. எம். ராஜகோபாலன், திருவான்மியூர் திருத்தலம்.

"விண்ட மாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேரிபொழில் வான்மியூ ரீசனே."

இவ்வாலயத்தில் பணிபுரியும் ஓதுவார் திரு. இராஜரத்தினம் ஆவார்.

## திரு. சு. இராஜரத்தினம்

புதுக்கோட்டையில் செட்டியார் இனத்தில் 1956இல் பிறந்தவர் இவர். இவர் விலங்கியல் படிப்பில் பட்டம் பெற்றிருக்கும் பட்டதாரியும் ஆவார்.

*பயிற்சி:*

இசைவாணர் குடும்பத்தைச் சார்ந்தவர் அல்லர் இவர். தாமே தேவாரத்தில் ஈடுபட்டு, திரு. வி. சோமசுந்தர தேசிகரிடம் பயில ஆரம்பித்தார். இப்பொழுதும் அவரையே குருநாதராகக் கொண்டு பயின்று வருகிறார். இவர் குடும்பம் ஆலயப் பணி செய்யும் குடும்பம் அல்ல. இவருடைய தந்தையார் திரு. சுவாமிநாத செட்டியார் ஒரு வியாபாரியாவார்.

*பணி:*

ஓராண்டு காலமாகத்தான் இவர் ஓதுவாராகப் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு முன் ஓதுவார் சுப்பிரமணிய முதலியார் 18 ஆண்டுகாலம் ஓதுவாராகப் பணிபுரிந்துள்ளார்.

*ஊதியம்:*

ஒட்டுமொத்த மாத ஊதியம் ரூ.700/- இவருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆலயத்தில் சுமார் 15 மாணவர்களுக்கு புதன் மற்றும் சனிக்கிழமைகளில் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை இவர் தேவார வகுப்புகள் நடத்தி வருகிறார். தேவாரத்தை பொருள் விளக்கத்துடன் கற்பிக்கிறார். இவர் சமயதீட்சையும் பெற்றுள்ளார்.

ஆலயத்தில் இவருடைய அலுவல் நேரம் காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை. மற்றும் மாலையில் 4.00 மணி முதல் 8.00 மணி வரை ஆலய அலுவலகத்திலேயே முற்பகல் நேரங்களில் இவர் தட்டச்சராகவும் பணி புரிந்து வருகிறார்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

சாயரட்சையில்தான் பாடல்கள் ஓதப்படுகின்றன. காலை சந்தி மற்றும் உச்சிக் காலங்களில் தீபாராதனை நடைபெறுவதில்லை.

பாடப்படும் பாடல் விவரம் வருமாறு:



சு. இராஜரத்தினம்.



அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்.

| சந்நிதி | பாடல் |
|---|---|
| அ. விநாயகர் | தேவாரம் |
| ஆ. சிவபெருமான் | பஞ்சபுராணம் |
| இ. தியாகராஜர் | தேவாரம் |
| ஈ. சுப்பிரமணியர் | கந்தர் அலங்காரம், திருப்புகழ் |
| உ. அம்பாள் | அபிராமி அந்தாதி மற்றும் பிள்ளைத் தமிழ். |

## திருவிழாக்களின்போது பாடப்பெறும் பாடல்கள்

இவ்வாலயம் பாடல்பெற்ற தலமாக விளங்குவதால் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடியுள்ள இத்தலம் பற்றிய பாடல்கள் சிறப்பாகப் பாடப்படும்.

பங்குனிஉத்திரவிழா இவ்வாலயத்தின் முக்கிய திருவிழாவாகும். நவராத்திரியின் போது அபிராமி அந்தாதிப் பாடல்களும், சஷ்டியின்போது திருப்புகழ்ப் பாடல்களும் பாடப்பெறும்.

தியாகராஜர் உற்சவத்தின்போது தியாகராஜர் பல்லக்கில் எழுந்தருளி வீதிவலம் வருவார். அப்பொழுது தியாகர் நடனம் நடைபெறும்; தேவாரம் பாடப்படும். ** 1

## அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்

ஆதிபுரி எனவும் வழங்கப்பெறும் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் சென்னையில் திருவொற்றியூரில் உள்ளது. சுந்தரர் சங்கிலி நாச்சியாரைத் திருணம் புரிந்து இத்திருத்தலத்தில்தான். கலியநாயனார் அவதாரத்தலகுமாம் இது. இறைவர் தியாகராஜர் இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ளார்.2

மூவரும் பாடிய திருத்தலமாகும் இது. திருஞானசம்பந்தர் பஞ்சமப் பண்ணில் பாடிய பதிகம் மூன்றாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

"விடையவன் விண்ணும் மண்ணும் தொழநின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலிததோலுடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமதேவன் சதிதங்கிய சங்கவெண்தோ
உடையவன் ஊனமில்லி உறை யுமிடம் ஒன்றியூரே."

திருநாவுக்கரசர் திருநேரிசை பாடியுள்ளார்.

"ஓம்பினேன் கூட்டை வாளா உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிவா முழை போலக் கருதித்தே முகக்க மாட்டேன்
பாம்பின் வாய்த் தேரைபோலப் பலப்பல நினைக்கின்றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய் ஒற்றியூருடைய கோவே"

** 1. திரு. சு. இராஜரத்தினம் அவர்களுடன் நேர்காணல், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில், சென்னை, நாள் 26.8.1994.

** 2. அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், 1994-95.

சுந்தரர் தக்கேசிப் பண்ணில் ஒரு பதிகம் பாடி உள்ளார்.

"அழுக்கு மெய்கொடுத் திருவடி அடைந்தேன்
அதுவும் நானிபடப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடியேன்
பிழைப்பன் ஆகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான் அறியேன் மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொரு மருந்துரையாய்
ஒற்றி யூரெனும் உளர் உறைவோனே."

இங்கு திரு. டி.எஸ். சுந்தரமூர்த்தி ஓதுவாராக உள்ளார். **1960** இல் பிறந்த இவர், பிராமணர் குலத்தைச் சேர்ந்தவர்.

## திரு. டி.எஸ். சுந்தரமூர்த்தி ஓதுவார்

*பயிற்சி:*

தருமபுர ஆதீன தேவார பாடசாலையில் திரு வேலாயுத ஓதுவாரிடமும், மற்றும் திருமயிலாடி, சீர்காழி, தஞ்சாவூர் ஓதுவார்களிடமும் இவர் பயிற்சி பெற்றார்.

*சிறப்பு:*

தருமபுரம் ஆதீனம் இவருக்குத் "தேவார இசை மணி" பட்டம் வழங்கியுள்ளது.

*ஊதியம்:*

இவருக்கு ஒட்டுமொத்த மாத ஊதியம் ரூ.1,330 வழங்கப்படுகிறது.

ஆலயத்தில் இவர்தம் அலுவல் நேரம் ஒவ்வொரு நாளும் மாலை 6.00 மணிமுதல் *8.30* மணி வரை ஆகும்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

தேவாரம், திருவாசகம், வடிவுடை மாணிக்க மாலைப் பாடல்கள் சந்நிதிகளில் பாடப்படுகின்றன.

## அருள்மிகு திருவல்லீசுவரர் ஆலயம்

சென்னையில் பாடியில் விளங்கும் திருவலிதாயம் ஒரு பாடல் பெற்ற தலம். பத்தாம் நூற்றாண்டில் இப்பொழுதுள்ள ஆலயம் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

இராஜராஜ சோழன் விநாயகர் சந்நிதியைக் கட்டுவித்து, பூசைக்கு நிலக்கொடை அளித்தமையை இக்கோயில் கல்வெட்டினால் அறிகிறோம். "அருட்பா"வில் இராமலிங்க அடிகளாரும் இவ்வாலயத்தைப் போற்றிப்பாடியுள்ளார்.



அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயில்.

பரத்வாச முனிவர் சாபத்திற்கு ஆளாகிக் கருப்புப் பறவையானதாகவும், இங்குச் சிவபெருமானின் திருக்குளத்தீர்த்தம் அருந்தி, வழிபட்டுச் சாப விமோசனம் பெற்றதாகவும் தலபுராணம் கூறுகிறது. பிரம்ம புத்திரிகளான கமலை, வள்ளி இருவரையும் இங்கு விநாயகர் மணம் செய்து கொண்டதாகத் தலபுராணம் கூறுகிறது.1

மூவரில் திருஞானசம்பந்தர் இவ்வாலயத்தைப் போற்றிப் பதிகம் பாடியுள்ளார். பண் நட்டபாடையில் பாடப் பெற்றுள்ள அப்பதிகம் முதல் திருமுறையில் உள்ளது.

"பத்தரோடு பலரும் பொலியம் மலர் அங்கைப் புனல்தூவி
ஒத்த சொல்லியுலகத்தவர் தாந்தொழு தேத்த உயர்சென்னி
மத்தம் வைத்த பெருமான் பிரியாதுறை கின்ற வலிதாயம்
சித்தமிவைத்த அடியாரவர் மேலடை யாமற் றிடர்நோயே"

## திரு.டி.என். பாலசந்திரன்

இவ்வாலயத்தில் திரு.டி.என். பாலசந்திரன் ஓதுவாராக உள்ளார். இருபத்தி நான்கு வயதாகும் இவர், திருநின்றவூரைச் சேர்ந்த வேளாளர் ஆவார்.

### பயிற்சி:

பள்ளிப் படிப்பை நிறைவு செய்த பின், சென்னை இராஜ அண்ணாமலை மன்றத்தின் தமிழிசைச் சங்கத்தில் தேவாரம் பயின்றுள்ளார்.

### ஊதியம்:

ரூ.485 மாத ஊதியமாக இவருக்கு வழங்கப்படுகிறது. இவருடைய அலுவல் நேரம் தினமும் மாலை 5.00 மணி முதல் இரவு 7.00 மணி வரையிலும் ஆகும்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

ஆலயத்திலுள்ள பல்வேறு சந்நிதானங்களில் தேவாரம், திருவாசகம், அபிராமி அந்தாதி, பிள்ளைத்தமிழ் பாடல்கள் தினமும், திருவிழாக் காலங்களிலும் பாடப்பட்டு வருகின்றன.

## அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில்

அருள்மிகு வேதபுரீஸ்வரர் ஆலயம் திருவேற்காட்டில் அமைந்துள்ளது. இங்குதான் மூர்க்க நாயனார் தோன்றினார். சூரசம்ஹாரத்திற்குப் பிறகு முருகக் கடவுள் இங்கெழுந்தருளியதாகத் தலபுராணம் கூறகிறது.

நான்மறைகளும் வேலமர வடிவாகி இங்கு இறைவனைப் போற்றின. ஆகவே இவ்விடம் "வேல்காடு" என வழங்கப்படுகிறது. வேல்காடு என்ற சொல்லே பிறகு வேற்காடு எனத்திரிந்தது. இவ்விடம் மிகவும் புனிதமானதாகையால், நாகங்கள்

1. திரு. கல்யாணசுந்தர முதலியார், "திருவல்லீசுவரர் திருக்கோயில் தலவரலாறு, 1990-91.

அடியவரைத் தீண்டமாட்டா. 1973 ஆம் ஆண்டு இவ்வாலயத்திற்குக் கும்பாபிஷேகம் நடந்துள்ளது.1

திருஞான சம்பந்தர் இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளார். பழந்தக்கராகப் பண்ணில் பாடப் பெற்றுள்ள அப்பதிகம் முதல் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

"ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி
வெள்ளியானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே"

இவ்வாலயத்தில் பணிபுரியும் ஓதுவார் திரு. ஏ. சாம்பசிவம் ஆவார். 1941 இல் பிறந்த இவர் செங்குந்த முதலியார் ஆவார்.

## திரு. ஏ. சாம்பசிவம் ஓதுவார்

பயிற்சி:

தம் தந்தை ஏகாம்பர முதலியாரிடம் இவர் தேவாரம் பயின்றுள்ளார். ஓதுவார் ஆன இவருடைய தந்தையார் திரு மார்க்கபந்து முதலியாரிடம் தேவாரம் பயின்றவர் ஆவார்.

ஊதியம்:

ஒட்டுமொத்த மாத ஊதியமாக ரூ.1,110 இவருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு நாளும் இவர் நான்குமணி நேரம் ஆலயத்தில் பணிபுரிகிறார்.

## ஆலயத்தில் பாடப்பெறும் பாடல்கள்

திருஞானசம்பந்தர் பழந்தக்க ராகத்தில் பாடியுள்ள இத்திருத்தலம் பற்றிய தேவாரம் பாடப்பெறுகிறது. அம்பாள் சந்நிதியில் அபிராமி அந்தாதி பாடப் பெறுகிறது. பதினோராம் திருமுறைப் பாடல்கள் மோகனராகத்தில் பாடப்படுகின்றன.

1. திரு. பி.எம். ஜெயசெந்தில்நாதன், "திருமுறை தலங்கள்", பக்கம்-97.

# இயல் 4

## ஓதுவார் பாடல்களுக்கு வாத்தியக் கலைஞர்களின் துணை

இன்னிசைக் கருவிகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன: தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக கருவி.

இந்நான்கு வகை இசைக்கருவிகளும் மூவர் காலத்திலிருந்தே தேவாரம் ஓதப்படும்போது வாசிக்கப்பட்டு வந்துள்ளன.

"பாடல் வீணை முழுவம் குழல் பண்ணாகவே ஆடு மாறுவல்லான்"
"சல்லரயி யாழ்முழவமொந்தை குழல் தாமைடியம்ப"

வில்யாழ் எனும் நரம்பிசைக்கருவி அக்காலத்தில் வழக்கிலிருந்ததாகத் தெரிகிறது. ஒரு இடைச் சிறுவன் வில்யாழில் குறிஞ்சிப் பண் இசைத்ததாகக் குறிப்பு உள்ளது. வில்யாழின் அடிப்படையில் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், மற்றும் செங்கோட்டியாழ் முதலான யாழ்கள் வழக்கிற்கு வந்ததாக அறிகிறோம். இந்நான்கு யாழ்களும் முறையே 21, 19, 16 மற்றும் 7 நரம்புகளை முறையே கொண்டிருந்தன. 1000 நரம்புடைய யாழ் ஆதியாழ் ஆகும்.1

திருஞான சம்பந்தருக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தன் துணைவியார் மதங்கசூளாமணியுடன் யாழ் மீட்டியதாகக் கூறப்படுகிறது. அவர் மீட்டிய யாழ் சகோடயாழ் ஆதலால் அவரைச் "சகோட யாழ்த்தலைவர்" என்று சேக்கிழார் கூறியுள்ளார்.2

திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் அனைத்தையும் திருநீலகண்டயாழ்ப் பாணர் மீண்டும் தம் யாழிசையில் வைத்துப் பாடியுள்ளார் என்பதைச் சம்பந்தரின் திருக்கடைக் காப்புப் பாடலால் அறிகிறோம்.

"வீழிம்மிழலை லம்மேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்தமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே".

இடக்கை, உடுக்கை, கத்தரிகை, கல்லவாடம், கல்லலகு, கிணை, குடமுழா, கொக்கரை, கொடுகோட்டி, சல்லரி, தக்கை, தகுணிச்சம், தண்ணுமை, பறை, பிடவம், முழவு, மொந்தை மற்றும் முரவம் ஆகியன இசை நாட்டிய நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள் ஆகும்.3

அக்காலத்திலேயே தாளம் உபயோகப்படுத்தப்பட்டதை அறிகிறோம்.

1. "பன்னிரு திருமுறை வரலாறு", பக்கங்கள் - 622-623, சென்னை.
2. Ibid., பக்கங்கள் - 626-627.
3. Ibid., பக்கங்கள் - 626-639.

திருஞானசம்பந்தர் திருக்கோலக்கா அடைந்து தேவாரம் பாடியபோது தாளத்திற்குத் தம்முடைய மென்மையான கைகளைப் பயன்படுத்தினார். திருஞானசம்பந்தரின் தாளம் போடும் கை வருத்தம் நீங்க சிவபெருமான் ஒருஜோடி பொற்றாளம் வழங்கியருளினார். இதனை இத்தேவாரப் பாடலால் அறிகிறோம்.

"நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மையாளனன்."

மேற்காணும் பாடல் தக்கேசிப் பண்ணமைய சுந்தரர் பாடியதாகும்.

ஓதுவார்கள் இறைவன் சந்நிதானத்தில் தேவாரப் பாடல்களை ஒரு ஜோடி தாளத்துடன் பாடுவார்கள். ஆலயங்களில் நாகஸ்வரம், தவில், ஒத்து, தாளம் மற்றும் சுருதி சேர சகல வாத்தியம் இசைக்கப்படும். மிருதங்கம், தாளம், திருச்சின்னம் சேரப் பாடப்படுவது சின்னமேளம் எனப்படும். திருவிழாக்காலங்களில் பிரம்மதாளம் பயன்படுத்தப்படும்.

குழலும் மிருதங்கமும் பொதுவாக ஓதுவார்கள் பாடும்போது துணைக்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகளாகும். ஆனால் இக்காலத்தில் குழலுக்குப் பதில் வயலின் பய்னபடுத்தப்பட்டு வருகிறது.

முன்பு பயன்படுத்தப்பட்டு வந்த தம்புராவிற்குப் பதில் தற்போது சுருதிப் பெட்டி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சாரங்கி எனவும் அழைக்கப்படும் வில்யாழ் ஓதுவாமூர்த்திகள் முன்பு பயன்படுத்தி வந்ததாகத் தெரிகிறது. முற்காலத்தில் ஓதுவார்கள் உள்ளிட்ட மிகச் சிலரே வில்யாழ் வாசித்து வந்தனர்.

சாரங்கம் என்ற வடமொழிச் சொல் வில் என்பதைக் குறிக்கும். வில்லையும் நரம்பையும் அடிப்படையாகக் கொண்டது வில்யாழ். இத்தகைய வாத்தியக் கருவியில் கமகம் கொடுக்கவோ, அழுத்தி வாசிக்கவோ முடியாது.

1957-ல் தமிழ் இசைச்சங்கத்தில் நடைபெற்ற பண்ணாராய்ச்சி மாநாட்டில் ஆறுமுக ஓதுவார் அவர்கள் வில்யாழ் வாசித்துக் காட்டி ஒருவர்விடாமல் எல்லோரும் அவரைப் பாராட்டியிருக்கிறார்கள். இப்பொழுதும் திருநெல்வேலி மாவட்டத்தில் இசை மரபில் வந்த மூத்த கலைஞர்கள் பலர் இந்த இசைக்கருவியைப் பாதுகாத்துப் போற்றி வருகிறார்கள்.1

வடநாட்டில் சாரங்கி வாத்தியக் கலைஞர்கள் இசைக் கச்சேரிகளில் பெரிதும் பக்க வாத்யக் கலைஞர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். ஆனால் நம் தமிழகத்தில் சாரங்கிக்

1. எம்.பி. சோமு, "வில்யாழ் எனும் சாரங்கி", இன்னிசையாய் இசைத்தமிழாய், *1981.*



— சாரங்கி

கலைஞர்கள் மிகக்குறைவு. இச்சாரங்கி இசைக் கலைஞர்களை ஆதரித்துக் காத்திடவே அரசர்களும் சாரங்கிக் கட்டளையை அக்காலத்தில் ஏற்படுத்தியிருப்பதாக அறிகிறோம்.

தேவார இசைவாணர் தண்டபாணி தேசிகர் தம் தாய்வழி பாட்டனார் சாரங்கி வாசிப்பதில் மிகவும் புகழ் பெற்றவர். சுந்தர ஓதுவாமூர்த்தி அவர்களின் முன்னோர்களில் ஒருவரான சாலிவாடீஸ்வர ஓதுவாரும் இவ்வாத்தியம் வாசிப்பதில் வல்லுநர் எனத் தெரிகிறது.

சாரங்கித் தம்பிரான் என்பவர் மேகராகக் குறிஞ்சிப் பண்ணைச் சாரங்கியில் வாசித்து, வெற்று மேகங்களிலிருந்து மிக அதிகமான மழையைப் பெய்வித்தார் எனக் குறிப்புகள் காட்டுகின்றன.1

பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் தேவாரம் ஓதும்போது முற்காலத்தில் சாரங்கி துணை இசைக் கருவியாகத் திகழ்ந்தது எனக் கூறுகிறார். பிறகு இக்கருவியின் பயன் பாடு குறைந்து வீணை, மத்தளம், தாளம் ஆகியன பயன்படலாயின. மதுரை, தென்காசி மற்றும் திருநெல்வேலியில் இக்கருவி வழக்கில் இருந்து வந்துள்ளது. மான்தோல் கொண்டு இக்கருவியை மூடுவதால் சாரங்கி என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகின்றனர்.2

தேவார இசை ஓதுதலின்போது மீட்டப்பட்டுவந்த யாழ் எவ்வாறு மற்ற இசைக்கருவிகளால் தன் பயன் இழந்தது என்பதை இயல் ஐந்தில் காணலாம்.

1. எம்.பி.சோமு, "நமது செல்வம்", *1980*.
2. "பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும்", *1974*
சென்னை, பக்கம்-*1*

# இயல் 5

## இசையில் ஓதுவார்கள் - அப்பொழுதும் இப்பொழுதும்

நரம்புக் கருவியான யாழ், சங்க காலத்திற்கு முன்பே வழக்கில் இருந்தது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞான சம்பந்தர் பாடிய பதிகத்தை யாழில் வாசிக்க இயலாமல் அக்கருவியை உடைக்க முயன்றபோது, சம்பந்தர் அவர்கள் யாழ்ப்பாணரைத் தடுத்து, தாம் பாடிய பாடல் மனிதனால் செய்யப்பட்ட வாத்தியத்தில் வாசிக்கத்தகுதியற்றது என்று குறிப்பிட்டார். அவர், தாம் பாடிய வாய்ப்பாட்டை யாழில் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு முயன்று வாசிக்கும்படி யாழ்ப்பாணரிடம் கேட்டுக் கொண்டார்.

மதுரையில் வசிக்கும் தமிழ் அறிஞரான டாக்டர் பி.டி. கமலை தியாகராசன் அவர்கள் யாழை ' விட்டு இசைக்கும் கருவி ' என அழைக்கிறார். இரு சுரங்களுக்கும் இடையே தொடர்பு இல்லை என்பது அவர் கருத்து. யாழில் மெட்டுக்கள் இல்லாமல் தந்திகள் மட்டுமே இருப்பதினால், ஒவ்வொரு தந்தியையும் மீட்டினால்தான் ஒவ்வொரு ஸ்வரம் ஒலிக்கும். கமகங்களை யாழில் வாசிக்க இயலாது. கமகங்கள் வாசிக்கக் கூடிய வாத்யக் கருவிகள் 'தொடர்ந்து இசைக்கும் கருவிகள்' என அழைக்கப்படுகின்றன. வீணையில் கமகங்களும், துல்லியமான சுருதிகளும் வாசிக்க முடியும்.

திருஞான சம்பந்தர் தாம் பாடிய பதிகத்தில்

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி".

வீணையை 'மிகநல்ல' என்று அதனை விளக்குகிறார். 'தடவி' என்ற சொல் வீணை கமகங்கள் வாசிக்கக்கூடிய கருவி என குறிப்பிடுகிறது.1 மூவர் தம் பாடல்களின் வீணையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

ஞான சம்பந்தரின் தேவாரத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் பக்கவாத்தியமான யாழ், காலப் போக்கில் மறைந்து வீணை தோன்றியது.

கர்நாடக இசை தோன்றிய பிறகு, தேவாரப்பாட்டு முன்னேறியுள்ளது.

சிலர் தமிழ் வேதத்தை பழைய மரபுப்படி பாடக்கூடாது என்ற கருத்தை மறுக்கிறார்கள். சமஸ்கிருத வேதங்கள் இக்காலத்தில் பழைய மரபுப்படி ஓதப்பட்டு வருகின்றன. ஆனால் டாக்டர் கமலை தியாகராஜன் கருத்துப்படி, ஞானசம்பந்தரின் தமிழ் இசை கமகத்துடன் இருந்ததாகவும் வீணை தான் அப்பாட்டுக்கு வாசிக்க இயலாத கருவியாக அமைந்தது என்று கூறுகிறார். தமிழ் இலக்கியத்தை கலாச்சாரத்தையும் பரப்ப தமிழ் இசையே உதவியாக இருந்தது என்ற கருத்தை வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது என்ற பாடல் வரியிலிருந்து தெரியவருகிறது. தியாகராஜர், ஓதுவார்களின் பாடலால் ஈர்க்கப்பட்டார் என்று தெரியவருகிறது. புகழ்பெற்ற ஓதுவார்களான தண்டபாணி தேசிகர், நெல்லை சுந்தர ஓதுவாமூர்த்தி மற்றும் வேலாயுத ஓதுவார் தேவாரத்தை கமகத்துடன் பாடினார்கள்.

**1. திரு. டாக்டர். கமலை தியாகராஜன் அவர்களுடன்
நேர்காணல், 29.9.94, சென்னை.

தேவாரப் பாடல்கள் பாடுவதில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, 'இடரினும் தளரினும்' என்ற திருஞானசம்பந்தரின் பாடல் 'சரகுணபாலிம்ப' மெட்டில் ஓதுவார்களால் பாடப்பட்டு வருகிறது. பண் காந்தார பஞ்சமம் மாற்றப்படவில்லை. பாடும் விதம் மாறியுள்ளது.

திருநாவுக்கரசரின் 'சொற்றுணை வேதியன்' கோட்டீஸ்வர ஐயரின் 'கானாமுதபானம்' என்ற மெட்டில் பாடப்பட்டுவருகிறது. அந்தக்காலத்தில் 'பித்தா பிறைசூடி' இசையில்லாமல் பாடப்பட்டுவந்தது. இப்போது பண் சீகாமரத்தில் பாடி வருகிறார்கள்.1

1. 'தோடுடைய செவியன்' என்ற பதிகம் நட்டபாடை பண்ணில் ஆதி தாளத்தில் அமைந்திருந்தது. ஆனால், கடந்த ஐம்பது வருடங்களாக, இப்பதிகம் பண் மாறாமல் தாளம் மட்டும் மாறி ரூபக தாளத்தில் பாடப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் 'தோடுடைய செவியன்' நாட்டைக் குறிஞ்சியிலும் பாடப்பட்டுவந்ததாக தெரியவருகிறது. கடந்த நூறு வருடங்களாக, இப்படி பாடுவதில்லை.

   காலஞ்சென்ற சுந்தர ஓதுவாமூர்த்தி அவர்கள் 'தோடுடைய செவியன்' என்ற பாடலை பண் நட்டபாடையில் ஆதிதாளத்தில் பாடினார். அவரைப் பின்பற்றி வந்தவர்கள் தண்டபாணி தேசிகரும் அடங்கன் முறை அருணாசலம் ஐயாவும் ஆவார்கள்.

2. 'அரியானை அந்தணர்தம்' என்ற திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் பேகடா ராகத்தில் ரூபக தாளத்துடன் பாடப்பட்டு வந்தது. இவ்வழக்கம் நூறு வருடத்திற்கு முன்னால் இருந்தது. இப்போது, ஓதுவார்கள் ஹரிகாம்போதி ராகத்தில் சுத்தாங்கமாகப் பாடி வருகின்றனர்.

3. சுந்தர ஓதுவாமூர்த்தியால் கையாளப்பட்ட பண் செந்துருத்தியில் அமைந்த 'மீளா அடிமை' என்ற ஆதி தாளப் பாடல் இப்போது ஓதுவார்களால் திஸ்ரதிரிபுட தாளத்தில் பாடப்பட்டு வருகிறது.

4. கௌசிகப் பண்ணில் அமைந்த திருஞான சம்பந்தரின் 'காதலாகிக் கசிந்து' என்ற பாடல் இரண்டுகளை சௌகத்தில் ஓதப்பட்டு வந்தது. இப்பாடலின் அமைப்பில், அகாரம் அவ்வப்போது கையாளப்பட்டு வந்தது. இப்பாடல் 3,4 அட்சரங்களுக்குப் பிறகு தொடங்கியது. ஓதுவார்கள் இப்பாடலை பண் மாறாமல் ஒருகளை ஆதி தாளத்தில் பாடி வருகின்றனர். மத்யகாலமாக பாடப்பட்டுவரும் இப்பதிகம் நாலுகளையிலும் பாடப்பட்டுவருகிறது. இந்த மாற்றம் கடந்த இருபது வருடங்களுக்குள் ஏற்பட்டதாகும்.

5. 'ஆளிந்தான் உகந்து' என்ற ஞானசம்பந்தர் பதிகம் பண் தக்கேசியில் திஸ்ரஜாதி திரிபுட தாளத்தில் 3,4 அட்சரங்களுக்கு பிறகு தொடங்கும் கிரஹஸ்வரத்தைக் கொண்டதாக அமைந்தது. இந்த அமைப்பை தண்டபாணி தேசிகர், சுந்தர ஓதுவாமூர்த்தி, வேலாயுத ஓதுவார் மற்றும் அடங்கன் முறை அருணாசலம் ஐயா ஆகியவர்கள் பின்பற்றினார்கள். இப்பொழுது, இந்த அமைப்பு கீர்த்தனமாக ஆதி தாளத்தில் பாடப்பட்டு வருகிறது. பாடலில் எடுப்பு சமத்தில் தொடங்குகிறது. கடந்த இருபது ஆண்டுகளாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**1. திரு. குடந்தை வெ. இலட்சுமணன் அவர்களுடன் நேர்காணல், 5.7.1994, சென்னை.

6. ஞானசம்பந்தரின் 'இடரினும் தளரினும்' என்ற பதிகம் பண் காந்தார பஞ்சமத்தில் இரண்டுகளை ஆதியில் 3,4 அட்சரத்திற்குப்பிறகு தொடங்கும் அமைப்பை உடையது. இப்போது ஒருகளை ஆதியில் சமத்தில் தொடங்கி பாடப்பட்டு வருகிறது. தற்போது, முதல் பகுதி சதுரஸ்ர நடையிலும், மற்றொரு பகுதி திஸ்ர நடையிலும், முதல் பகுதியை திரும்பப்பாடுவதற்கு சதுரஸ்ர நடையிலும் அமைந்துள்ளது. இருபதிலிருந்து முப்பது ஆண்டுக்குள் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

7. 'சடையார் புனல்' என்ற பதிகம் பண் நட்டபாடையில் பாடப்படும், நாட்டைக் குறிஞ்சி ராகத்தில் ரூபகதாளத்தில் இரண்டு காலத்திலும் பாடப்பட்டு வந்தன. தற்போது பண் நட்டபாடையில் ரூபக தாளத்தில் பாடப்பட்டு வருகின்றது.

மேலே கூறப்பட்டுள்ள தேவார பதிகங்களின் ஸ்வரக் குறிப்புகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.1

கடந்த நூறு ஆண்டுகளாக பண் வியாழக்குறிஞ்சியில் பாடப்பட்டு வரும் "பிடியதன் உருவுமை" என்ற பதிகம் பண் நட்டபாடையில் பாடப்பட்டுவருகிறது. 'மந்திரமாவது நீறு' (சம்பந்தர்), 'பித்தா பிறைசூடி' (சுந்தரர்), 'வண்டார் குழல்' (சம்பந்தர்), 'உண்ணாமுலை' (சம்பந்தர்) போன்ற பதிகங்கள் இரண்டு காலங்களில் பாடும் பாடல்கள் ஆகும்.

ஓதுவார்கள் அரிகாம்போதியை கையாளுவதில் வல்லவர்கள் ஆவார்கள். இப்பொழுதுகூட நாம் கர்நாடக இசைக் கச்சேரிகளில் அரிகாம்போதியைவிட காம்போதி ராகத்தைத்தான் அவ்வப்போது கேட்கிறோம். தாளம் இல்லாமல் சுத்தாங்கமாக பாடப்பட்டு வருகின்றது. பண் கொல்லியில் அமைந்த திருநேரிசைப் பாடல்கள் நவரோஸ் ராகத்தில் பாடப்பட்டு வருகிறது. திருவிருத்தம் பதிகங்கள் கௌசிகம் பண்ணிற்குச் சமமான இராகமான பைரவியில் பாடப்பட்டு வருகிறது.

உதாரணத்திற்கு, திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகைப் பதிகங்களை எந்த இராகத்தில் வேண்டுமானாலும் பாடலாம். மரபுப்படி, திருக்குறுந்தொகை பண் சீகாமரம் அல்லது நாகநாமக்ரியா ராகத்தில் பாட வேண்டும்.

ஓதுவார்கள் திருத்தாண்டகப் பதிகங்களை ஒரே வரியை எடுத்துக்கொண்டு நிறைய சங்கதிகளைப் புகுத்தி திரும்பத்திரும்ப ஓதுவர். ஓதுவார்கள் வார்த்தைகளைப் பொருளுக்கேற்றவாறு பிரித்துப் பாடுவதில் வல்லவர்கள்.

ஆகவே இவையாவும் பழங்கால மரபிலிருந்து மாறுபட்ட முறையாகும்.

ஓதுவார்கள், கர்ப்பக்கிரகத்தில் தேவாரத்தை பண் மாற்றிப் பாடுதில்லை.

**1. இணைப்பு 15.

# நிறைவுரை

இவ்வாய்வு ஐந்து இயல்களாக வகுத்துக் கொள்ளப்பட்டு ஓதுவார்களின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழிசைக்கு மூவர் ஆற்றிய பெரும்பணி, ஓதுவார்களின் வாழ்க்கை நெறி மற்றும் முக்கிய ஓதுவார்களின் வாழ்க்கை விவரக் குறிப்பு ஆகிய பொருள்கள் ஆயப்பட்டன. கடந்த பல நூற்றாண்டுகளில் தேவார ஓதுதலில் ஏற்பட்டு வந்த சிறப்பான மாற்றங்களை விவரிக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இயல் ஒன்றில் மக்களிடம் கி.பி. 8ஆம் நூற்றாண்டிலேயே தேவாரம் ஓதும் வழக்கம் இருந்துவந்தது என்பது கல்வெட்டுகளின் துணையோடு மெய்ப்பிக்கப்பட்டது. தேவாரப் பண்களை ஓதுவார்கள் மாற்றவில்லை. பண்ணோடு தேவாரம் ஓதப்பட்ட காரணத்தினால்தான் சமய மறுமலர்ச்சியும் புனர் அமைப்பும் சாத்தியமாயிற்று.

இயல் இரண்டில் தேவாரப் பண்களில் பிரதியத்யம ராகம் ஒன்றினை மட்டும் கண்டோம். சாதாரி மற்றும் நட்டராகம் பண்கள் பந்துவராளி ராகத்தோடு தொடர்புடையவை. மற்ற பண்கள் சுத்தமத்தியம ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

இயல் மூன்றில் தெய்வப் பாடல்களின் விவரமும், பல்வேறு சந்நிதானங்களில் ஓதுவார்கள் பாடிவரும் பாடல்களின் விவரமும் அறிந்தோம். பதினைந்து ஓதுவார்கள் வினாப் பட்டியலுக்குத் தந்திருந்த விவரங்களை மதிப்பீடு செய்து ஆயப்பட்டது. ஆய்வுக்குக் கொள்ளப்பட்ட 14 ஆலயங்களில் ஐந்து ஆலயங்கள் மூவரால் பாடப்பெற்ற சிறப்புடையவை. திருஞானசம்பந்தர் ஐந்து திருக்கோயில்களையும் பாடியுள்ளார். திருநாவுக்கரசர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் மீது ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார். சுந்தரர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலை மட்டும் பாடியுள்ளார். மூவரும் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலை பாடியுள்ளார்கள். திருக்கோயில் கருவறைகளில் ஓதுவார்கள் மரபுவழக்கப்படி பாடிவருகிறார்கள். சாயரட்சை (அந்தி நேரம்) பூசையின்போது மட்டும் பஞ்சபுராணம் பாடப்பட்டு வருகிறது. கருவறையில் நிரவல் மற்றும் கல்பனா ஸ்வரங்கள் பொதுவாகப் பாடப்படுவதில்லை.

தேவாரம் பாடப்பயன்படுத்தப்பட்டுவந்த இசைக்கருவிகளில் சாரங்கி என்ற நரம்பிசைக்கருவி ஆரம்பகாலத்தில் வழக்கில் இருந்து வந்துள்ளது. ஓதுவார்களுக்குச் சாரங்கி வாசிப்போர் உதவியாக வாசித்துள்ளனர். சென்னை வானொலி நிலையத்தில் பணி செய்து வந்தவரும் தமிழிசைச் சங்க இந்நூல் செயலாளருமான திரு மீ.ப.சோமு அவர்கள் தென்னாட்டில் சாரங்கி மிகப் பிரசித்தி பெற்று விளங்கியது எனவும்,

ஓதுவார்கள் தாமே அக்கருவியை வாசித்துத் தேவாரமும் பாட வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள் என்வும் அவரை நேர்கண்டபோது தெரிவித்தார்கள். இந்நாளில் அக்கருவி எவரும் இசைப்பதில்லை. வயலின் மற்றும் மிருதங்க இசைக் கலைஞர்களே ஓதுவார்களுக்கு உதவியாகப் பாடி வருகிறார்கள்.

இசை என்ற அடிப்படையில் பார்க்கும்போது தேவாரம் ஓதுதல் தற்போது இசைக்கச்சேரி என்பதாகவும் மாறிவருகிறது. ஆலயத்தில் மட்டுமே பாடிவந்த ஓதுவார்கள் இப்போது பொது நிகழ்ச்சியாகவும் வழங்கி வருகிறார்கள். அதிகமான மக்களைக் கவர்வதற்காக நிரவல் மற்றும் கல்பனா ஸ்வரங்கள் பாடப்பட்டு வருகின்றன. மனோதர்ம சங்கீதம் என்ற வகையில் இவ்வாறு பாடப்படுவதால்தான் சமயப் பாடல்களுக்கும் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு ஏற்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தேவார இசையைக் காப்பாற்றி வளர்ப்பதற்காக தமிழிசைச் சங்கமும் இராமலிங்கர் பணி மன்றமும் ஆண்டுதோறும் இசை விழாக்களை நடத்தி வருகிறது. 1943இல் ராஜாசர் எம். அண்ணாமலை செட்டியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட தமிழிசைச் சங்கம் டிசம்பர் திங்களில் தொடர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நிகழ்ச்சிகள் வழங்கவும், பண்ணாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவும் ஓதுவார்களை அழைத்துச் சிறப்பித்து வருகின்றது.

ஓதுவார்கள் பண் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். அரிய உரை விவாதங்கள் "பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும்" என்ற புத்தகத்தில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. அருட்செல்வர் திரு பொள்ளாச்சி டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இராமலிங்கர் பணி மன்றம் தேவார இசை பரப்புவதில் மகத்தான சேவை புரிந்து வருகின்றது. இம்மன்றம் தமிழிசைக் கலை விழாக்களை சென்னை, கோவை, மற்றும் திருச்சியில் ஏற்பாடு செய்து வருகிறது.

சென்னை வானொலி நிலையம் மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் ஓதுவார்களுக்கு இசைக் கச்சேரி வாய்ப்புகள் வழங்கி அவர்களை முன்னேற்றி வருகிறது. தமிழ்த் திருக்கோயில் தெய்வீக இசையை ஓதுவார்கள் ஒலி இசை நாடாக்கள் மூலமாகவும் நன்கு பரப்பி வருகிறார்கள். தமிழிசை இயக்கம் தற்போது சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ், ஸ்ரீலங்கா(இலங்கை), தாய்லாந்து முதலிய நாடுகளிலும் பிரசித்தி பெற்று வருகிறது. தென் ஆப்பிரிக்காவிலும்கூட அங்குள்ள தமிழ்மக்கள் தமிழிசை மற்றும் இலக்கிய விழாக்களை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார்கள்.

இதுகாறும் யான் நேர் கண்ட ஓதுவார்கள் அனைவரும் தமிழ்இசை, தமிழ்மொழி பற்றிய அறிவும், தேவார வரலாறும் மக்கள் அனைவரும் அறிந்திருத்தல் அவசியம் என்ற கருத்தை வற்புறுத்தியுள்ளார்கள்.

பிறர் விருப்பு வெறுப்புகள், குடும்பக் கவலைகள், குறைந்த ஊதியம், அர்ச்சகருக்கு உதவியாய் இருக்கும் நிலை, மற்றும் முக்கிய பிரமுகர்கள் விருப்பத்திற்கு இணங்கும் நிலை - இத்தனைக்கும் நடுவே தாம்பாடும் பாடலை விரும்பிக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் இறைவனைப் போற்றி தானும் முறையாகப் பாடி வருகிறார்கள் ஓதுவாமூர்த்திகள். தேவாரம் பாடும்போது அவர்கள் ஒருநாளும் மூலத்தைப் பார்த்துப் பாடுதில்லை.

ஆலய அர்ச்சகர் இறைவனுக்குத் தீபாராதனை காட்டியபிறகு ஓதுவார்கள் பாடவேண்டும், ஆயினும் குருக்களின் கட்டாயத்திற்காகவும், முக்கிய பிரமுகர் சீக்கிரம் செல்ல வேண்டும் என்பதற்காகவும், அவசர அவசரமாகப்பாடி முடிக்கவேண்டிய நிலை இருந்து வருகின்றது.

நேர்கண்ட ஓதுவார்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஊதியம் இயல் மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலய வருவாயைப் பொருத்தே ஓதுவார்களின் சம்பளமும் இருந்து வருகிறது. தகுதியும், முதிர்ச்சியும் பொருட்படுத்தப்படாமல் வேலை செய்துவரும் ஆலயத்தின் வருவாயிற்கேற்ப அவர்கள் வெவ்வேறு ஊதியம் பெற்று வருகிறார்கள்.

தேவாரப் பாடசாலைகளின் எண்ணிக்கையும் சுருங்கி வருகிறது. ஓதுவார்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு வருவதால், தற்காலத்தில் இளைஞர்கள் தேவாரப் பாடசாலைகளில் சேர்ந்து பயிலவும் தயக்கம்காட்டி வருகிறார்கள். அவர்கள் வேறு வேலை தேடுகிறார்கள். பெரும்பாலான ஓதுவார்களின் பிள்ளைகளும் வேறுவேறு வேலையைத்தேடிக் கொள்கிறார்கள்.

மேலும் எல்லா திருக்கோயில்களிலும் ஓதுவார்கள் இல்லை. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் உள்ள சில திருக்கோயில்களில் ஒன்று அல்லது இரண்டு ஓதுவார்கள் இருந்து வருகிறார்கள். சில தனியார் திருக்கோயில்களில் தான் ஓதுவார் பணிக்கு அமர்த்தப்பட்டு உள்ளார்கள். எல்லா திருக்கோயில்களிலும் ஓதுவார் பணிக்கு அமர்த்தப்படுவார்களேயானால், அப்பயிற்சி பெறும் அனைவரையும் வேலையில் அமர்த்திவிடமுடியும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எவ்வளவு வேலை வாய்ப்புகள் இருக்குமோ, அவ்வளவு மாணவர்களையும் பயிற்சி தந்து ஓதுவார்கள் ஆக்கிவிட முடியும்.

சாதி, இனம், வகுப்பு வேறுபாடு இன்றி ஓதுவார்கள் இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவாரம் பயிற்றுவித்தல் வேண்டும். தேவார பாடல் விளக்கங்களையும் அவர்கள் கூறித் தத்தம் மாணவர்களைப் பயிற்றுவித்தல் வேண்டும்.

தொன்மையான தமிழ்க்கலை மற்றும் கலாச்சாரத்திற்குப் பாலமாக விளங்குபவர்கள் ஓதுவார்களே.

தொழில் வகையில் ஓதுவார்களுக்கு உள்ள எதிர்காலம் பற்றியக் கருத்தினைக் கூறக் கேட்டபோது, ஓதுவார்கள் எல்லோரும் நம்பிக்கையற்ற நிலையையே கூறுகிறார்கள். ஓதுவார்கள் குடும்பத்தில் உள்ளவர்களே ஆர்வமற்று இருப்பதால் ஓதுவார் தொழிலுக்கு எதிர்காலமே இல்லை என்ற நிலைதான் இன்று இருந்து வருகிறது. அரசு ஓதுவார்களைக் காக்க நடவடிக்கை மேற்கொண்டால்தான் எதிர்காலம் நலமாக அமையும். முற்காலத்தில் அரசர்கள் தேவார ஓதுதலை அழிவில்லாததாக்கவும், முறைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் தாராளமாக கொடை வழங்கியதை நினைவில் கொள்ளவேண்டும். அத்தகைய அரசு வெகுமதிகள் இன்றிருப்பதற்கு வழியில்லை; ஆகவே அரசாங்கமே ஓதுவார்களை ஊக்கப்படுத்தி ஆதரித்திடல் வேண்டும். மக்களைச் சமய வழிப்படுத்தி மேம்படுத்தும் ஓதுவார் பணிக்கு என்ன வெகுமதி அளித்தாலும் அது ஈடாகாது. அரசுப் பணியில் ஒரு உதவியாளருக்கு வழங்கும் அளவு ஊதியமாவது உடனடியாக ஓதுவாருக்கு வழங்கிட அரசு முன்வரவேண்டும்.

ஏற்கனவே தெரிவித்தபடி, இப்பொருள் பற்றிய இலக்கிய ஆதாரங்கள் மிகக்குறைவே. ஓதுவார்களுடனும் தமிழ் அறிஞர்களிடமும் நான் மேற்கொண்ட நேர்காணல்கள் தான் இவ்வாய்வினை நேரிய முறையில் நிறைவு செய்வதற்குப் பெரிதும் உறுதுணையாயின.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே".

-திருஞானசம்பந்தர்.

# இணைப்பு -1

## திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரால் கையாளப்பட்ட புதுமையான செய்யுட்கள்

### திருஞானசம்பந்தர்

| பாடலின் அமைப்பு | பண் |
|---|---|
| மொழி மாற்று | வியாழக்குறிஞ்சி |
| ஏகபாதம் | வியாழக்குறிஞ்சி |
| திரு எழுக்கூற்றரிக்கை | வியாழக்குறிஞ்சி |
| திரு மாலை மாற்று | கௌசிகம் |
| திருச் சக்கர மாற்று | காந்தாரம் |
| ஈரடி மேல் வைப்பு | காந்தார பஞ்சமம் |
| நாலடி மேல் வைப்பு | காந்தார பஞ்சமம் |
| திருமுக்கால் | சாதாரி |
| திருவியமகம் | பழம் பஞ்சுரம் |
| திருவிருக்குக்குறள் | குறிஞ்சி |
| **திருநாவுக்கரசர்** | |
| திருநேரிசை | கொல்லி |
| திருக்குறுந்தொகை | ஏதாவது ஒரு ராகம் |
| திருத்தாண்டகம் | குறிஞ்சி |
| திருவிருத்தம் | கௌசிகம் |

# இணைப்பு-2

# திருவல்லம் கல்வெட்டு

No. 43.—On the north wall of the mahamandapa in the Bilvanathesvara temple.

(S.I.I. Vol. III)

This inscription and No. 44 are written continuously, the first two words of No. 44 occupying the end of line 46 of No. 43. The two first lines of No. 43 state that both inscriptions are copies of earlier stone inscriptions, and that these copies were made when the *mandapa* of the temple was pulled down and rebuilt. Consequently the alphabet of Nos. 43 and 44 exhibits more recent forms than No. 42, though the date of No. 43 is anterior to No. 42.

No. 43 belongs to the 17th year of the reign of the same king as No. 42,—Vijaya-Nandivikramavarman (l. 3 f.). It records that three villages were granted to the temple at the request of the Bâṇa king Vikramâditya (l. 12 ff.). Two chiefs of this name are mentioned in the Udayêndiram plates of Vikramâditya II.[5] The grant recorded in these plates must be prior to the time of Prithivîpati II., because the Chôḷa king Parântaka I. transferred to the latter the Bâṇa kingdom, which he had wrested from two Bâṇa chiefs.[6] The accession of Prithivîpati II. has to be placed before the 9th year of Parântaka I., *i.e.* before about A.D. 909.[7] Consequently, as pointed out by Dr. Fleet,[8] Krishṇarâja, the friend of the Bâṇa king Vikramâditya II.,[9] seems to have been the Râshṭrakûṭa king Krishna II. (A.D. 888 and 911-12); and the Bâṇa king Vikramâditya, who is mentioned in the subjoined inscription as a contemporary of Vijaya-Nandivikramavarman in the 17th year of this king, may be identified with Vikramâditya I., the grandfather of that Vikramâditya II. who issued the Udayêndiram grant.

One of the three villages granted was Aimbûṇi (l. 6), apparently the modern Ammuṇḍi[10] near Tiruvallam. The three villages were clubbed together into one village, which received the new name Viḍêlviḍugu-Vikkiramâditta-chaturvêdimaṅgalam (l. 9 ff. and l. 20 ff.). The executor of the grant was Kâḍupaṭṭi-Tamiḻa-Pêrarayan (l. 15). The same title was borne by the executor of the Bâhûr plates of Vijaya-Nripatuṅga-varman. In the transcript of these plates, which is in my hands,[11] he is called விடேடாகெவிடு-காடுபட்டித்தமிழ்ப்பேரரயன் which is evidently a mistake of the copyist for Viḍêlviḍugu-

Kâḍupaṭṭi-Tamiḻa-Pêrarayaṉ. This title and the surname of the village granted by the present inscription[1] suggest that Viḍêlviḍugu, *i.e.* 'the crashing thunderbolt,' may have been a surname of Vijaya-Nandivikramavarman and of his son Vijaya-Nṛipatuṅgavarman.

Of great interest is the mention of persons who had to sing the *Tiruppadiyam*, *i.e.* the *Dêvâram*, in the temple (l. 32 f.). Hitherto the earliest known mention of the *Dêvâram* was in an inscription of Râjarâja I.[2] The subjoined inscription proves that it was considered a holy book already in the 9th century A.D.

TEXT.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] தி[ரும]ண்டபமிழிச்சிசெ[டு]ப்ப-
2 தற்கு முன்புள்ள சிலாலெகைப்படி [||*]
3 கொ விஜயநந்திவிக்கிரமபந்ர்[க்]கு யா[ண்]டு ௰௭
4 ஆவது படு[வூர்]க்[கொ]ட்டத்து மீயாற்றுநாட்டுத்திருக[ா]-[3]
5 ளிவல்லமுடை[ட]ய பரமெஸ்வரர்[கு]
6 இன்று[ட்டு] ஐம்[பூ]ணியும் வி-
7 ளத்தூரும் இத்தெவர் தெ[வ]-
8 தா[ன]ம் அம[ரு]ள்நிமங்க[லமு]-
9 ம் விடெல்விடுகுவிக்கிரமா-
10 தித்தச்சதுர்வெதிமங்-
11 கலமென்னும் பெரா-
12 ல் ஏகக்கிராமமாக மாவலி-
13 வாணராயறு[ன] விக்[கி]ரமா[தித்]த-
14 வாணராயன் விண்ணப்பத்[த]ாலு-
15 ம் காடுபெ[ட்]டித்தமிழப்பெ[ர]ர[ா*][ய]ன்
16 ஆணத்தியாலும் ஏகக்கிராமமாக்கி [இ]வ்[வ]-
17 [ம]ருந்நிமங்கலமுன்னித்திகாளிலெல்ல-[4]
18 முடைய பரமெஸ்வரர்க்கு [illegible]
19 [ரு]கின்ற ஜ[5] இரண்டாயிரக்காடியும
20 பொன்னிருபதின் கழஞ்சும்விடெ-
21 டெல்விடுகுவிக்கிரமாதித்தச்சதிர்-[6]
22 வ்வெதிமங்கலத்துச் சபையார்
23 இறப்பாராகவுமின்னெல்லிற்த்[தி]-
24 ருவமிர்துக்கு நெல்லு அறுநூற்றுக்-
25 க்காடியும் திருவுண்ணாழிகையுள்ளா[ா]-
26 தி[த்]தப்பாசரிக்கும் [ஶிவ]ப்ராஹ்மண-
27 ர்க்கு நெல்லு ஐஞ்-
28 ஞூற்றுக்காடியும் ஸ்ரீப-
29 லி கொட்டுவார்கு நெல்லு
30 ஐஞ்ஞூற்றுக்கா[டியு]ம்
31 திருப்பள்ளித்தாமம்
32 பறிப்பார்க்கும் திருப்-
33 பதியம் பாடுவாருள்ளி-

34 ட்ட பலபணி செய்வார்-
35 க்கு நெல்லு நாநூற்று-
36 க்காடியும் திருநொ[ந்]தா-[1]
37 விளக்குக்கும் திருமெய்ப்பூச்சுக்[கும்]
38 சிதாரிக்[கு]மற்றும் வஜ்ஜூரைடை தக[வ]க-[3]
39 நூ[ா]கிகளுரும்மாகப்[ெ]பான் இ[ருப]தி-
40 ன் கழஞ்சும் ஆக இன்[னெ]ல்லும்
41 இப்பொன்னு[ம்] இத்தெவற்கு
42 சந்த்ராதித்தவல்லிறுப்பார்களா-
43 [க]வும் [|*] இப்பரிசு பிவஸ்தமாக-
44 ச்செய்து குடுத்தொ[ம்] [|*]
45 இஷூ333 [3] வ நூாரெக்ஷ-
46 [ஸ்ய]ாாரெக்ஷ ||—||உ

TRANSLATION.

(Line 1.) Hail! Prosperity! (*The following is*) a copy of a stone inscription which existed before the *maṇḍapa* of the temple had been pulled down and re-erected.

(L. 3.) In the 17th year (*of the reign*) of king Vijaya-Nandivikramavarman.

(L. 4.) Mâvalivâṇarâya, *alias* Vikkiramâdittavâṇarâya, (*had made*) the request that to (*the temple of*) Paramêśvara (Śiva) at Tîkkâli-Vallam in Mîyâṟu-nâḍu, (*a subdivision*) of Paḍuvûr-kôṭṭam, (*should be given three villages*) in the same *nâḍu*, (*viz.*) Aim-[bû]ṇi, Viḷattûr and Amaruṉṟimaṅgalam, a *dêvadâna* of this god, (*and that they should be clubbed together into*) one village, named Viḍêlviḍugu-Vikkiramâditta-chaturvêdimaṅgalam.

(L. 14.) In conformity with (*this request*), and Kâḍupaṭṭi-Tamiḻa-Pêra[ra]yaṉ being the executor,[4] (*the three villages*) were made into one village.

(L. 16.) The members of the assembly of this Viḍêlviḍugu-Vikkiramâditta-chaturvêdimaṅgalam shall have to pay two thousand *kâḍi* of paddy and twenty *kaḻañju* of gold, which were being paid before by this Amaruṉṟimaṅgalam to this (*temple of*) Paramêśvara at Tîkkâli-Vallam.

(L. 23.) Of this paddy, six hundred *kâḍi* of paddy (*are allotted*) for offerings; five hundred *kâḍi* of paddy to the *Śiva-Brâhmaṇas* who desire to be fed, beginning with those in charge of the store-room of the temple;[5] five hundred *kâḍi* of paddy to those who beat (*drums before*) oblations; four hundred *kâḍi* of paddy to those who pick (*flowers for*) temple garlands, and to those who perform various (*other*) services, including the singers of the *Tiruppadiyam*; and twenty *kaḻañju* of gold for the perpetual lamps, for anointing the idol, for bark,[6] and for repairing breaks and cracks, *etc.*

(L. 40.) (*The members of the assembly*) shall have to pay this paddy and this gold to this god as long as the moon and the sun exist.

(L. 43.) In this manner we have given (*the village*) for (*providing*) the necessaries.

(L. 44.) This charity (*is placed under*) the protection of all *Mâhêśvaras*.

# இணைப்பு-3

## அல்லூர் கல்வெட்டு

(Ref: S.I.I. Vol VIII) No. 687.

(*A.R. No.* 373-*A of* 1903).

On the same wall.

1 [கொப்பரகெ]சரி(ப்)பா‌மற்கு யாண்டு ௬-ஆ-
2 [வது] . . முடையார் விரசொழ இளங்கொவெ-
3 ளாயின ஒ ம் மதுராந்தகன் இந்நிலம் வெ[லியு]-
4 ம் குடி[நீ]க்கிய தெவதான(ம்)மாகச் செய்து குடு-
5 த்தொ[ம்] இந்நிலம் வெலியும் நிலந்தம் அ-
6 டைச்சபரிசாவது [|*] திரு[அ]முதுக்குப் ப-
7 த் தெட்டுக் குத்தல் சூலகாழியால் அரிசி ஐஞ்-
8 ஞாழியால் நெல்லுக் குறுணி நானாழி உரியு-
9 ம் நெய் அமிதுக்குங் கறி அமிதுக்கும் தயிரமி-
10 துக்கும் அடைக்காய் அமிதுக்கும் ஆக நெல்லு
11 முன்னு[ழியு]ம் ஆக நெல்லு நிசதி [நெல்]லு
12 . . . க்காகபடி ஓராட்டை நாளைக்கு நெல்]லு ௬௰-ள
13 அ[றுப]தின் கலத் நால் நிலம் இ அ[ரை]யும் திருப்ப-
14 தியம் பாடும் அடிகள்மார் முவற்க்கு நிலம இ அரையு-
15 ம் ஆக நிலம் வெ லியும் குடிநீக்கிய தெவதான-
16 மாகச் [செய்து குடுத்தொ]தாம் என்று ஸ்ரீமுகம் வரத்
17 தொழு[து தலைமெ]மல்க்கொண்டு அறையொலை செ-
18 ய்து குடுத்தொம் அல்லூர் ஊரொம்[|*]இது பந்மாஹெ-
19 [ஸ்வர ரக்ஷை] [||*] இரண்டு சந்தியும் ஸ்ரீ பலி[யுங்]
20 த . . . . டுவதாகவும் [|*] இ[து*] பந்மாஹெஸ்வ[ர*] ரக்ஷை[||*]

Allur.

---

[1] The record is mutilated and the stones are misplaced.

44

# இணைப்பு-4

# அந்தாநல்லூர் கல்வெட்டு

## No. 749.

(*A.R. No.* 433 *of* 1903).

ON THE EAST WALL OF THE FIRST PRAKARA OF THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] பூமெவுவளர் திருப்பொந் மார்வு புணர நாமெவு கலைமகள் நிலம் பெரிது
சிறப்ப வினை[ச*]யமாமகள் [தன் னிரு]புயத் திருப்ப இசை-

2 யின்செல்வி எண்டிசை விளங்க நிருபர் வந்திறைஞ்ச நீணிலமடந்தை[யை]யத் திருமணம்
புணர்ந்து சிர்வளர்-

3 தருமணிமுடி கவித்தந்ந அணிமுடி சூடி மல்லைஞால[த்து]ப் பல்லுயிர்[க்*]கெல்லாம்
எல்லையி லின்பம் யியல்விநில் லெ-

4 ய்த வெண்குடை நிழற்றச் செங்கொலொச்சி வாழி பல்லூழி அ . . . ப்ப செம்பொந்
வி[ர*] ஸிம்ஹாஸநத்து புவநமுழுதுடையா-

5 ளொடும் வீற்றிருந்தருளிய கொவிராஜகெசரிபந்மராந திரிபுவநசக்கரவர்த்திகள் ஸ்ரீ
கொலொத்துங்கசொழதெவற்கு இயாண்டு இரண்-

6 டாவது இராஜராஜவளநாட்டுப் பனையூர்நாட்டு வாவலூர்நாட்டுத் தெவதானம் திரு-
வாமாத்தூர் ஆளுடைய [அ]ழகியதெவர்

7 கொயிலில் திருப்பதியம் பாடிவரும் குருட[ர்]களைத் தவித்து[1] நம் தெவாரத்து திருப்பதி-
யம் பாடும் பொய்யாதசெவடி தெவகணுதநாந

8 இராஜ[ரா]ஜப் பிச்சனுக்கும் இவந் வற்கத்தார்க்கும் இக்கொயிற் திருப்பதியக்காணியா-
[ன] இவ்வூர் முதல்காணியாக குடுத்தொம்

9 இவந் வற்கத்தாரையுமெய் இட்டுத் திருப்பதியம் பாடுவித்துக்கொண்டு முன்பிலாண்டு-
கள் குருட[ர்*]களுக்கு விட்டுவரும் நிவந்த-

0 ப்படி இவர்களுக்கும் விட்டுக் கல்வெட்டுக வெந்று திருவாய்மொழிந்து திருமுகம் பிர-
ஸாதஞ்செய்து வந்தமையிற் இ[க்குருட]ர்-

1 கள் முன்பிலாண்டுகள் அநுபவத்தின்படி பாடிவருங் குருட[ர்*]கள் பெர் பதிநறுவரும்
இவர்களுக்கு கண்காட்டுவார் இருவரும் ஆ-

2 கப் பெர் பதிநெண்மர்க்கு பெரால் நெல்லு பதக்காக நாளொன்றுக்கு நெல்லு முக்கல-
மாக நாள் மூந்நூற்றறுபதுக்கு நெல்லு ஆயி-

3 ரத்தெண்பதின் கலமும் புடவைமுதலுக்கு பெரால் காசு ஒன்றாக காசு பதிநெட்டுக்கு
காசு ஒன்றுக்கு நெல்லு இருபதிந் கலமாக வ-

4 ந்த நெல்லு ஆயிரத்து நாநூற்று நாற்பதின் கலத்துக்கு வெலி ஒன்றுக்கு நெல்லு
நூற்றிரு-

5 பதின் கலமாக இத்தெவர் தெவதாநம் கடுவநூரில் விட்ட நிலம் பந்நிருவெலி இந்நிலம்
பந்நிருவெலியும் காணியாக இவ்வூர் நில-

6 ங்கலந்தபடியெ கைக்கொண்டு இத்திருப்பதியம் பாடுவார் பெர் பதிநெண்மரும் முன்று
ஸந்தியும் வந்து திருப்பதியம்

7 விண்ணப்பஞ்செய்து முன்பிலாண்டுகள் இக்குருட[ர்*]கள் நிலங் கைக்கொண்டு செய்து-
வரும்படியெ இத்திருப்பதியம்

8 விண்ணப்பஞ்செய்வாரும் செய்துவரக்கடவர்களாக இப்பொய்யாதசெவடி தெவர்கணுத-
நாந ராஜராஜப் பிச்சனுக்கும் இவந் வற்-

9 [கத்தார்க்கும் காணியாக குடுத்தொம்] [||*]

[1] Portions in lines 7 to 9 have been erased by light chiselling.

# இணைப்பு-5

# திருவாமட்டூர் கல்வெட்டு



## No. 139.—ON THE SOUTH WALL OF THE MANDAPA IN FRONT OF THE CENTRAL SHRINE IN THE VATÂTIRTHANATHA TEMPLE AT AṄDANALLUR[1].

This is an unfinished inscription, dated in the 14th year of Parakêsarivarman. It registers a grant of land, by Sembiyaṉ Irukkuvêḷ *alias* Pûdi Parântakaṉ, to the temple at Anduvanallûr Tiruvâlanduṟai, which he had himself built. The donor has been identified by the late Rai Bahadur Venkayya, with Parântakavarman the son of the Koḍumbâḷûr chief Vikramakêsarin. Consequently king Parakêsarivarman may be identified with Uttama-Chôḷa.[2]

### TEXT.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] நமஶ்ஶிவாய [||*] கொப்பரகெசரிவந்மற்கு யாண்டு
2 ம்சு ஆவது கிளியூர்நாட்டு அந்துவநல்லூர்த்திருவாலந்-
3 துறைப் பரமெஸ்வ[ரர்*]க்கு செம்பியன் இருக்குவெளாயின பூதி
4 பராந்தகன் கற்றளி எடுத்து [3][ஜ]லதூவெரா[க்ஷண]ஞ் செய்த நா[ள்*]-
5 [று] தெவதாநம் செய்து குடுத்த ஊர் உறையூர்ற்[4]கூற்றத்து எட்டரைத்தனி-
6 ல் முள்ளிக்குறும்பில் தெவரிது பழந்தெவதாநம் வெலி நீக்கி மிஞ்சுச்[செ]-
7 ய்து குடுத்த நிலம் எ(ழ்)முரை இவ் எ(ழ்)முரையாலும் செய்த நிவந்தம் [|*]செ-
8 ன்நடைக்கு ஒன்றெய்காலெ அரைமாவும் [திரு]விளக்கு எட்டு நொந்தாவிளக்கிநு-
9 க்கு நிலம் இருவெலியும் மாணிகள் நால்வர்க்கு வெலியும் சங்கு இரண்டுக்கு பத்-
10 தும் காளம் இரண்டுக்கு பத்தும் செயகண்டிகை ஒன்றுக்கு மும்மாவரையும் திருப்-
11 பள்ளித்தாமம் இரண்டுக்குக்காலும் திருமெழுக்கு மூன்றுக்கு எழுமாவரையும்
12 நெய் அ[மி]து பொது உழக்காக நிசதி மூழாக்காளபடியிநால் நிலம் முக்காலும்
13 காடிகை ஒன்றுக்குக் காலும் திருப்பதியம் பா

### TRANSLATION.

(Line 1.) Hail! Prosperity! Obeisance to Śiva! In the 14th year of (*the reign of*) king Parakêsarivarmaṉ, on the day when Śembiyaṉ Irukkuvêḷ *alias* Pûdi Parântakaṉ, having constructed a stone temple to the god (*paramêśvara*) at Anduvanallûr-Tiruvâlanduṟai in Kiḷiyûr-nâḍu, sprinkled (*it*) with water (*i.e.*, *consecrated it*), (*he*) gave as *dêvadânam* at Muḷḷikkuṟumbu of Uṟaiyûr-kûṟṟam in the (*plot of land measuring*) $8\frac{1}{2}$ (*vêli*), the village (*i.e.*, land)[5] $7\frac{1}{2}$ (*vêli*) which was the remainder (*left*) after deducting the (*one*) *vêli* of old *dêvadâna* (*land*) of the god. From these $7\frac{1}{2}$ (*vêli of land*) the (*following*) arrangement (*nivanda*) was made for temple expenses :—

(L. 7.) One (*vêli*) and a quarter and half *mâ* for (*worship in*) the temple (*śennaḍai*); two *vêli* of land for eight sacred perpetual lamps; (*one*) *vêli* for four *mâṇis*[6]; ten (*mâ*) for two conch (*blowers*); ten (*mâ*) for two trumpet (*blowers*); three *mâ* and a half for one (*who beats the*) gong; a quarter (*vêli*) for two sacred flower-garlands; seven *mâ* and a half, for three coatings (*of the god*) (*with sandal-paste*); three quarter (*vêli*) of land for 3 *uḻakku* of ghee daily at the rate of (*one*) *uḻakku* each time; a quarter (*vêli*) for (*sounding*) one *karaḍigai*; . . . . . for [singing] the *tiruppadiyam*.

# இணைப்பு-6

# திருவண்ணாமலை கல்வெட்டு

## No. 165.

(*A.R. No.* 574 *of* 1902).

ON A SLAB SET UP IN FRONT OF THE THOUSAND-PILLARED MANDAPA IN THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்தி [||*] ஸ்ரீமந்மஹாராசாதிஇராஜ இராசபரமெஸ்வரஞ
2 மூவராயரகண்ட அரியஇராயவிபாட அஷ்டதிக்கு-
3 இராயமனொபயங்கர பாஷெக்குதப்பு-
4 வராயரகண்ட பூறுவதெக்ஷிணபச்சிமசமு-
5 முத்திராதிபதி யமுனா இராச்சிய[ஸ்]தாபன-
6 சாரிய கெசபதிவிபாட ஸ்ரீவீரப்பிர-
7 தாப ஸ்ரீவீரகிஷ்ணதெவமஹாராயர் விசை-
8 ய(ா)நகரத்திலெ எழுந்தருளிஇருந்து
9 பூறுவதிக்குவிசையமாக எழுந்தருளி உ-
10 தையகிரிதுற்க்கம் கொண்டு இரவுத்தராய மஹா-
11 பாத்திரத்தையும் பி[டி]த்துக்கொண்டு அத்தங்கி
12 விணிக்கொண்டை வெலங்கொண்டை நாகாச்சு-
13 னிதுற்க்கம் தங்கெடக் கெதவாம் முதலாக ம-
14 லைதுற்க்கங்கள் ஒருதாடியாகக் கைக்கொண்-
15 டு கொண்டவிட்டில் துற்க்கத்தின்பெரிலெ இ-
16 [வரிலெ பெரி]யவிட்டு சறுவயிலக்கை பிடித்து-
17 த் துற்க்கம் கைக்கொண்டு பிறதாபருத்திரன்
18 கெசபதிராயன் குமார வீரபத்திராயன் கும-
19 ாரஅம்பிரபாத்திரன் மகன் நாகரிதெவ[ன்*] ராச-
20 சூர் மல்லுகானன் உத்தண்டகானன் சன்னி-
21 யால கசவாப[ா*]த்திர பூசலப்பாடி ராசிராசு ஸ்ரீநா-
22 தராசு இலக்ஷ்மிபதிராசு பச்சிம வாலசந்திற மஹாபா-
23 த்திரம் யிவர்கள்முதலான பாத்திற சாமந்தர்க(ள்)-
24 [ளை] பிராண[வு]டனெ பிடித்துக்கொண்டு யிவர்களு-
25 க்கு அ[ஹ]யஸ்தம் கொடுத்து தரணிகொட்டம் அம[ரெ*]-
26 சுரத்தில் துலாபுருஷமஹாதானம் செய்தருளித்
27 திரும்பி விசையநகரத்துக்கு எழுந்தருளி மீளக் [க]-
28 ளிங்கதெச திக்குவிசையமாக வெ[ப]சவாடைக்கு எழு-
29 ந்தருளி கொண்டபள்ளிதுற்க்கம் கொண்டு அந்த துற்-
30 கத்திலெ பிறகாச சிறச்சந்திற மஹாபாத்திர . . . .
31 மஹாபாத்திரம் பிஜிலிக்கானன் யிவர்கள் முதலான
32 பாத்திறங்க[ளை] சிவதுடனெ பிடித்துக்கொண்டு அ-
33 பையஸ்தம் கொடுத்து அனந்தகிரி உண்டிறகொண்ட
34 உருளக்கொண்ட அருவப்பள்ளி சலிப்பள்[ளி*] [அத்]-
35 திக்கொண்ட [க]ப்பலுவாயி நல்லங்கொண்ட . .
36 . . . . கனககிரி சங்கரகிரி . . . . . . .
37 . . . . . . . . . . . . . திறமல்[வி] கைக்கொண்டு
38 சிங்காத்திரி பொட்டுனூர்க்கு எழுந்தருளி அங்கெ செ-

Tiruvannamalai.

---

[1] Below this line are seen the words கங்கை கவேரியில் குராலபடிக செ.

39 யத்தம்பம் [நா]ட்டி [சிம்]ஹாத்தி . . . . . . . . [திரு]ம-
40 [பி] இராசமயெந்திருவரத்துக்கு எழுந்தருளி . .
41 . . தெவியார் சின்னாச்சிஅம்மன் திருமலைதெவிஅ[ம்]-
42 மன் யிவர்களும் மஹாதாநம் பண்ணி விசையந-
43 காத்துக்கு எழுந்தருளி ஸ்வஸ்தி ஸ்ரீ விசையாற்புத-
44 ய சாலிவாகனசகஸு ௲சாநம்அ-ல்மெல் செல்ல-
45 ாநின்ற தாதுஸு மகரநாயற்று பூறுவபக்ஷத்தில்
46 திரையொதெசியும் சொமவாரத்து நாள் ஸ்ரீகா[ள]-
47 ஹஸ்திக்கு வந்தருளி காளத்தி[நாத]னைச் செவித்து உ-
48 டையவற்கு நூ[ற்*]றுக்கால்மண்டபமும் பெரிய-
49 கொபுரமும் கட்டிவித்துஅருளி வெ-
50 . . . . . . . . . . . .
51 . . . . சமம . . . . .
52 . . . . . . . . . . . . . உடையார் திருவண்ணாம-
53 லை உடைய ந[ா*]யினாற்கும் நாச்சியார் [உ]ண்ணா-
54 முலைநாச்சியாற்கும் இராயர் கிஷ்ணராயமஹ-
55 ாராயர் தன்மமாகப் பண்ணுவித்த திருப்-
56 பணி ஆயிரக்கால்மண்டபம் இதுக்கு
57 முன்னாக வலந்தன் தெற்பைதிருநா-
58 ளுக்கு வெட்டின திருக்குளம் யிதுக்குத்
59 தண்ணி[ன்]வரத்து விழ வெட்டின திரும-
60 லைதெவிஅம்மன்சமுத்திரம் பதினொரு-
61 நிலைக் கொபுரம் எழாந்திருநாள் மண்-
62 டபம் விநாயகனுக்குப் பண்ணுவித்த
63 திருத்தெர் . . . . . . [திரு]வீதி வான-
64 வதரையன்சொழன்வாசல் கதவு கதவு-
65 கால் மெற்படி உத்தமசொழன திருவா-
66 சல்கால் கதவு மெற்படி பலகணிவாசல்
67 பொன்பூசினதும் யிந்த வாசல் முன்னா-
68 கமு[ம்] பத்திரமாத்திற் கொடி கொடிங்கை
69 தகடு பொன்பூசினதும் உண்ணாமுலை-
70 நாச்சியார்கொயில் [ச]டைபெருமாள்நயி-
71 னார் சன்னதிக்கு மெற்குவாசல்கால் கதவு

Tiruvanna-
malai.

Tiruvanna-
malai.

72 மெற்படி வெண்கலமும் வாசல்கால் க-
73 தவு மெற்படி பொன்பூசினதும் தூவி பொ-
74 ன்பூசினதும் நாச்சியார்கொயில் மட[ப்*]பள்-
75 ளிமுன் வெட்டின ஆராவமுதக்கிணறும் தி-
76 ருவாபரணம் கிருஷ்ணராயன்பதக்கம்
77 நாகாபரணம் பொன்நிற் சிலே வாகுபுரி
78 உத்தரியம் யிந்திற விமானம் வெள்-
79 ளி விந்திகை பொன்னின் [செகண்டி]கை-
80 க அ[ஸூர]தெவநயிறுக்கு வெள்ளித்-
81 தகடு முச்சிமெல் பொன்பூசினதும்
82 திருமஞ்[ச]னம் [எடுக்]கப் பண்ணுவி-
83 த்த வெள்ளிக்கு[டம்] கிருஷ்ணராயமஹாரா-
84 யர்சந்தியாக [சந்திராதித்த]வரையும்
85 நடக்கக் கட்டளையிட நாள் ஒன்று-
86 க்கு ஊற்க்காலால் அரிசி கு-ள
87 எண்ணெக்காப்பு உவ பழம் வ
88 . . . . . . . . . . .
89 கற்பூரம் [பல] இ பு-
90 ழுகு [பல] இ திரும-
91 ஞ்சனம் எடுப்ப-
92 ார் பெரியதிருப்-
93 பாட்டு ஒதுவார்
94 பெர் உ தெவரடி-
95 யார் சு . .
96 அதியயனம்
97 பெர் உ பல்லக்-
98 குச்செர்வை அ
99 த்தியயன பொ
100 உ [1]

# இணைப்பு-7
# தஞ்சாவூர் கல்வெட்டு

## No. 65. On the outside of the north enclosure.

This inscription records an order of king Râjarâjadêva, by which he assigned a daily allowance of paddy to each of forty-eight persons, whom he had appointed before the 29th year of his reign, in order to recite the *Tiruppadiyam* in the temple, and to two persons who had to accompany the others on drums. This statement is of considerable importance for the history of Tamil literature[7] as an unmistakable proof of the existence of the Śaiva hymns which go by the name of *padiyam* or *padiyam*, and which are collected in the *Dêvâram*, in the time of Râjarâja. The names of the fifty incumbents serve to corroborate this identification of the *Tiruppadiyam* with the *Dêvâram*, as part of them are derived from the names of the three authors of the *Dêvâram*,[8] *viz.*, Tirunânasambandan (paragraph 7) or Sambandan (10, 22, 34, 38, 42), Tirunâvukkaraiyan[9] (6, 12, 14, 19, 28, 43, 45), and Nambi-Ârûran (41, 44) or Ârûran (19, 22). The name of two other incumbents, Śirâlan (13, 15),[10] is derived from Śirâladêvar, one of the sixty-three Saiva devotees, who is referred to in No. 43, paragraph 19. A number of other names pre-supposes the existence of certain Śaiva temples which, without exception, are mentioned in the *Periyapurâṇam*. Among these are the temples at Tiruvâñjiyam (2), Ârûr (8) or Śrî-Ârûr (21),

Tiruvâymûr (30), Maṟaikkâḍu (41)- or Tirumaṟaikkâ[ḍu] (17), Aiyâṟu (46), and perhaps Tiruviḍaimarudûr (51). The name Veṇkâḍaṉ (16, 27, 29, 36, 40) is derived from Veṇkâḍu or Tiruveṇkâḍu, after which the mother of the saint Śirâḷadêvar was called Tiruveṇkâṭṭu-Naṅgai. The god at Chidambaram is alluded to by the names Ambalavaṉ (11), Ambalattâḍi (4, 47), Ambalakkûttaṉ (18), Kûttaṉ (20, 26, 29, 31, 49), Tillaikkûttaṉ (49), Tillaikkaraiśu (33), and Eḍuttapâdam (9, 24, 32).

The name Tiruveṇâval (3) is identical with *tiru-veṇ-ṇâval*, "the sacred white *jambû* tree" in the Śaiva temple on the island of Śrîraṅgam near Trichinopoly. This temple is now called Jambukêśvara, Tiruvâṇaikkâval[2] or (by the Post Office) Tiruvâṇaikkôyil. The first of these three names means "(the image of) Îśvara (*i.e.*, Śiva) (under) the *jambû* (tree)," and the two others are corruptions of the ancient name of the locality, *viz.*, Tiruvâṇaikkâ, "the sacred elephant-grove." The full designation of the god, as used in the Jambukêśvara inscriptions, is "the lord of the sacred elephant-grove (Tiruvâṇaikkâ), *alias* the lord of the three worlds, who is pleased to reside gladly under the shade of the sacred white *jambû* tree (*tiru-veṇ-ṇâval*)." This name and the modern name Jambukêśvara refer to an ancient legend, which is thus narrated in the *Periyapurâṇam* (p. 239 of the Madras edition of 1888):— "In a grove near the Chandratîrtha (*i.e.*, the Moon-tank) in the Chôḷa country, a *liṅga* of Śiva made its appearance under a white *jambû* tree (*veṇ-ṇâval*). This was daily worshipped by a white elephant. Therefore the place received the name of "the sacred elephant-grove" (Tiruvâṇaikkâ). Over the *liṅga*, a spider constructed a canopy, in order to prevent dry leaves from dropping on the *liṅga*. When the elephant saw the cobwebs, he tore them down, because he considered them out of place. The spider became angry, crawled into the trunk of the elephant and bit it. The animal dashed its trunk on the ground and died. So did the spider. In due course, the spider was reborn as the son of the Chôḷa king Śubhadêva and of his queen Kamalavatî. The boy received the name Kô-Śeṅgaṇṇâṉ[3] and inherited his father's kingdom. He possessed the faculty of remembering his former births and constructed a temple of Śiva near the white *jambû* tree in the sacred elephant-grove, where he, as a spider, had formerly worshipped the *liṅga*." A distinct allusion to this legend occurs in a Jambukêśvara inscription of the Pâṇḍya king Kô-Mâṟavarman, *alias* Kulaśêkharadêva, which mentions "the sacred street called after (the god) who transformed a spider into a Chôḷa (king)."[4] That the legend, and the Jambukêśvara temple itself, was in existence in about A.D. 1000, may be concluded from the subjoined inscription, in which the word *tiruve[ṇ]ṇâval* forms part of the name of one of the donees.

Of historical interest is the name Râjâdittaṉ (47), which appears to have been bestowed on its bearer in commemoration of Râjâditya, the Chôḷa contemporary of the Râshṭrakûṭa king Krishṇa III.[5]

TEXT.

[1.] ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] திருமகள் பொலப்பெருநிலச்செல்வி[யு]ந்தனக்கெயு[ரி]மை பூ[ண்]டமை மனக்கொ[ள்]க்காந்த[ளூ]ர்ச்சாலை கலமறுத்தரு[ளி வெ]ங்கை[நா]டு[ங்]கங்கபாடியுந்த[டி]கைப[ா]டியு[ம் நுள]ம்[ப]பாடியு[ங்கு]டமலைநாடுங்கொல்லமுங்க[லி]ங்[க].

மும் முரட்டெழில் சிங்களர் ஈழம[ண்]டலமு[ம்] இரட்டபாடி எழரை இலக்க-
மும் முன்னீர்ப்பழந்தீவு [ப]ன்னீராயிரமுந்தி[ண்]டிற[ல்] வென்றி[த்]த-

[2.] ண்டாற்கொண்ட [த]ன்னெழில் வள[ரு]ழியுளெல்லாயா[ண்]டுந்தொழுதக விளங்கும்
யாண்டெ செழியரைத்தெசு கொ[ள்] கொராஜகெஸரிவ[ந்ம]ரான ஸ்ரீராஜராஜ-
[தெ]வர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடை[ய]ார் ஸ்ரீராஜராஜீஸ்வரமு-
டையார்க்[குத்]திருப்பதியம் விண்[ணப்]பஞ்செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதெவர்
குடுத்த பிட[ா]ரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்க[ளி]லெ [நி]லையாய் உடுக்கை
வாசிப்பா-

[3.] ன் [ஒரு]வனும் இவர்களிலெ நிலையாய்க்கொட்டிமத்த[ள]ம் வாசிப்பான் ஒருவனும்
ஆக ஐம்பதின்மர்க்குப்பொரால் நிசதம் நெல்லு முக்குறு[ணி நிவ]ந்தமாய் ராஜ-
கெஸரியொடொக்கும் ஆடவ[ல்லானென்]னும் மரக்கால[ா]ல் உ[டை]டயார் உள்-
ளூர்ப்ப[ண்]டா[ரத்]தெய் பெறவும் இவர்[க]ளில் செ[த்]தார்க்கும் அறுதெசம்
பொனார்க்கு[ந்]தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப்பெ-
ற்று[த்]திருப்பதிய[ம் வி]ண்-

[4.] [ண]ப்பஞ்செ[ச]ய்[யவும் அவ்]வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யொக்யரி
அ[ல்]லாது விடில் யொக்யரா[யி]ருப்[பா]ரை ஆளிட்டுத்திருப்ப[தி]யம் விண்ணப்-
பஞ்செய்வித்து அந்நெல்லுப்பெறவும் அவ்வவர்க்[கு அடு]த்த முறை கடவாரின்றி-
யொழி[யி]ல் அந்த [நியா]யத்தாரெ யொக்யரா[யி]ருப்பாரை[த்தி]ரு[ப்]பதியம்
வி[ண்]ணப்பஞ்செய்ய இட்டு இட்ட அவனெ அவ்வவர் பெறும்படி நெல்லுப்-
பெ[ப]றவும் ஆக இப்படி [உ]டையார் ஸ்ரீரா-

[5.] ஜ[ரா]ஜ[தெ]வர் [திருவாய்] மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது ||— [௧*]
பாலன் திருவாஞ்சி[ய]த்தடிகள[ான] ராஜராஜப்பிச்சனான [1]வதாஸிவனுக்கு நிசதம்
நெல்லு முக்குறுணி ||— [௨*] திருவெணாவல் செம்பொற்[சொதியா]ன தக்ஷி-
ணமெருவிடங்க[ப்]பிச்சனான ஞாநஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||—
[௩*] பட்டாலகன் [அம்]பலத்தாடியான [2]நெத்ரஸிவனுக்கு நிச[த]ம் நெல்லு
முக்குறுணி ||— [௪*] பட்டாலகன் சிறுமை[ட]க்கழலான

[6.] [வாமெ]லூஸிவனுக்கு [நி]சதம் நெல்லு முக்குறுணி ||— [௫*] பொற்சுவரன்
தி[ரு]நாவுக்கரையனான வாமெலூஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||—
[௬*] மாதெ[வ]ன் திருஞானசம்பந்தனான ஞாநஸிவனு[க்கு நிச]தம் நெ[ல்லு
முக்குறுணி] ||— [௭*] கயிலாயன் ஆரூரான யஜ்ஞஸிவனுக்கு [நி]சதம் நெ[ந]-
ல்லு மு[க்கு]று[ணி ||—] [௮*] செ[ட்]டி எடுத்தப[ாதமா]ன [2]கவஸ்ஸிவனுக்கு
நிசதம் நெல்லு மு[க்குறு]ணி ||— [௯*] இராமன் சம்பந்தனான ஸத்யஸிவ-
னுக்கு நிசதம் நெல்-

[7.] லு முக்குறுணி ||— [௰*] அம்ப[ல]வன் [ப]த்[த]ர்க[ள்] . . . [ட]னான
வாமஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௰௧*] கம்[ப]ன் திருநாவுக்க-
ரையனான [3]வதாஸிவனுக்கு நிசத[ம் நெல்லு முக்குறு]ணி [||—] [௰௨*] நக்-
கன் சீராளனான வாமஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௰௩*]
[அ]ப்பி [தி]ருநாவுக்கரையனான தெஜஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி
||— [௰௪*] சிவக்கொ[ழு]ந்து சீராளனான யஜ்ஞஸிவனுக்-

[8.] கு நிசதம் நெ[ந]ல்லு முக்குறுணி ||— [௰௫*] ஐஞ்ஞூ[ற்று]வன் வெண்காடனான
ஸத்யஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௰௬*] அரையன் அ[ணு]-
க்கனான திருமறைக்[கா] . . . . [னான யஜ்ஞஸி]வனுக்கு நிசதம் நெல்லு
முக்குறுணி ||— [௰௭*] அரையன் அம்[பல]க்கூ[த்]தனான [4]ஓம்[கா]ர[ஸிவனு]க்கு

நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௰௮*] ஆரூரன் திருநாவுக்கரை[ய]னான
ஞாநஶிவனுக்கு நிசதம் நெ-
[9.] ல்லு முக்கு[றுணி] ||— [௰௯*] கூத்தன் மழலைச்சிலம்[ப]ான வாமதேவஶிவனுக்கு
நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௨௰*] ஐஞ்ஞூற்றுவன் சீய[ா]ரூரான த[த்வ]-
[ப்ர*]ஷ[ஶி]வனுக்கு நிசதம் நெல்லு மு[க்கு]று[ணி] ||— [௨௧*] [சம்ப]ந்[த]ன்
ஆரூரனான வாமஶிவனுக்கு நிசத[ம்] நெல்லு மு[க்]குறு[ணி] ||— [௨௨*]
அரையன் பிச்[சனா]ன யஜ்ஞஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||—
[௨௩*] கா[ஶ்யப]ன் எடுத்த[பா]தப்பிச்சனான உமாபதிஶிவனுக்கு [நி]சதம்
[10.] நெல்லு முக்குறுணி ||— [௨௪*] ஸர்வஜ்ஞஶ்ரீ [ஆ]ச்சனான யஜ்ஞ[ஶி]வனுக்கு
நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௨௫*] கூத்தன் அமரபுஜங்கஶ்ரீ[1] ஆன
ஸத்ய[ஶி]வனுக்கு நிசதம் நெ[ல்லு முக்]கு[றுணி] ||— [௨௬*] . . வெண்-
[க]ா[ட]னான கெ[வ]ாமஶி[வ]னுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௨௭*]
மாதேவன் திருநாவுக்கரை[யனா]ன விஜ்ஞாநஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறு-
ணி ||— [௨௮*] கூத்த[ன்] வெண்காட[னா]ன உமா[பதி]ஶிவனுக்[கு] நிசத[ம்]
[11.] [நெ]ல்லு முக்குறுணி ||— [௨௯*] ஐஞ்ஞூற்றுவன் திரு[வா]ய்[மூ]ரான கவொ-
[ாமஶிவனு]க்கு நிசத[ம் நெ]ல்லு முக்குறுணி ||— [௩௰*] திருமலை கூத்தனா-
ன வாமஶிவனுக்கு [நிச]தம் நெல்லு [முக்]குறுணி ||— [௩௧*] ஐஞ்ஞூற்று-
வன் எடுத்தபாதமான யஜ்ஞஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||—
[௩௨*] அரையன் தி[ல்]லைக்கரைசான வாமதேவஶி[வ]னுக்கு நிசதம் நெல்லு முக்-
குறுணி ||— [௩௩*] கா[ளி] சம்ப[ந்]தனா[ன] யஜ்ஞஶி[வனு]க்கு நிசதம் நெல்-
லு முக்குறு[ணி] ||— [௩௪*] கா[ப]ா-
[12.] விகவாலியான ஞா[ந]ஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௩௫*] [வெ]-
ணகாடன் கலேஸ்ரீவா[யமா]ன உமாபதி[ஶி]வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி
||— [௩௬*] 'சிவனனந்தனா[ன] யொமஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறு[ணி]
||— [௩௭*] சிவ[க்கொ]ழு[ந்து] சம்பந்தனான கவொாமஶிவனு[க்]கு நிசதம்
நெல்லு முக்குறு[ணி] ||— [௩௮*] [இராமன் கணவ]தியான ஞாநஶிவனுக்கு
நிசதம் நெல்லு முக்குறு[ணி] ||— [௩௯*] [பி]ச்சன் வெ[ண்]காடனான
கெ[வ]ாரா[ஶி]-
[13.] வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௪௰*] மறைக்காடன் நம்பி ஆரூர-
னான ஞாந[ஶிவ]னு[க்]கு [நி]சதம் நெல்லு முக்குறுணி ||— [௪௧*] சொ-
[ம]ன் சம்பந்தனான ஞா[ந]ஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௪௨*]
சத்தி திருந[ா]வுக்கரையனான [ஶ்ரீ]ஞாந[ஶி]வனுக்கு நி[ச]தம் நெ[ல்]லு முக்கு-
றுணி ||— [௪௩*] பெ[ா]ம்சுவர[ன்] நம்[பி]யா[ரூரனா]ன யஜ்ஞஶிவனுக்கு நிச-
தம் நெல்லு முக்குறு[ணி] ||— [௪௪*] ஆச்சன் திருநாவு[க்]கரையனான
நேத்ரஶி[வ]னுக்கு நிச[த]ம்
[14.] நெல்லு முக்குறுணி ||— [௪௫*] ஐயாறன் பெண்ணொர்பாகனான ஹ்ருத[யஶி]வ-
னு[க்கு நி]சதம் நெல்லு முக்குறுணி ||— [௪௬*] ராஜாதி[த்ய]ஶ்ரீ அம்பலத்தா-
டியான ஶிவாஶி[வ]னுக்கு [நி]சதம் நெல்லு முக்குறுணி ||— [௪௭*] [செ]ல்வ-
ன் க[ண]வதி தெ[ம்]பனா[ன யஜ்ஞஶி]வனுக்கு நிசதம் நெல்[லு மு]க்குறுணி ||—
[௪௮*] கூத்[த]ன் தில்லைக்கூத்தனான ஞாநஶிவனு[க்கு] நிசதம் நெல்லு முக்கு-
றுணி ||— [௪௯*] உடுக்கை வாசிக்கு[ம்] தெ[ஜூ]தைகொமபுறத்து [த]த்தயக்ருஷேவி-
[15.] த்தஶ்ரீ மகன் ஸூர்யதேவக்ருஷேவித்த[னா]ன ஆ . விடங்கஉடுக்கைவிஜாதிரனான
சொமஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி ||— [௫௰*] கொட்டிமத்த[ள]ம்
வாசிக்குங்குணப்பு[க]ழ் மருதனான ஶிவாஶிவனுக்கு நிசதம் நெல்லு முக்கு-

TRANSLATION.

1. Hail ! Prosperity ! Until the twenty-ninth year (*of the reign*) of Kô-Râjakêsari-varman, *alias* Śrî-Râjarâjadêva, who, in his life of growing strength, during which,— (*in*) the belief that, as well as the goddess of fortune, the goddess of the great earth had become his wife,— he was pleased to destroy the ships (*at*) Kândaḷûr-Śâlai, and conquered by his army, which was victorious in great battles, Vêṅgai-nâḍu, Gaṅga-pâḍi, Taḍigai-pâḍi, Nuḷamba-pâḍi, Kuḍamalai-nâḍu, Kollam, Kaliṅgam, Îḷa-maṇḍalam, (*which was the country*) of the Śiṅgaḷas who possessed rough strength, the seven and a half *lakshas* of Iraṭṭa-pâḍi, and twelve thousand ancient islands of the sea,— deprived the Śeḷiyas of (*their*) splendour at the very moment when (*they were*) resplendent (*to such a degree*) that (*they were*) worthy to be worshipped everywhere ;— the lord Śrî-Râjarâjadêva had given, — for reciting the *Tiruppadiyam* before the lord of the Śrî-Râjarâjêśvara (*temple*),— forty-eight musicians (*Piḍârar*), one person who should constantly beat the small drum[1] in their company, and one person who should constantly beat the big drum (*koṭṭi-mattaḷam*)[2] in their company. These fifty persons were to receive from the city treasury of the lord a daily allowance (*nibandha*) of three *kuṟuṇi* of paddy each, (*measured*) by the *marakkâl* called (*after*) Âḍavallâṉ, which is equal to a *râjakêsari*. Instead of those among these persons, who would die or emigrate,[3] the nearest relations of such persons were to receive that paddy and to recite the *Tiruppadiyam*. If the nearest relations of such persons were not qualified themselves, they were to select (*other*) qualified persons, to let (*these*) recite the *Tiruppadiyam*, and to receive that paddy. If there were no near relations to such persons, the (*other*) incumbents of such appointments[4] were to select qualified persons for reciting the *Tiruppadiyam*, and the person selected was to receive the paddy in the same way, as that person (*whom he represented*), had received it. Accordingly, (*the names of these fifty persons*) were engraved on stone, as the lord Śrî-Râjarâjadêva had been pleased to order :—

2. To Pâlaṉ (*i.e.*, Bâla) Tiruvâñji[ya]ttaḍigaḷ,[5] *alias* Râjarâja-Pichchaṉ, *alias* Sadâśivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

3. To Tiruveṇâval Śembor[chôdi], *alias* Dakshiṇa-Mêru-Viṭaṅka-Pichchaṉ, *alias* Ñâna-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

4. To Paṭṭâlagaṉ[6] [Am]balattâḍi,[7] *alias* Manôtma-Śivaṉ,[8] three *kuṟuṇi* of paddy per day.

5. To Paṭṭâlagaṉ Śîru[ḍ]aikkaṟal,[9] *alias* Pûrva-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

6. To Poṟchuvaraṉ Tirunâvukkaraiyaṉ, *alias* Pûrva-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

7. To Mâdêvaṉ (*i.e.*, Mahâdêva) Tirunâṉaśambandaṉ, *alias* Ñâna-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

8. To Kayilâyaṉ (*i.e.*, Kailâsa) Ârûr, *alias* Dharma-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

9. To [Śeṭ]ṭi Eḍuttap[âdam],[1] *alias* Kavacha-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

10. To Irâmaṉ (*i.e.*, Râma) Śambandaṉ, *alias* Satya-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

11. To Amba[la]vaṉ-[Pa]t[ta]rga[ḷ][2] . . . . . *alias* Vâma-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

12. To Kam[b]aṉ Tirunâvukkaraiyaṉ, *alias* Sadâśivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

13. To Nakkaṉ (*i.e.*, Nagna) Śirâḷaṉ, *alias* Vâma-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

14. To [A]ppi Tirunâvukkaraiyaṉ, *alias* Nêtra-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

15. To Śivakko[ṟu]ndu[3] Śirâḷaṉ, *alias* Dharma-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

16. To Aiññûṟṟuvaṉ Veṇkâḍaṉ, *alias* Satva-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

17. To Araiyaṉ A[ṉu]kkaṉ, *alias* Tirumaṟaikkâ. . . . . [*alias* Dharma-Śi]vaṉ, three *kuṟuṇi* of paddy per day.

18. To Araiyaṉ Am[bala]kkûttaṉ,[4] *alias* Ôm[kâ]ra-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

19. To Ârûraṉ Tirunâvukkaraiyaṉ, *alias* Ñâna-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

20. To Kûttaṉ[5] Maṟalaichchilam[b]u, *alias* Pûrva-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

21. To Aiññûṟṟuvaṉ Śîy[â]rûr,[6] *alias* Ta[tpuru]sha-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

22. To [Śamba]ndaṉ Ârûraṉ, *alias* Vâma-Śivaṉ, three *kuṟuṇi* of paddy per day.

